| This is a presentation of Bhagavadgita as translated by poet Bharathiar in Tamil and philosopher-Statesman Dr. Radhakrishnan in English. The Tamil part of the presentation is from Madurai Project. Many thanks to the project. | |
|---|---|
| Bhagavadgita Madurai Project by Subramania Bharathi | Bhagavadgita Translation by Dr. Radhakrishnan |

## பகவத் கீதை

## பாரதியாரின் முன்னுரை

1.

புத்தியிலே சார்பு எய்தியவன், இங்கு நற்செய்கை, தீச்செய்கை இரண்டையுந் துறந்துவிடுகின்றான். ஆதலால் யோக நெறியிலே பொருந்துக, யோகம் செயல்களிலே திறமையானது (கீதை, 2-ஆம் அத்தியாயம், 50-ஆம் சுலோகம்)

இ௸தே கீதையில் பகவான் செய்யும் உபதேசத்துக் கெல்லாம் அடிப்படையாம். புத்தியிலே சார்பு எய்தலாவது, அறிவை முற்றிலுந் தெளிவாக மாசுமறுவின்றி வைத்திருத்தல், தெளிந்த புத்தியே மேற்படி சுலோகத்திலே புத்தி சொல்லப்படுகிறது. அறிவைத் தெளிவாக நிறத்திக் கொள்ளுதலாவது யாதென்றால், கவலை நினைப்புகளும் அவற்றுக்குக்காதாரமான பாவ நினைப்புகளுமின்றி அறிவை இயற்கை நிலைபெறத் திருத்துதல்.

"நீங்கள் குழந்தைகளைப் போலானாலன்றி, மோக்ஷ ராஜ்யத்தை எய்த மாட்டீர்கள்" என்று இயேசு கிறிஸ்து சொல்லியதும் இதே கருத்துக் கொண்டுதான்.

'குழந்தைகளைப் போலாய்விடுங்கள்' என்றால், உங்களுடைய லௌகிக அனுபவங்களை யெல்லாம் மறந்து விடுங்கள்; நீங்கள் படித்த படிப்பையெல்லாம் இழந்துவிடுங்கள்; மறுபடி சிசுக்களைக் போலவே தாய்ப்பால் குடிக்கவும், மலழைச் சொற்கள் பேசவுந் தொடங்குங்கள்' என்பது கொள்கையன்று. 'ஹிருதயத்தைக்

குழந்தைகளின் ஹிருதயம்போல நிஷ்களங்கமாகவும் சுத்தமாகவும் வைத்துக் கொள்ளுங்கள்' என்பது கருத்து.

ஹிருதயம் தௌஒந்தாலன்றி புத்தி தௌஒயாது. ஹிருதயத்தில் பரிபூரணமான சுத்த நிலையேற்படும் வரை, புத்தி இடையிடேயே தௌஒந்தாலும், மீட்டு மீட்டும் குழம்பிப் போய்விடும்.

ஹிருதயம் சுத்தமானால், தௌஒந்த புத்தி தோன்றும். பகவான் சொல்லுகிறார் :- 'அந்த அறிவுத் தௌஒவிலே நிலைபெற்று நில், அர்ஜுனா' என. அப்போது நீ செய்யும் செய்கை யாதாயினும் அது நற்செய்கையாகும். நீ ஒன்றும் செய்யாதே மனம் போனபடியிருப்பின் அஃதும் நன்றாம். நீ நற்செய்கை, தீச் செய்கை என்ற பேதத்தை மறந்து உனக்கு இஷ்டப்படி எது வேண்டுமாயினும் செய்யலாம். ஏனென்றால், நீ செய்வதெல்லாம் நன்றாகவே முடியும், உனக்குப் புத்தி தௌஒந்து விட்டதன்றோ? புத்தி தௌஒவுற்ற இடத்தே, உனக்குத் தீயன செய்தல் ஸாத்தியப் படாது. ஆதலால், நீ நல்லது தீயது கருதாமல் மனம் போனபடியெல்லாம் வேலை செய்யலாம்.

இனி, இங்ஙனம் உரை கொள்ளாதபடி, நற்செய்கை, தீச்செய்கை, அதாவது எல்லாவிதமான செய்கையையுந் துறந்து விட்டு, 'அர்ஜுனா, நீ எப்போதும், தூங்கிக்கொண்டேயிரு' என்று கடவுள் உபதேசம் பண்ணியதாகக் கருதுதல் வெறும் மடமையைத் தவிர வேறொன்றுமில்லை.

ஏனென்றால், கடவுளே மேலே மூன்றாம் அத்தியாத்தில் பின்வருமாறு சொல்லுகிறார் :- 'மேலும், எவனும் ஒரு க்ஷணமேனும் செய்கையின்றிருந்தல் இயலாது, எல்லா உயிர்களும், இயற்கையில் தோன்றும் குணங்களால் தமது வசமின்றியே தொழிலில் பூட்டப்படுகின்றன' என.

ஆதலால், மனிதன் தொழில் செய்துதான் தீரவேண்டும். எப்போதும் தூங்கக் கும்பகர்ணனாலே கூட இயலாது. அவனுக்கும் கூட ஆறு மாத காலம் விழிப்பு உண்டு.

ஆனால், நீ தொழில் செய்யுமிடத்தே, அதில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களுக்கு மனமுடைந்து, ஓயாமல் துன்பப்பட்டுக் கொண்டே தொழில் செய்யும் உலகத்தாரைப் போல தொழில் செய்யாதே. ஸ்ரீ பகவான் சொல்லுகிறான் : 'அர்ஜுனா, உனக்குத் தொழில் செய்யத்தான் அதிகாரமுண்டு, பயன்களில் உனக்கு எவ்வித அதிகாரமும் எப்போதுமில்லை' என.

ஆதலால், கடவுள் சொல்லுகிறார் :- 'கர்மத்தின் பயனிலே பற்றுதலின்றித் தான் செய்ய வேண்டிய தொழிலை எவன் செய்கிறானோ, அவனே துறவி, அவனே யோகி' என்று.

அறிவுத் தெளஔவைத் தவறவிடாதே. பின் ஓயாமல் தொழில் செய்து கொண்டிரு. நீ எது செய்தாலும் அது நல்லதாகவே முடியும். நீ சும்மா இருந்தாலும், அப்போது உன் மனம் தனக்குத்தான் ஏதேனும் நன்மை செய்து கொண்டேயிருக்கும். உடம்பினால் செய்யப்படும் தொழில் மாத்திரமே தொழிலன்று. மனத்தால் செய்யப்படும்
தொழிலும் தொழிலேயாம். ஜபம் தொழில் இல்லையா? படிப்பு தொழில் இல்லையா? மனனம் தொழில் இல்லையா?
சாஸ்திரங்களெல்லாம், கவிதைகளெல்லாம்,
நாடகங்களெல்லாம், சட்டங்களெல்லாம், வேதங்களெல்லாம்,
புராணங்களெல்லாம், கதைககெளல்லாம், காவியங்களெல்லாம்
தொழில்கள் அல்லவா?
இவையெல்லாம் உடம்பாற் செய்வதன்றி மனத்தாற் செய்யப் படுவன அன்றோ?

அறிவுத் தெளஔவைக் கலங்க விடாதே.

அப்பால், யோகம் பண்ணு. எதன் பொருட்டெனில், யோகமே செய்கையில் திறகையாவது? என்று ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லுகிறார்.

தொழிலுக்குத் தன்னைத் தகுதியுடையவனாகச் செய்து கொள்வதே யோகம் எனப்படும்.

யோகமாவது சமத்துவம். 'ஸமத்வம் யோக உச்யதே' அதாவது, பிறிதொரு பொருளைக் கவனிக்குமிடத்து அப்போது மனத்தில் எவ்விதமான சஞ்சலமேனும் சலிப்பேனும் பயமேனும் இன்றி, அதை ஆழ்த்து, மனம் முழுவதையும் அதனுடன் லயப்படுத்திக் கவனிப்பதாகிய பயிற்சி.

நீ ஒரு பொருளுடன் உறவாடும்போது, உன் மனம் முழுதும் அப்பொருளின் வடிவாக மாறிவிட வேண்டும். அப்போதுதான் அந்தப் பொருளை நீ நன்றாக அறிந்தவனாவாய்.

'யோகஸ்த: குரு கர்மாணி' என்று கடவுள் சொல்லுகிறார். 'யோகத்தில் நின்று தொழில்களைச் செய்' என.

யோகி தன் அறிவைக் கடவுளின் அறிவுபோல விசாலப்படுத்திக் கொள்ளுதல் இயலும். ஏனென்றால், ஊன்றிக் கவனிக்கும் வழக்கும் அவனுக்குத் தௌஒவாக அர்த்தமாய் விடுகிறது. ஆதலால் அவனுடைய அறிவு தெய்வீகமான விசாலத் தன்மை பெற்று விளங்குகிறது. அவனுடைய அறிவுக்கு வரம்பே கிடையாது.

எனவே, அவன் எங்கும் கடவுள் இருப்பதை காண்கிறான்.

## ஸ்ரீமத் பகவத் கீதை: முழு உரை

## முதல் அத்தியாயம் : அர்ஜுன விஷாத யோகம்

குருக்ஷேத்திரப் போர் நடக்கையிலே, கண்ணில்லாத திருதராஷ்டிரராஜன், தான் அங்கு செல்லக் கூடாமையால் அஸ்தினாபுரத்தில் தனதரண்மனையில் இருந்து கொண்டே போர்க்களத்தில் நடக்கும் செய்திகளைத் தனக்குச் சொல்லும்படி சஞ்ஜயன் என்ற மந்திரியை நியமிக்கிறான். வேத வியாசரருளால் ஞானதிருஷ்டி பெற்றவனாய் சஞ்ஜயன் போர்க்களத்துச் செய்திகளை திருதராஷ்டிரனுக்குச் சொல்லுகிறான். கண்ணனுக்கும் பார்த்தனுக்கும் போர்த் தொடக்கத்தில் நிகழ்ந்த சம்பாஷணையை சஞ்ஜயன் கூறுவதாகச் சமைக்கப்பட்ட பகவத் கீதைக்கு இந்த முதலத்தியாயம் பாயிரமாகக் கருதத் தகும். திருதராஷ்டிரன் சொல்லுகிறான்:

| | |
|---|---|
| 1. சஞ்ஜயா, அறநிலமாகிய குரு நிலத்தில் போர்செய்ய விரும்பித் திரண்ட நம்மவர்களும் பாண்டவரும் என்ன செய்தனர்? சஞ்ஜயன் சொல்லுகிறான்: | (1.1) In the field of righteousness, the field of the Kurus, when my people and the sons of Pāṇḍu had gathered together, eager for battle, what did they do, O Saṁjaya |
| 2. அப்போது துரியோதனராஜன் அணிவகுத்து நின்ற பாண்டவர் படையைப் பார்த்துவிட்டு, ஆசாரிய (துரோண)னிடம் போய் (பின் வரும்) வார்த்தை சொல்லலாயினன். | (1.2) Then, Duryodhana the prince, having seen the army of the Pāṇḍavas drawn up in battle order, approached his teacher and spoke this word: |
| 3. "குருவே, துருபதன் மகனும் நின் சீடனுமாகிய நிபுணனால் வகுப்புற்ற இப்பெரிய பாண்டவப் படையைப் பார்!" | (1.3) Behold, 0 Teacher, this mighty army of the sons of Pāṇḍu organized by thy wise pupil, the son of Drupada.[1] |
| 4. இங்கு சூரரும் பெரிய வில்லாளிகளும் போரில் வீமனையும் பார்த்தனையும் நிகர்த்தவருமாகிய பலர் இருக்கிறார்கள் -- யுயுதானன்; விராடன்; மகாரதனாகிய துருபதன்; | (1.4) Here are heroes, great bowmen equal in battle to Bhīma and Arjuna=-Yuyudhāna, Virāṭa and Drupada, a mighty warrior.[1] |
| 5. திருஷ்டகேது; சேகிதானன்; வீரியமுடைய காசிராஜன்; புருஜித்; குந்தி போஜன்; மனிதரேறாகிய சைவியன்; | (1.5) Dhṛṣṭaketu, Cekitāna and the valiant King of Kāśi, also Purujit, Kuntibhoja and Śaibya the foremost of men.[1] |

| | |
|---|---|
| 6. வலிமை மிக்க யுதாமந்யு; உத்தமௌஜா என்ற வீரன்; சுபத்திரை மகன்; திரௌபதி மக்கள்; எல்லோருமே மகா ரதர். | (1.6) Yudhāmanyu, the strong and Uttamauja, the brave; and also the son of Subhadrā and sons of Draupadī, all of them great warriors. |
| 7. இனி, எனது படைக்கு நாயகராய், நம்முள்ளே சிறந்தோரையுந் தெரிந்து கொள். இருபிறப்பாளரில் மேம்பட்டவனே, குறிப்பின் பொருட்டாக அவர்களை உனக்குச் சொல்லுகிறேன். | (1.7) Know also, O Best of the twiceborn, the leaders of my army, those who are most distinguished among us. I will name them now for thy information. |
| 8. நீ; பீஷ்மன், கர்ணன்; பொருநர் கூட்டத்தை வெல்வோனாகிய கிருபன்; அசுவத்தாமன்; விகர்ணன், சோமத்தன் மகன்; | (1.8) Thyself and Bhīṣma and Karṇa and Kṛpa, ever victorious in battle; Asvatthāman, Vikarṇa, and also the son of Somadatta.[1] |
| 9. இன்னும் வேறு பல சூரர்; என் பொருட்டு வாழ்க்கையை துறந்தோர்; பலவிதமான ஆயுதங்களும் அம்புகளுமுடையோர்; எல்லோருமே போரில் நிபுணர். | (1.9) And many other heroes who have risked their lives for my sake. They are armed with many kinds of weapons and are all well skilled in war. |
| 10. (எனினும்) பீஷ்மனால் காக்கப்படும் நமது படை (கண்ணுக்கு) நிறைந்திருக்கவில்லை. வீமனால் காக்கப்படும் இவர்களுடைய படையோ நிறைந்திருக்கிறது. | (1.10) Unlimited is this army of ours which is guarded by Bhīṣma, while that army of theirs which is guarded by Bhīma is limited. |

| | |
|---|---|
| 11. நீங்களனைவரும் வகுப்புகளின்படி எல்லா இடங்களிலும் நின்றுகொண்டு பீஷ்மனையே காக்கக் கடவீர்! | (1.11) Therefore do ye all support Bhīṣma, standing firm in all the fronts, in your respective ranks. |
| 12. (அப்போது) துரியோதனனுக்கு மகிழ்ச்சி விளைவிக்குமாறு கீர்த்திமிக்க கௌரவர் கிழவனாகிய பாட்டன் உயர்ந்த குரலில் சிங்கநாதம் புரிந்து சங்கையூதினான். | (1.I2) In order to cheer him up the aged kuru, his valiant grandsire roared aloud like a lion and blew his conch. |
| 13. அப்பால், சங்குகளும், பேரிகைகளும், தம்பட்டங்களும், பறைகளும், கொம்புகளும் திடீரென ஒலித்தன. அஃது பேரோசையாயிற்று. | (1.I3) Then conches and kettledrums, tabors and drums and horns suddenly were struck and the noise was tumultuous. |
| 14. பின்பு வெள்ளைக் குதிரைகள் பூட்டிய பெருந்தேரில் நின்ற மாதவனும் பார்த்தனும் (தம்முடைய) தேவச்சங்குகளை யூதினர். | (1.I4) When stationed in their great chariot, yoked to white horses, Kṛṣṇa and Arjuna blew their celestial conches. |
| 15. கண்ணன் பாஞ்ஜசன்யத்தை யூதினான். வேத தத்தம் என்ற சங்கை தனஞ்ஜெயன் ஒலித்தான்; அஞ்சுதற்குரிய செயல்களையுடைய ஓநாய் | (1.15) Kṛṣṇa blew his Pāñcajanya and Arjuna his Devadatta and Bhīma of terrific deeds blew his mighty conch, Pauṇḍra. |

| | |
|---|---|
| வயிற்று வீமன் பௌண்ட்ரம் என்ற பெருஞ்சங்கை யூதினான். | |
| 16. குந்தி மகனாகிய யுதிஷ்டிரராஜன் அநந்த விஜயன் என்ற சங்கையும், நகுலனும் சகதேவனும் (முறையே) சுகோஷம், மணிபுஷ்பகம் என்ற சங்குகளையும் ஊதினர். | (1.I6) Prince Yudhisthira,[1] the son of Kuntī, blew his Anantavijaya and Nakula and Sahadeva blew their Sughoṣa and Maṇipuṣpaka. |
| 17. வில்லாளிகளில் மிகச் சிறந்த காசிராஜனும், மகாரதனாகிய சிகண்டியும், திருஷ்டத்யும்நனும்,விராட னும், வெல்லப்படாத ஸாத்யகியும், | (1.I7) And the king of Kāśi, the Chief of archers, Śikhaṇḍin, the great warrior, Dhṛṣṭadyumna and Virāṭa and the invincible Sātyaki. |
| 18. துருபதனும், துரோபதை மக்களும், பெருந்தோளுடையவனாகிய சுபத்திரை மகனும் தனித்தனியே தத்தம் சங்குகளை ஒலித்தனர், *பூமிக்குத் தலைவனே! (*இங்கு பூமிக்குத் தலைவனென்று திருதராஷ்டிரனைக் கதை சொல்லி வரும் சஞ்ஜயன் விளிக்கிறான்) | (1.18) Drupada and the sons of Draupadī, O Lord of earth and the strong-armed son of Subhadrā, on all sides blew their respective conches. |
| 19. அந்தப் பெருமுழக்கம் வானையும் மண்ணையும் உடனொலிக்கச் செய்வதாய் திருதராஷ்டிரக் | (1.I9) The tumultuous uproar resounding through earth and sky rent the hearts of Dhṛtarāṣṭra's sons. |

| | |
|---|---|
| கூட்டத்தாரின் நெஞ்சுகளைப் பிளந்தது. | |
| 20. அப்பால், (இரு திறத்தும்) அம்புகள் பறக்கத் தலைப்பட்டன. அப்போது குரங்குக் கொடியுயர்த்தி பார்த்தன் திருதராஷ்டிரக் கூட்டத்தாரை நோக்கி வில்லை யேந்திக் கொண்டு, கண்ணனைப் பார்த்துச் சொல்லுகிறான். அர்ஜுனன் சொல்லுகிறான்: | (1.20) Then Arjuna, whose banner bore the crest of Hanumān, looked at the sons of Dhṛtarāṣṭra drawn up in battle order; and as the flight of missiles (almost) started, he took up his bow. |
| 21. "அச்சுதா! படைகளிரண்டுக்கும் நடுவே என் தேரைக் கொண்டு நிறுத்துக!" என்று. (கேளாய் திருதராஷ்டிர ராஜனே!)" | (1.2l) And, O Lord of earth, he spoke this word to Hṛṣīkeśa (Kṛṣṇa): Draw up my chariot, O Acyuta (Kṛṣṇa), between the two armies. |
| 22. "சமரை விரும்பி நிற்கும் இவர்களை நான் பார்க்க வேண்டும். இந்தப் போர்த் தொடக்கத்தில் என்னோடு போர் செய்யக் கடவோர் யார்? | (1.22) So that I may observe these men standing, eager for battle, with whom I have to contend in this strife of war. |
| 23. கெட்ட மதிகொண்ட துரியோதனனுக்குப் பிரீதி செய்யும் வண்ணம், இங்கு போர் செய்யத் திரண்டு நிற்போரை நான் காணவேண்டும்" என்றான். சஞ்ஜயன் சொல்லிக் கொண்டு வருகிறான்: | (1.23) I wish to look at those who are assembled here, ready to fight and eager to achieve in battle what is dear to the evil-minded son of Dhṛtarāṣṭra. |

| | |
|---|---|
| 24. (கேளாய்) பரத நாட்டரசே, இங்ஙனம் பார்த்தனுரைத்தது கேட்ட கண்ணன் மிகவும் மேன்மை கொண்ட அத்தேரை இரண்டு படைகளுக்குமிடையே கொண்டு நிறுத்தினான். | (1.24) Thus addressed by Guḍākeśa (Arjuna), Hṛṣīkeśa (Kṛṣṇa) drew up that best of chariots, O Bharata (Dhṛtarāṣṭra) between the two armies. |
| 25. பீஷ்மனுக்கும் துரோணனுக்கும் மற்றெல்லா வேந்தருக்குமெதிரே தேரை நிறுத்திக் கொண்டு, "பார்த்தா! இங்கு கூடி நிற்கும் கௌரவரைப் பார்!" என்றான். | (1.25) In front of Bhīṣma, Droṇa and all the chiefs he said: "Behold, O Pārtha (Arjuna), these Kurus assembled (here)." |
| 26. அங்கு பார்த்தன் தன்னுடைய தந்தையரும், பாட்டன்மாரும், குருக்களும், மாதுலரும், அண்ணன் தம்பிகளும், மக்களும், பேரரும், தோழர்களும் நிற்பது கண்டான். | (1.26) There saw Arjuna standing fathers and grandfathers, teachers, uncles, brothers, sons and grandsons as also companions. |
| 27. அங்ஙனமே மாமன்மாரும், நண்பர்களும், உறவினரெல்லாரும் இரண்டு படைகளிலும் நிற்கக் கண்டு, குந்தி மகனாகிய பார்த்தன் -- மிகவும் இரக்கமுற்றவனாய்த் | (1.27) And also fathers-in-law and friends in both the armies. When the son of Kunti (Arjuna) saw all these kinsmen thus standing arrayed… |

| | |
|---|---|
| துயருடன் சொல்லுகிறான். அர்ஜுனன் சொல்லுகிறான்: | |
| 28. "கண்ணா! போர் செய்ய வேண்டி இங்கு திரண்டு நிற்கும் சுற்றத்தார்களைக் கண்டு, | (1.28) He was overcome with great compassion and uttered this in sadness;<br>*The Distress of Arjuna*<br>When I see my own people arrayed and eager for fight O Kṛṣṇa, |
| 29. என் அவயங்கள் சோர்கின்றன. என் வாய் உலர்கிறது. என்னுடம்பு நடுங்குகிறது. மயிர் சிலிர்க்கிறது. | (1.29) My limbs quail, my mouth goes dry, my body shakes, and my hair stands on end. |
| 30. *காண்டீபம் கையிலிருந்து நழுவுகிறது. உடம்பில் எரிச்சலுண்டாகிறது. என்னால் நிற்க முடியவில்லை. என் மனம் சுழலுகிறது.<br>(*காண்டீபமென்பது அர்ஜுனனுடைய வில்லின் பெயர்) | (1.30) (The bow) Gāṇḍīva slips from my hand and my skin too is burning all over. I am not able to stand steady. My mind is reeling. |
| 31. கேசவா! விபரீதமான சகுனங்கள் பல காண்கிறேன். போரிலே சுற்றத்தார்களை மடிப்பதில் எனக்கு நன்மை தோன்றவில்லை. | (1.31) And I see evil omens, O Keśava (Kṛṣṇa), nor do I foresee any good by slaying my own people in the fight.<br>Arjuna's attention to omens indicates his mental weakness and instability. |
| 32. கண்ணா! நான் வெற்றியை விரும்புகிறேன்; ராஜ்யத்தையும், இன்பங்களையும் வேண்டுகிறேன். கோவிந்தா! | (1.32) I do not long for victory, O Kṛṣṇa nor kingdom nor pleasures. Of what use is kingdom to us, O Kṛṣṇa, or enjoyment or even life? In moments of great sorrow, we are tempted to adopt the method of renunciation. |

| | |
|---|---|
| நமக்கு ராஜ்யத்தால் ஆவதென்ன? இன்பங்களால் ஆவதென்ன? உயிர் வாழ்க்கையாலேனு மாவதென்னே? | This verse indicates Arjuna's inclination for renunciation of the world: *saṁnyāsasādhanasūcanam.* Madhusūdana. |
| 33. யாவர் பொருட்டு நாம் ராஜ்யத்தையும், போகங்களையும், இன்பங்களையும் விரும்புகிறோமோ, அவர்கள் உயிரையும் செல்வங்களையும் துறந்தோராய் இங்கு வந்து நிற்கிறார்கள். | (1.33) Those for whose sake we desire kingdom, enjoyments and pleasures, they stand here in battle, renouncing their lives and riches. |
| 34. குருக்களும், தந்தையரும், மக்களும், பாட்டன்மாரும், மாதுலரும், மாமன்மாரும், பேரரும், மைத்துனரும், சம்பந்திகளும் (இங்குளர்). | (34) Teachers, fathers, sons and also grandfathers; uncles and fathers-In-law, grandsons and brothers-in-law and (other) kinsmen. |
| 35. மதுசூதனா! யான் கொல்லப்படினும், இவர்களைக் கொல்ல விரும்புகிலேன். மூவுலகின் ஆட்சி பெறுதற் கெனினும் (இது செய்யேன்!) பூமியின் பொருட்டுச் செய்வேனோ? | (1.35) These I would not consent to kill, though they kill me, O Madhusūdana (Kṛṣṇa), even for the kingdom of the three worlds; how much less for the sake of the earth? |
| 36. ஜநார்தன! திருதராஷ்டிரக் கூட்டத்தாரைக் கொன்று நாம் என்ன இன்பத்தையடையப் | (1.36) What pleasure can be ours, O Kṛṣṇa, after we have slain the sons of Dhṛtarāṣṭra? Only sin will accrue to us if we kill these malignants. |

| | |
|---|---|
| போகிறோம்? இந்தப் பாதகரைக் கொல்வதனால் நம்மைப் பாவமே சாரும். | |
| 37. ஆதலால், சுற்றத்தாராகிய திருதராஷ்டிர வர்க்கத்தாரைக் கொல்வது நமக்குத் தகாது. மாதவா! பந்துக்களைக் கொன்றபின் நாம் இன்புற்றிருப்பதெப்படி? | (1.37) So it is not right that we slay our kinsmen, the sons of Dhṛtarāṣṭra. Indeed, how can we be happy, O Mādhava (Kṛṣṇa), if we kill our own people? |
| 38. அவாவின் மிகுதியால் அறிவிழந்த இவர்கள் குலத்தையழிப்பதில் விளையும் தீங்கையும், நண்பருக்குச் சதி செய்வதிலுள்ள பாதகத்தையும் காண்கிலராயினும், | (1.38) Even if these whose minds are overpowered by greed, see no wrong in the destruction of the family and no crime in treachery to friends; |
| 39. ஜநார்த்தன! குலநாசத்தால் ஏற்படுங் குற்றத்தையுணர்ந்த நாம் இப்பாவத்தினின்று விலகும் வழியறியாதிருப்பதென்ன? | (1.39) Why should we not have the wisdom to turn away from this sin, O Janārdana (Kṛṣṇa), we who see the wrong in the destruction of the family? |
| 40. குல நாசத்தால் என்றுமுள்ள குலதர்மங்கள் அழிகின்றன. தர்மம் அழிவதனால் குல முழுதையும் அதர்மம் சூழ்கிறதன்றே? | (1.40) In the ruin of a family, its ancient laws are destroyed: and when the laws perish, the whole family yields to lawlessness. |
| 41. கண்ணா! அதர்மம் சூழ்வதனால் குல ஸ்திரீகள் கெட்டுப் | (1.41) And when lawlessness prevails, O Vārṣṇeya (Kṛṣṇa), the women of the family become corrupted and when women are corrupted, confusion of castes arises. |

| | |
|---|---|
| போகிறார்கள். விருஷ்ணி குலத் தோன்றலே! மாதர் கெடுவதனால் வர்ணக் குழப்பமுண்டாகிறது. | |
| 42. அக்குழப்பத்தால் குலத்தார்க்கும் அதனை அழித்தார்க்கும் நரகமேற்படுகிறது. இவர்களுடைய பிதிர்க்கள் பிண்டமும் நீருமின்றி வீழ்ச்சி பெறுகிறார்கள். | (1.42) And to hell does this confusion bring the family itself as well as those who have destroyed it. For the spirits of their ancestors fall, deprived of their offerings of rice and water. |
| 43. வர்ணக் குழப்பமுண்டாகும்படி குலக் கேடர் செய்யும் இக்குற்றங்களால் ஜாதி தர்மங்களும் தொன்றுதொட்டுள்ள குலதர்மங்களும் எடுபட்டுப் போகின்றன. | (1.43) By the misdeeds of those who destroy a family and create confusion of varṇas, the immemorial laws of the caste and the family are destroyed. |
| 44. ஜநார்த்தன! குல தர்மங்கள் எடுபட்டுப் போன மனிதருக்கு எக்காலும் நரகத்தில் வாசமென்று கேள்விப் படுகிறோம். | (1.44) And we have heard it said, O Janārdana (Kṛṣṇa), that the men of the families whose laws are destroyed needs must live in hell. |
| 45. அந்தோ! அரசவின்பத்தை விழைந்து சுற்றத்தாரைக் கொல்ல முற்படும் நாம் பெரிய பாவஞ்செய்யத் தலைப் பட்டோம். | (1.45) Alas, what a great sin have we resolved to commit in striving to slay our own people through our greed for the pleasures of the kingdom. |

| | |
|---|---|
| 46. கையிலாயுத மில்லாமல், எதிர்க்காமல் நிற்குமென்னை இந்த திருதராஷ்டிரக் கூட்டத்தார் ஆயுத பாணிகளாய்ப் போரில் மடித்துவிடினும் அது எனக்குப் பெரிய நன்மையே யாம்."<br>சஞ்ஜயன் சொல்லுகிறான்: | (1.46) Far better would it be for me if the sons of Dhṛtarāṣṭra, with weapons in hand, should slay me in the battle, while I remain unresisting and unarmed. |
| 47. செருக்களத்தில் இவ்வாறு சொல்லிவிட்டுப் பார்த்தன் அம்புகளையும் வில்லையும் எறிந்து போட்டுத் துயரில் மூழ்கிய மனத்தனாய்த் தேர்ப் பீடத்தின் மேலுட்கார்ந்து கொண்டான். | (1.47) Having spoken thus on the (field of) battle, Arjuna sank down on the seat of his chariot, casting away his bow and arrow, his spirit overwhelmed by sorrow. |

## பகவத் கீதை : இரண்டாம் அத்தியாயம்

*ஸாங்கிய யோகம்*

போர் புரிய மனம் வராமல் திகைத்துத் தன்னைச் சரணடைந்த அர்ஜுனனை நோக்கிக் கண்ணன் உரைக்கின்றான்: "அர்ஜுனா, நீ வருந்துவது முற்றிலும் தவறு. எதிரிகளின் ஆன்மாவைப் பற்றி வருந்துகின்றாயா? அல்லது அவர்களின் உடலைப்பற்றி வருந்துகின்றாயா? இரண்டும் சரியல்ல. ஆன்மா என்றும் அழிவற்றது. அதைக் கத்தியால் வெட்டவும், தீயினால் எரிக்கவும் முடியாது. உடலோ அழியும் இயல்பு வாய்ந்தது. நீ அழிக்காவிடினும் அது தானே அழிய வேண்டியதுதான். ஆன்மாவுக்கு ஓருடல் அழிந்ததும், மற்றோருடல் தானே வந்து சேரும். ஆத்மாவின் இயற்கையை எண்ணி ஏற்படுத்தப்பட்ட செயல்களை நீ செய்தே தீரவேண்டும். அச்செயல்களைச் செய்யுங்கால், நாம் செய்ய வேண்டியதைச்

| | |
|---|---|
| செய்கிறோம், அதுவும் ஈசுவரப் பிரீதிக்காகவே என்று எண்ணிச் செய். இதனால் ஆத்ம ஞானம் பெருகி அதில் நிலைபெற்று நற்கதியடைவாய். ஈசுவரப் ப்ரீதியைத் தவிர மற்ற பலனைக் கோரினால் சம்சாரக் கட்டிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியாது." சஞ்ஜயன் சொல்லுகிறான்:<br>02ChapterBG<br>CHAPTER II<br>*Sāṁkhya Theory and Yoga Practice*<br>*Kṛṣṇa's rebuke and exhortation to be brave* | |
| 1. அவ்வண்ணம் இரக்கமிஞ்சியவனாய் நீர் நிரம்பிய சோக விழிகளுடன் வருந்திய அர்ஜுனனை நோக்கி மதுசூதனன் சொல்லுகிறான்: ஸ்ரீ பகவான் சொல்லுகிறான். | *Saṁjaya* said:<br>(2.1) To him (who was) thus overcome by pity, whose eyes were filled with tears and troubled and (who was) much depressed in mind, Madhusūdana (Kṛṣṇa) spoke this word. |
| 2. இந்த முட்டுதலில் இவ்வுள்ளச் சோர்வை நீ எங்கிருந்து பெற்றாய்? இஃது ஆரியருக்குத் தகாது. வானுலகைத் தடுப்பது; அபகீர்த்தி தருவது அர்ஜுனா! | *The Blessed Lord* said:<br>(2.2) Whence has come to thee this stain (this dejection) of spirit in this hour of crisis? It is unknown to men of noble mind (not cherished by the Aryans); it does not lead to heaven; (on earth) it causes disgrace, O Arjuna. |
| 3. பார்த்தா! பேடித்தன்மையடையாதே! இது நினக்குப் பொருந்தது. இழிபட்ட மனத் தளர்ச்சியை நீக்கி எழுந்து நில்; பகைவரைச் | (2.3) Yield not to this unmanliness, O Pārtha (Arjuna) for it does not become thee. Cast off this petty faintheartedness and arise, O Oppressor of the foes (Arjuna). |

| | |
|---|---|
| சுடுவோனே! அர்ஜுனன் சொல்லுகிறான்: | |
| 4. மதுசூதனா! பீஷ்மரையும், துரோணரையும் போரில் அம்புகளால் எப்படி எதிர்ப்பேன். இவர்கள் தொழுதற்குரியவர்; பகைவரையழிப்போய்! | *Arjuna said:* (2.4) How shall I strike Bhīṣma and Droṇa who are worthy of worship, O Madhusūdana (Kṛṣṇa), with arrows in battle" O Slayer of foes (Kṛṣṇa.)? |
| 5. பெரியோராகிய குருக்களைக் கொல்லாமல், உலகத்தில் பிச்சையெடுத்துண்பதும் நன்று. பொருளை விரும்பும் குருக்களைக் கொன்று நாம் துய்க்கும் இன்பங்கள் உதிரத்திற் (ரத்தத்தில்) கலந்தனவாம். | 2.5) It is better to live in this world by begging than to slay these honoured teachers.[1] Though they are mindful of their gains, they are my teachers and by slaying them, only, I would enjoy in this world delights which are smeared with blood. |
| 6. மேலும், நாம் இவர்களை வெல்லுதல், இவர்கள் நம்மை வெல்லுதல் -- இவற்றுள் எது நமக்கு மேன்மையென்பது விளங்கவில்லை. எவரைக் கொன்றபின் நாம் உயிர்கொண்டு வாழ விரும்போமோ, அத்தகைய | (2.6) Nor do we know which for us is better, whether we conquer them or they conquer us. The sons of Dhṛtarāṣṭra, whom if we slew we should not care to live, are standing before us in battle array, |

| | |
|---|---|
| திருதராஷ்டிரக் கூட்டத்தார் போர் முனையில் வந்து நிற்கிறார்கள். | |
| 7. சிறுமையாகிய குறையால் இயல்பு அழிந்தனவாய், அறம் இன்னது என்றுணராமல் மயங்கிய அறிவுடன், யான் உன்னைக் கேட்கிறேன். எது நன்றென்பதை எனக்கு நிச்சயப்படுத்திச் சொல்லுக. நான் உன் சீடன். உன்னையே சரணமெனப் புகுந்தேன். கட்டளை தருக. | (2.7) My very being is stricken with the weakness of (sentimental) pity. With my mind bewildered about my duty, I ask Thee. Tell me, for certain, which is better. I am Thy pupil; teach me, who am seeking refuge in Thee. |
| 8. பூமியின் மேல் நிகரில்லாத செல்வமுடைய ராஜ்யம் பெறினும், அன்றி வானோர் மிசை ஆட்சி பெறினும் புலன்களை அடக்கும் இயல்புடைய இந்தத் துயர் எம்மைவிட்டு நீங்குமென்று தோன்றவில்லை. சஞ்ஜயன் சொல்லுகிறான்: | (2.8) I do not see what will drive away this sorrow which dries up my senses even if I should attain rich and unrivalled kingdom on earth or even the sovereignty of the gods.<br>The conflict in Arjuna must be healed. He must attain to a new, integral, comprehensive consciousness. |
| 9. "பகைவரைக் கொளுத்தும் பார்த்தனங்கு பசுநிரை காக்கும் பகவனை நோக்கிப் "போரினிப் புரியேன்" என்று வாய் புதைத்திருந்தான்." | *Saṁjaya* said:<br>(2.9) Having thus addressed Hṛṣīkeśa (Kṛṣṇa),the mighty Guḍākeśa (Arjuna) said to Govinda (Kṛṣṇa) "I will not fight)' and became silent. |

| | |
|---|---|
| 10. பாரதா, அப்போது கண்ணன் புன்னகை பூத்து இரண்டு படைகளுக்கும் நடுவே துயருற்று நின்ற பார்த்தனை நோக்கி இவ்வசன முரைக்கிறான்: ஸ்ரீபகவான் சொல்லுகிறான்: | (2.10) To him thus depressed in the midst of the two armies. O Bharata (Dhṛtarāṣṭra), Hṛṣīkeśa (Kṛṣṇa), smiling as it were, spoke this word |
| 11. "துயர்ப்படத் தகாதார் பொருட்டுத் துயர்ப்படுகின்றாய்! ஞான வுரைகளு முரைக்கின்றாய்! இறந்தார்க் கேனும் இருந்தார்க் கேனுந் துயர் கொளார் அறிஞர்." | *The Blessed Lord* said:<br>(2.11) Thou grievest for those whom thou shouldst not grieve for and yet thou speakest words about wisdom. Wise men do not grieve for the dead or for the living. |
| 12. இதன் முன் எக்காலத்திலும் நான் இல்லாதிருந்திலேன். நீயும் இங்குள்ள வேண்தர் யாவரும் அப்படியே. இனி நாம் என்றைக்கும் இல்லாமற்போகவும் மாட்டோம். | (2.I2) Never was there a time when I was not, nor thou, nor these lords of men, nor will there ever be a time hereafter when we all shall cease to be. |
| 13. ஆத்மாவுக்கு இவ்வுடலில் எங்ஙனம் பிள்ளைப் பிராயமும், இளமையும், மூப்பும் தோன்றுகின்றனவோ, அங்ஙனமே மற்றொரு சரீரப் பிறப்புத் | (2.I3) As the soul passes in this body through childhood, youth and age, even so is its taking on of another body. The sage is not perplexed by this. |

| | |
|---|---|
| தோன்றுகிறது. தீரன் அதில் கலங்கமாட்டான். | |
| 14. குந்தியின் மகனே, குளிரையும், வெப்பத்தையும், இன்பத்தையும், துன்பத்தையும் தரும் இயற்கையின் தீண்டுதல்கள் தோன்றி மறையும் இயல்புடையன, என்றுமிருப்பனவல்ல. பாரதா! அவற்றைப் பொறுத்துக்கொள். | (2.14) Contacts with their objects, O Son of Kunti (Arjuna), give rise to cold and heat, pleasure and pain. They come and go and do not last forever, these learn to endure O Bharata (Arjuna). |
| 15. யாவன் இவற்றால் துயர்ப்படான். இன்பமுந்துன்பமும் நிகரெனக் கொள்வான், அந்த தீரன் சாகாதிருக்கத் தகுவான். | (2.15) The man who is not troubled by these, O Chief of men (Arjuna), who remains the same in pain and pleasure, who is wise makes himself fit for eternal life. |
| 16. இல்லாதது உண்மையாகாது. உள்ளது இல்லாததாகாது. உண்மையறிவார் இவ்விரண்டுக்குமுள்ள வேற்றுமை யுணர்வார். | (2.16) Of the non-existent there is no coming to be; of the existent there is no ceasing to be. The conclusion about these two has been perceived by the seers of truth. |
| 17. இவ்வுலக முழுவதிலும் பரந்து நிற்கும் பொருள் அறிவற்றதென்றறி; இது கேடற்றது; இதனை | (2.I7) Know thou that that by which all this is pervaded is indestructible. Of this immutable being, no one can bring about the destruction. |

| | |
|---|---|
| யழித்தல் யார்க்கும் இயலாது. | |
| 18. ஆத்மா நித்தியன்; அழிவற்றான்; அளவிடத்தகாதான் எனினும் அவனுடைய வடிவங்கள் கிறுதியுடையன என்பர். ஆதலால் பாரதா, போர் செய். | (2.18) It is said that these bodies of the eternal embodied (soul) which is indestructible and incomprehensible come to an end. Therefore fight, O Bharata (Arjuna). |
| 19. இவன் கொல்வானென்று நினைப்போனும், கொல்லப்படுவானென்று நினைப்போனும் -- இருவரும் அறியாதார். இவன் கொல்லுவதுமில்லை, கொலையுண்பதுமில்லை. | (2.I9) He who thinks that this slays and he who thinks that this is slain; both of them fail to perceive the truth; this one neither slays nor is slain. |
| 20. இவன் பிறப்பதுமில்லை; எக்காலத்திலும் இறப்பதுமில்லை. இவன் ஒரு முறையிலிருந்து பின்னர் இல்லாது போவதுமில்லை. இவன் பிறப்பற்றான். அனவரதன். இவன் சாசுவதன்; பழமையோன்; உடம்பு கொல்லப்படுகையில் இவன் கொல்லப்படான். | (2.20) He is never born, nor does he die at any time, nor having (once) come to be will he again cease to be. He is unborn, eternal, permanent and primeval. He is not slain when the body is slain, |

| | |
|---|---|
| 21. இப்பொருள் அழிவற்றது, பிறப்பற்றது, என்றுமுளது -- இங்ஙனமுணர்வான் கொல்வதெவனை? அவன் கொல்விப்பது எவனை? | (2.2l) He who knows that it is indestructible and eternal, uncreate and unchanging, how can such a person slay any one, O Pārtha (Arjuna), or cause anyone to slay? |
| 22. நைந்த துணிகளைக் கழற்றியெறிந்துவிட்டு மனிதன் புதிய துணிகள் கொள்ளுமாறு போல, ஆத்மா நைந்த உடல்களைக் களைந்து புதியனவற்றை எய்துகிறது. | (2.22) Just as a person casts off worn-out garments and puts on others that are new, even so does the embodied soul cast off worn-out bodies and take on others that are new. |
| 23. இவனை ஆயுதங்கள் வெட்டமாட்டா; தீ எரிக்காது; நீர் இவனை நனைக்காது; காற்று உலர்த்தாது. | (2.23) Weapons do not cleave this self, fire does not burn him; waters do not make him wet; nor does the wind make him dry. |
| 24. பிளத்தற்கரியவன்; எரித்தற்கும், நனைத்தற்கும், உலர்த்துதற்கும் அரியவன்; நித்தியன். எங்கும் நிறைந்தவன்; உறுதிய்டையான்; அசையாதான்; என்றுமிருப்பான். | (2.24) He is uncleavable, He cannot be burnt. He can be neither wetted nor dried. He is eternal, all-pervading, unchanging and immovable. He is the same forever. |
| 25. "தெளிதற் கரியான் சிந்தனைக் கரியான் மாறுத லில்லாதா னென்ப! ஆதலால் இவனை | (2.25) He is said to be unmanifest, unthinkable and unchanging. Therefore, knowing him as such, thou shouldst not grieve. |

| | |
|---|---|
| இங்ஙனம் அறிந்துநீ துயர்ப் படாதிருக்கக் கடவாய்." | |
| 26. அன்றி, நீ இவனை நித்தமும் பிறந்து நித்தமும் மடிவானென்று கருதினால், அப்போதும் பெருந்தோளுடையாய், நீ இவன் பொருட்டுத் துயருறல் தகாது. | (2.26) Even if thou thinkest that the self is perpetually born and perpetually dies, even then, O Mighty-armed (Arjuna), thou shouldst not grieve. |
| 27. பிறந்தவன் சாவது உறுதியெனில், செத்தவன் பிறப்பது உறுதியெனி, இந்த விலக்கொணாச் செய்திக்கு நீ அழுங்குதல் தகுதியன்று. | (2.27) For to the one that is born death is certain and certain is birth for the one that has died. Therefore for what is unavoidable, thou shouldst not grieve. |
| 28. பாரதா! உயிர்களின் ஆரம்பம் தெளிவில்லை; நடுநிலைமை தெளிவுடையது; இவற்றின் இறுதியுந் தெளிவில்லை. இதில் துஅர்ப்படுவதென்ன? | (2.28) Beings are unmanifest in their beginnings, manifest in the middles and unmanifest again in their ends, O Bharata (Arjuna), What is there in this for lamentation? |
| 29. இந்த ஆன்மாவை, "வியப்பென ஒருவன் காண்கிறான், வியப்பென ஒருவன் சொல்லுகிறான், வியப்பென ஒருவன் கேட்கிறான், கேட்கினும் இதனை அறிவான் எவனுமிலன்." | (2.29) One looks upon Him as a marvel, another likewise speaks of Him as a marvel; another hears of Him as a marvel; and even after hearing, no one whatsoever has known Him. |

| | |
|---|---|
| 30. பாரதா! எல்லாருடம்பிலுமுள்ள இந்த ஆத்மா கொல்ல முடியாதவன். ஆதலால் நீ எங்க உயிரின் பொருட்டும் வருந்துதல் வேண்டா! | (2.30) The dweller in the body of everyone, O Bharata (Arjuna), is eternal and can never be slain, Therefore thou shouldst not grieve for any creature. |
| 31. ஸ்வதர்மத்தைக் கருதியும் நீ நடுங்குதல் இசையாது. அறப்போரைக் காட்டிலும் உயர்ந்ததொரு நன்மை மன்னர்க்கில்லை. | (2.31) Further, having regard for thine own duty, thou shouldst not falter, there exists no greater good for a Ksatriya than a battle enjoined by duty. |
| 32. தானே வந்தெய்வது, திறந்து கிடக்கும் பொன்னுலகவாயில் போன்றது. இத்தகைய போர் கிடைக்கப் பெறும் மன்னர் இன்பமுடையார்! | (2.32) Happy are the Kṣatriyas, O Partha (Arjuna), for whom such a war comes of its own accord as an open door to heaven. A Kṣatriya's happiness consists not in domestic pleasures and comfort but in fighting for the right.[1] |
| 33. அன்றி நீ இந்தத் தர்ம யுத்தத்தை நடத்தாமல் விடுவாயானால், அதனால் ஸ்வதர்மத்தையும், கீர்த்தியையும் கொன்று பாவத்தை யடைவாய். | (2.33) But if thou doest not this lawful battle, then thou wilt fail thy duty and glory and will incur sin. When the struggle between right and wrong is on, he who abstains from it out of false sentimentality, weakness or cowardice would be committing a sin. |
| 34. உலகத்தார் உனக்கு மாறாத வசையுமுரைப்பார்கள். புகழ் கொண்டோன் பின்னரெய்தும் அபகீர்த்தி | (2.34) Besides, men will ever recount thy ill-fame and for one who has been honoured, ill-fame is worse than death. |

| | |
|---|---|
| மரணத்திலுங் கொடிதன்றோ? | |
| 35. நீ அச்சத்தால் போரை விட்டு விலகியதாக மகாரதர் கருதுவார்கள். அவர்களுடைய நன்மதிப்பைப் பெற்ற நீ இதனால் சிறுமையடைவாய். | (2.35) The great warriors will think that thou hast abstained from battle through fear and they by whom thou wast highly esteemed will make light of thee. |
| 36. உனக்கு வேண்டாதார் சொல்லதகாத வார்த்தைகள் பல சொல்லுவார்கள். உன் திறமையைப் பழிப்பார்கள். இதைக் காட்டிலும் அதிகமான துன்பமெது? | (2.36) Many unseemly words will be uttered by thy enemies, slandering thy strength. Could anything be sadder than that? Contrast this with the central teaching of the *Gita* that one should be indifferent to praise and blame. |
| 37. கொல்லப்படினோ வானுலகெய்துவாய். வென்றால் பூமியாள்வாய். ஆதலால் போர் செயத் துணிந்து நீ எழுந்து நில். | (2.37) Either slain thou shalt go to heaven; or victorious thou shalt enjoy the earth; Therefore arise, O Son of Kuntī (Arjuna), resolved on battle. |
| 38. இன்பம், துன்பம், இழவு, பேறு, வெற்றி, தோல்வி இவற்றை நிகரெனக்கொண்டு, நீ போர்க்கொருப்படுக. இவ்வண்ணம் புரிந்தால் பாவமெய்தாய். | (2.38) Treating alike pleasure and pain, gain and loss, victory and defeat, then get ready for battle. Thus thou shall not Incur sin. |

| | |
|---|---|
| 39. இங்ஙனம் உனக்கு ஸாங்கிய வழிப்படி புத்தி சொன்னேன். இனி யோக வழியால் சொல்லுகிறேன்; கேள். இந்தப் புத்தி கொண்டவன் கர்மத் தளைகளைச் சிதறி விடுவான். | (2.39) This is the wisdom of the Sāṁkhya given to thee, O Pārtha (Arjuna). Listen now to the wisdom of the Yoga. If your intelligence accepts it, thou shalt cast away the bondage of works. |
| 40. இதில் முயற்சிக்கு அழிவில்லை. இது வரம்பு மீறிய செயற்கையுமன்று. இந்தத் தர்மத்தில் சிறிதிருப்பினும், அஃதொருவனைப் பேரச்சத்தினின்று காப்பாற்றும். | (2.40) In this path, no effort is ever lost and no obstacle prevails; even a little of this righteousness (dharma) saves from great fear. No step is lost, every moment is a gain. Every effort in the struggle will be counted as a merit. |
| 41. குருகுல தோன்றலே! உறுதியுடைய புத்தி இவ்வுலகத்தில் ஒருமையுடையது. உறுதியில்லாதோரின் மதி பல கிளைப்பட்டது, முடிவற்றது. | (2.41) In this, O joy of the Kurus (Arjuna), the resolute (decided) understanding is single; but the thoughts of the irresolute (undecided) are many-branched and endless. |
| 42. வேதங்களின் வெளியுரையில் மகிழ்வார் சிலர், பூக்களைப் போன்ற (அலங்காரச்) சொற்கள் பேசுகிறார்கள். தமது | (2.42-43) The undiscerning who rejoice in the letter of the Veda, who contend that there is nothing else, whose nature is desire and who are intent on heaven, proclaim these flowery words that result in rebirth as the fruit of actions and (lay down) various specialized rites for the attainment of enjoyment and power. |

| | |
|---|---|
| கொள்கையொழிய மற்றது பிழையென்கிறார்கள். | |
| 43. இவர்கள் காமிகள், சுவர்க்கத்தைப் பாரமாகக் கொண்டோர். பிறப்புக்கும் தொழிலுக்கும் பயன் வேண்டுவோர்; போகத்தையும் ஆட்சியையும் வேண்டுவோர்; பலவகையான கிரியைகளைக் காட்டிப் பேசுகிறார்கள். | (2.42-43) The undiscerning who rejoice in the letter of the Veda, who contend that there is nothing else, whose nature is desire and who are intent on heaven, proclaim these flowery words that result in rebirth as the fruit of actions and (lay down) various specialized rites for the attainment of enjoyment and power. |
| 44. இவர்கள் சொல்லுவதைக் கேட்டு மதிமயங்கி போகத்திலும், ஆட்சியிலும் பற்றுறுவோருடைய நிச்சய புத்தி சமாதியில் நிலை பெறாது. | (2.44) The intelligence which discriminates between right and wrong, of those who are devoted to enjoyment and power and whose minds are carried away by these words (of the Veda) is not well-established in the Self (or concentration). |
| 45. மூன்று குணங்களுக்குட்பட்டனவற்றைக் குறித்து வேதங்கள் பேசுகின்றன. அர்ஜுனா! நீ மூன்று குணங்களையும் கடந்தோனாகுக. *இருமைகளற்று (*நன்மை-தீமை; ஒளி-இருள்; குளிர்-வெப்பம் போன்ற இரட்டை | (2.45) The action of the three-fold modes is the subject matter of the Veda; but do thou become free, O Arjuna, from this threefold nature; be free from the dualities (the pairs of opposites), be firmly fixed in purity, not caring for acquisition and preservation, and be possessed of the Self. |

| | |
|---|---|
| நிலைகள்) எப்போதும் உண்மையில் நின்று, யோக க்ஷேமங்களைக் கருதாமல் ஆத்மாவை வசப்படுத்தியவனாகுக. | |
| 46. எங்கும் நீர் நிரம்பிய இடத்தில் ஒரு சிறு குட்டம் என்ன பொருளுடையது; அன்ன பொருளே ஞானமுடைய பிராமணனுக்கு வேதங்களுமுடையன. | (2.46) As is the use of a pond in a place flooded with water everywhere, so is that of all the Vedas for the Brahmin who understands. |
| 47. தொழில் செய்யத்தான் உனக்கு அதிகாரமுண்டு. அதன் பயன்களில் எப்போதுமே உனக்கதிகாரமில்லை. செய்கையின் பயனைக் கருதாதே; தொழில் செய்யாமலுமிராதே. | (2.47) To action alone hast thou a right and never at all to its fruits; let not the fruits of action be thy motive; neither let there be in thee any attachment to inaction. |
| 48. தனஞ்ஜயா! யோகத்தில் நின்று பற்றை நீக்கி வெற்றி தோல்விகளை நிகரெனக்கொண்டு தொழில்களைச் செய்க. நடுநிலையே யோகமெனப்படும். | (2.48) Fixed in yoga, do thy work, O Winner of wealth (Arjuna), abandoning attachment, with an even mind in success and failure, for evenness of mind is called yoga. |
| 49. தனஞ்ஜயா! *புத்தி யோகத்தைக் காட்டிலும் | (2.49) Far inferior indeed is mere action to the discipline of intelligence (buddhiyoga), O Winner of wealth (Arjuna) seek refuge in intelligence. |

| | |
|---|---|
| (புத்தியில் லயித்து நிற்றல்) கர்மம் (தொழில்) நெடுந்தொலை தாழ்ந்தது. புத்தியைச் சரணடை, பயனைக் கருதுவோர் லோபிகள். | Pitiful are those who seek for the fruits (of their action). |
| 50. புத்தியுடையவன் இங்கு நற்செய்கை, தீச்செய்கை இரண்டையுந் துறக்கிறான். ஆதலால் நீ யோகத்திலே பொருந்திவிடு. யோகம் செயல்களில் திறமையாம். | (2.50) One who has yoked his intelligence (with the Divine) (or is established in his intelligence) casts away even here both good and evil. Therefore, strive for yoga, yoga is skill in action. |
| 51. புத்தியுடைய மேதாவிகள் செய்கையில் விளையும் பயனைத் துறந்து, பிறவித் தளை நீங்கி, ஆனந்தப் பதவி அடைகிறார்கள். | (2.51) The wise who have united their intelligence (with the Divine) renouncing the fruits which their action yields and freed from the bonds of birth reach the sorrowless state. |
| 52. உனது புத்தி மோகக் குழப்பத்தைக் கடந்து செல்லுமாயின், அப்போது கேட்கப்போவது, கேட்கப்பட்டது என்ற இரண்டிலும் உனக்கு வேதனையேற்படாது. | (2.52) When thy intelligence shall cross the turbidity of delusion, then shalt thou become indifferent to what has been heard and what is yet to be heard. |
| 53. உனது புத்தி, கேள்வியிலே கலக்கமுறாததாய், உறுதிகொண்டு, சமாதி | (2.53) When thy intelligence, which is bewildered by the Vedic texts, shall stand unshaken and stable in spirit (samādhi), then shalt thou attain to insight (yoga). |

| | |
|---|---|
| நிலையில் அசையாது நிற்குமாயின், அப்போது யோகத்தை அடைவாய். அர்ஜுனன் சொல்லுகிறான்: | |
| 54. கேசவா! உறுதிகொண்ட அறிவுடன் சமாதியில் நிற்போன் எவ்வாறு பேசுவான்? ஸ்திர புத்தியுடையவன் என்ன சொல்வான்? எப்படியிருப்பான்? எதனையடைவான்? ஸ்ரீபகவான் சொல்லுகிறான்: | *Arjuna* said:<br>(2.54) What is the description of the man who has this firmly founded wisdom, whose being is steadfast in spirit, O Keśava (Kṛṣṇa)? How should the man of settled intelligence speak, how should he sit, how should he walk? |
| 55. பார்த்தா! ஒருவன் தன் மனத்தில் எழும் விருப்பங்களனைத்தையும் துறந்து தன்னிலே தான் மகிழ்ச்சி பெறுவானாயின், அப்போது ஸ்திர புத்தியுடையவனென்று சொல்லப்படுகிறான். | *The Blessed Lord* said:<br>(2.55) When a man puts away all the desires of his mind, O Partha (Arjuna), and when his spirit is content in itself, then is he called stable in intelligence. Negatively, the state is one of freedom from selfish desires and positively, it is one of concentration on the Supreme. |
| 56. "துன்பங்களிலே மனங்கெடா தவனாய், இன்பங்களிலே ஆவலற் றவனாய் அச்சமும் சினமுந் தவிர்த்தவனாயின் அம்முனி, மதியிலே யுறுதி வாய்ந்தவ னென்ப." | (2.56) He whose mind is untroubled in the midst of sorrows and is free from eager desire amid pleasures, he from whom passion, fear, and rage have passed away, he is called a sage of settled intelligence. |

| | |
|---|---|
| 57. எவன் நல்லதும் கெட்டதும் வருமிடத்தே எதனிலும் வீழ்ச்சியற்றவனாய், ஆவலுறுவதும் பகைப்பதுமின்றியிருப்பானோ, அவனுடைய அறிவே நிலைகொண்டது. | (2.57). He who is without affection on any side, who does not rejoice or loathe as he obtains good or evil, his intelligence is firmly set (in wisdom). |
| 58. ஆமை தன் அவயவங்களை இழுத்துக் கொள்ளுவது போல், எப்புறத்தும் விஷய பதார்த்தங்களினின்று புலன்களை யொருவன் மீட்க வல்லானாயின், அவனறிவே நிலை கொண்டது. | (2.58) He who draws away the senses from the objects of sense on every side as a tortoise draws in his limbs (into the shell), his intelligence is firmly set (in wisdom). |
| 59. தம்மைக் கவராத ஜீவனிடமிருந்து விஷயங்கள் தாமே விலகிக் கொள்ளுகின்றன. எனினும் அவற்றிடமுள்ள சுவையை இவன் மறப்பதில்லை. பரம்பொருளைக் காண்பானாயின் அச்சுவையுந் தீர்ந்துவிடும். | (2.59) The objects of sense turn away from the embodied soul who abstains from feeding on them but the taste for them remains. Even the taste turns away when the Supreme is seen. |
| 2.60. குந்தியின் மகனே! (தவ) முயற்சியுடைய | (2.60) Even though a man may ever strive (for perfection) and be ever so discerning, O Son of Kuntī (Arjuna), his impetuous senses will carry off his mind by force. |

| | |
|---|---|
| புருஷனிடத்திலேகூட இந்திரியங்கள் வரம்பு கடந்து செல்லும்போது தம்முடன் மனத்தையும் வலிய வாரிச் செல்கின்றன. | |
| 61. அவற்றையெல்லாம் நன்றாக அடக்கி, யோகத்தில் அமர்ந்தவனாய், என்னைப் பரமாகக் கொண்டு, புலன்களை வசப்படுத்தி வைத்திருப்பவன் எவனோ, அவனுடைய அறிவே நிலைகொண்டது. | (2.6I) Having brought all (the senses) under control, he should remain firm in yoga intent on Me; for he, whose senses are under control, his intelligence is firmly set. |
| 2.62. மனிதன் விஷயங்களைக் கருதும்போது அவற்றில் பற்றுதலுண்டாகிறது. பற்றுதலால் விருப்பமுண்டாகிறது. விருப்பத்தால் சினம் பிறக்கிறது. | (2.62) When a man dwells in his mind on the objects of sense, attachment to them is produced. From attachment springs desire and from desire comes anger. |
| 63. சினத்தால் மயக்கம்; மயக்கத்தால் நினைவு தவறுதல்; நினைவுத் தவறுதலால் புத்தி நாசம்; புத்தி நாசத்தால் அழிகிறான். | (2.63) From anger arises bewilderment, from bewilderment loss of memory; and from loss of memory, the destruction of intelligence and from the destruction of intelligence he perishes. |

| | |
|---|---|
| 64. விழைதலும் பகைத்தலுமின்றி தனக்கு வசப்பட்ட புலன்களுடன் விஷயங்களிலே ஊடாடுவோனாய் தன் விதிக்குத் தான் உட்பட்ட மனிதனின் ஆறுதலடைகிறான். | (2.64) But a man of disciplined mind, who moves among the objects of sense, with the senses under control and free from attachment and aversion, he attains purity of spirit. |
| 2.65. சாந்தி நிலையில் மனிதனுக்கு எல்லாத் துன்பங்களும் அழிகின்றன. சித்தம் சாந்தி பெற்ற பின் ஒருவனுடைய புத்தி விரைவிலே நிலைப்படுகிறது. | (2.65) And in that purity of spirit, there is produced for him an end of all sorrow; the intelligence of such a man of pure spirit is soon established (in the peace of the self). |
| 66. யோகமில்லாதவனுக்குப் புத்தியில்லை. யோகமில்லாதவனுக்கு மனோ பாவனையில்லை. மனோ பாவனையில்லாதவனுக்குச் சாந்தியில்லை. சாந்தியில்லாதவனுக்கு இன்பமேது? | (2.66) For the uncontrolled, there is no intelligence; nor for the uncontrolled is there the power of concentration and for him without concentration, there is no peace and for the unpeaceful, how can there be happiness? |
| 67. இந்திரியங்கள் சலிக்கையில் ஒருவனுடைய மனமும் அவற்றைப் பின்பற்றிச் செல்லுமாயின் அம்மனம் | (2.67) When the mind runs after the roving senses, it carries away the understanding, even as a wind carries away a ship on the waters. |

| | |
|---|---|
| கடலில் தோணியைக் காற்று மோதுவதுபோல் அறிவை மோதுகிறது. | |
| 2.68. ஆதலால், பெருந்தோளாய், யாங்கணும் விஷயங்களினின்றும் இந்திரியங்களைக் கட்டவல்லான் எவனோ, அவனறிவே நிலைகொண்டது. | (2.68) Therefore, O Mighty-armed (Arjuna), he whose senses are all withdrawn from their objects his intelligence is firmly set. |
| 69. எல்லா உயிர்களுக்கும் இரவாகிய நேரத்தில், (தன்னைக் கட்டிய) முனி விழித்திருக்கிறான். மற்ற உயிர்கள் விழித்திருக்கும் நேரமெதுவோ அதுவே முனிக்கிரவு. | (2.69) What is night for all beings is the time of waking for the disciplined soul; and what is the time of waking for all beings is night for the sage who sees (or the sage of vision). |
| 70. கடலில் நீர்த் தொகுதிகள் வந்து விழுகையில் அது மேன்மேலும் நிரப்புதற்குரிதாய் அசையா நிலைகொண்டிருப்பது போலே விருப்பங்கள் தன்னுள்ளே புகும்போது இயல்வான் எவனோ அவன் சாந்தியடைகிறான். விருப்பங்களை | ((2.70) He unto whom all desires enter as waters into the sea, which, though ever being filled is ever motionless, attains to peace and not he who hugs his desires. |

| | |
|---|---|
| விரும்புவோன் அதனை அடையான். | |
| 71. இச்சையற்றான், எல்லா இன்பங்களையும் துறந்தான், எனதென்பதற்றான், யானென்பதற்றான், அவனே சாந்திநிலை அடைகிறான். | (2.71) He who abandons all desires and acts free from longing, without any sense of mineness or egotism, he attains to peace.<br>Cp, the well-known saying of the *Upaniṣad.* "The human mind is of two kinds, pure and impure. That which is intent on securing its desires is impure; |
| 2.72. பார்த்தா! இது பிரம்ம ஸ்திதி. இதையடைந்தோன் பிறகு மயங்குவதில்லை. இறுதிக் காலத்திலேனும் இதில் நிலைகொள்வோன் பிரம்ம நிர்வாண மெய்துகிறான். | (2.72) This is the divine state (brāhmīsthiti) O Pārtha (Arjuna), having attained thereto, one is (not again) bewildered; fixed in that state at the end (at the hour of death) one can attain to the bliss of God (brahmanirvāṇa). |
| பகவத் கீதை : மூன்றாம் அத்தியாயம்<br>கர்ம யோகம்<br><br>கர்மயோக, ஞான யோகங்களுள் ஞானயோகமே கடுகப் பலனை அளிக்குமென்றாலும், கர்ம யோகமே செய்யத் தக்கது.<br>ஆக்கையிருக்கும் வரையில் மனிதனுக்கு ஏதாவதொரு தொழிலைச் செய்வதே இயற்கையாயிருக்கும். அவன் துணிந்து வேறு துறைகளிலிருந்த போதிலும் புலன்கள் அவனை இழுத்துச் செய்கையிலேயே கொண்டு வந்து நிறுத்தும். இந்திரியங்களை அடக்கி ஞான நிலையில் நிற்கும் திறமை வாய்ந்தவனும் கர்மங்களையே செய்யக் கடவன். ஏனெனில், இவனது உண்மை நிலையறியாத பாமரர்களும், இவனைக் கண்டு தாங்களும் கர்மங்களைவிட்டு ஞானத்துறையில் துணிவுறுவார்கள். அதனால் அவர்கள் கர்மயோகத்தையிழந்ததுமின்றி ஞானயோகத்தையுமிழந்து முன்னிலும் தாழ்ந்த நிலைமைக்கு வந்துவிடுவார்கள். அவர்கள் | |

| | |
|---|---|
| கெடுவதற்கு இவனே காரணமாவான். ஆகையால் ஞான யோகத்தில் திறமையுள்ளவனுக்கும், திறமையில்லாதவனுக்கும், கர்மயோகமே மேலானது. கர்மங்களைச் செய்யும்போது, 'இந்நிலைமை எனக்கு பிரகிருதி சம்பந்தத்தால் வந்தேறியதென்றும் ஈசுவரனுடைய கட்டளையினால் அவனுதவியைக் கொண்டு அவனுடைய பிரீதிக்காகவே செய்கிறோம்', என்றும் எண்ணிச் செய்ய வேண்டும். அர்ஜுனன் சொல்லுகிறான்:<br>Bhagavadgītā Chapter III<br>by Dr. Radhakrishnan<br>*Karma Yoga or the Method of Work*<br>*Why then work at all?* | |
| Bharathi-Project Madurai | Dr. Radhakrishnan |
| 3.1. ஜநார்த்தன! செய்கையைக் காட்டிலும் புத்தியே சிறந்ததென்பது நின் கொள்கையாயின் இந்தக் கொடிய செய்கையில் என்னைப் புகுத்துவதென்னே, கேசவா? | (3.1) If thou deemest that (the path of) understanding is more excellent than (the path of) action, O Janārdana (Kṛṣṇa), why then dost thou urge me to do this savage deed, O Keśava (Kṛṣṇa)? |
| 2. குழப்பமான பேச்சினால் என் புத்தியை மயங்கச் செய்கிறாய். ஆதலால் எது எனக்கு நன்மை தருமென்பதை உறுதிப்படுத்தி ஒரே வார்த்தையாகச் சொல். ஸ்ரீபகவான் சொல்லுகிறான்: | (3.2) With an apparently confused utterance thou seemest to bewilder my intelligence. Tell (me) then decisively the one thing by which I can attain to the highest good. |
| 3.3. பாபமொன்றுமில்லாத அர்ஜுனா, இவ்வுலகத்தில் இரண்டுவித நிஷ்டை முன்னர் என்னால் கூறப்பட்டது, | *The Blessed Lord* said:<br>(3.3) O, blameless One, in this world a two-fold way of life has been taught of yore by Me, the path of knowledge for men of contemplation and that of works for men of action. |

| | |
|---|---|
| ஸாங்கியர்களின் ஞானயோகத்தால் எய்துவது, யோகிகளின் கர்ம யோகத்தால் எய்துவது என. | |
| 4. தொழில்களைத் தொடாமலேயிருப்பதனால் மனிதன் செயலற்ற நிலை அடைவதில்லை. துறவினாலேயே மனிதன் ஈடேற்றம் பெற்றுவிட மாட்டான். | (3.4) Not by abstention from work does a man attain freedom from action; nor by mere renunciation does he attain to his perfection. |
| 5. எவனும் ஒரு கணப்பொழுதேனும் செய்கையின்றிருப்பதில்லை. இயற்கையில் விளையும் குணங்களே எல்லா உயிர்களையும் அவசரமாகத் தொழில் புரிவிக்கின்றன. | (3.5) For no one can remain even for a moment without doing work; everyone is made to act helplessly by the impulses born of nature. |
| 3.6. கர்மேந்திரியங்களை அடக்கிக்கொண்டு, ஆனால் இந்திரிய விஷயங்களை மனத்தால் ஸ்மரித்துக் கொண்டிருப்போனாகிய மூடாத்மா பொய்யொழுக்கமுடையவனென்று சொல்லப்படுகிறான். | (3.6) He who restrains his organs of action but continues in his mind to brood over the objects of sense, whose nature is deluded is said to be a hypocrite (a man of false conduct). |
| 7. அர்ஜுனா! எவன் இந்திரியங்களை மனத்தால் கட்டுப்படுத்திக் கொண்டு, | (3.7) But he who controls the senses by the mind, O Arjuna, and without attachment engages the organs of action in the path of work, he is superior. |

| | |
|---|---|
| கர்மேந்திரியங்களால் கர்ம யோகம் பண்ணுகிறானோ, அவன் சிறந்தவன். | |
| 8. விதிக்கப்பட்ட தொழிலை நீ செய். தொழில் தொழிலின்மையைக் காட்டிலும் சிறந்ததன்றோ? தொழிலின்றி இருப்பதால் உடம்பைக் கொண்டு செலுத்துதல்கூட உனக்கில்லாமல் போய்விடும். | (3.8) Do thou thy allotted work, for action is better than inaction; even the maintenance of thy physical life cannot be effected without action. |
| 9. வேள்வியின் பொருட்டென்று செய்யப்படுவது தவிர மற்றைத் தொழில் மனிதருக்குத் தளையாகிறது. ஆதலால், குந்தி மகனே, பற்றை களைந்து தொழில் செய்து கொண்டிரு. | (3.9) Save work done as and for a sacrifice this world is in bondage to work. Therefore, O son of Kuntī (Arjuna), do thy work as a sacrifice, becoming free from all attachment. |
| 10. முன்பு பிரம்மதேவன் வேள்வியுடனே உயிர்க்குலத்தை ஒருமிக்கப் படைத்துச் சொல்லினான்: "இதனால் பல்குவீர்கள், நீங்கள் விரும்பும் விருப்பங்களையெல்லாம் உங்களுக்கிது கறந்து தரும். | (3.10) In ancient days the Lord of creatures created men along with sacrifice and said, "By this shall ye bring forth and this shall be unto you that which will yield the milk of your desires." |
| 11. இதனால் தேவர்களைக் கருதக் கடவீர்; அந்த தேவர் உங்களைக் கருதக் கடவர்; | (3.11) By this foster ye the gods and let the gods foster you; thus fostering each other you shall attain to the supreme good. |

| | |
|---|---|
| (இங்ஙனம்) பரஸ்பரமான பாவனை செய்வதனால் உயர்ந்த நலத்தை எய்துவீர்கள். | |
| 3.12. வேள்வியில் பாவனை செய்யப்பட்ட தேவர் உங்களுக்கு விரும்பிய போகங்களையெல்லாம் தருவர். அவர்களுக்குக் கைம்மாறு செலுத்தாமல் அவர்கள் கொடுப்பதை உண்போன் கள்வனேயாவான். | (3.I2) Fostered by sacrifice the gods will give you the enjoyments you desire. He who enjoys these gifts without giving to them in return is verily a thief. |
| 3.13. வேள்வியின் மிச்சத்தை யுண்ணும் நல்லோர் எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுகிறார்கள். தம்பொருட்டென்று மாத்திரமே உணவு சமைக்கும் பாவிகள் பாவத்தை உண்ணுகிறார்கள். | (3.13) The good people who eat what is left from the sacrifice are released from all sins but those wicked people who prepare food for their own sake-verily they eat sin. |
| 3.14. அன்னத்தால் உயிர்கள் சமைகின்றன. மழையால் உணவு தோன்றுகிறது. மழை வேள்வியால் ஆகிறது. வேள்வி செய்கையினின்று பிறப்பது. | (3.14) From food creatures come into being; from rain is the birth of food; from sacrifice rain comes into being and sacrifice is born of work. |
| 3.15. செய்கை பிரம்மத்தினின்றும் பிறப்பதென்றுணர். பிரம்மம் | (3.15) Know the origin of karma (of the nature of sacrifices) to be in Brahma (the Veda) and the Brahma springs from the Imperishable. |

| | |
|---|---|
| அமிர்தத்தில் தோன்றுகிறது. ஆதலால் எங்கும் நிறைந்த பிரம்மம் எப்போதும் வேள்வியில் நிலைபெற்றது. | Therefore, the Brahma, which comprehends all, ever centers round the sacrifice. |
| 3.16. இங்ஙனம் சுழலும் வட்டத்தை இவ்வுலகில் பின்பற்றி ஒழுகாதோன் பாப வாழ்க்கையுடையான், புலன்களிலே களித்தான்; பார்த்தா, அவன் வாழ்க்கை விழலேயாம். | (3.I6) He who does not, in this world, help to turn the wheel thus set in motion, is evil in his nature, sensual in his delight, and he, O Partha (Arjuna), lives in vain. |
| 3.17. தன்னிலே தான் இன்புறுவான், தன்னிலே தான் திருப்தியடைவான், தன்னிலே தான் மகிழ்ந்திருப்பான், அவனுக்குத் தொழிலில்லை. | (3.17) But the man whose delight is ill the Self alone, who is content with the Self, who is satisfied with the Self, for him there exists no work that needs to be done. |
| 3.18. அவனுக்குச் செய்கையில் யாதொரு பயனுமில்லை; செயலின்றி இருப்பதிலும் அவனுக்குப் பயனில்லை; எவ்விதப் பயனையுங் கருதி அவன் எந்த உயிரையுஞ் சார்ந்து நிற்பதில்லை. | (3.I8) Similarly, in this world he has no interest 'whatever to gain by the actions that he has done and none to be gained by the actions that he has not done. He does not depend on all these beings for any interest of his. |
| 3.19. ஆதலால் எப்போதும் பற்று நீங்கிச் செய்யத்தக்க தொழிலைச் செய்து கொண்டிரு. பற்றில்லாமல் தொழில் செய்து | (3.I9) Therefore, without attachment, perform always the work that has to be done, for man attains to the highest by doing work without attachment. |

| | |
|---|---|
| கொண்டிருக்கும் மனிதன் பரம்பொருளை எய்துகிறான். | |
| 3.20. ஜனகன் முதலியோர் செய்கையாலேயே சித்தி பெற்றார்கள். உலக நன்மையைக் கருதியும் நீ தொழில் புரிதல் தகும். | (3.20) It was even by works that Janaka and others attained to perfection. Thou shouldst do works also with a view to the maintenance of the world. |
| 3.21. எதனையெதனை உயர்ந்தோன் செய்கிறானோ, அதையே மற்ற மனிதர் பின்பற்றுகிறார்கள். அவன் எதைப் பிரமாணமாக்குகிறானோ, அதையே உலகத்தார் தொடருகிறார்கள். | (3.21) Whatsoever a great man does, the same is done by others as well. Whatever standard he sets, the world follows. |
| 3.22. பார்த்தா! மூன்றுலகத்திலும் எனக்கு யாதொரு கடமையுமில்லை. நான் பெற்றிராத பேறுமில்லை. எனினும் நான் தொழிலிலேதான் இயங்குகிறேன். | (3.22) There is not for me, O Partha (Arjuna), any work in the three worlds which has to be done nor anything to be obtained which has not been obtained; yet I am engaged in work. |
| 3.23. நான் சோம்பரில்லாமல் எப்போதும் தொழில் செய்து கொண்டிராவிடின், பார்த்தா, எல்லாப் பக்கங்களிலும் மனிதர் என் வழியையே பின்பற்றுவார்கள். | (3.23) For, if ever I did not engage in work unwearied, O Partha (Arjuna), men in every way follow my path. |

| | |
|---|---|
| 3.24. நான் தொழில் செய்யாவிட்டால், இந்த ஜனங்களெல்லோரும் அழிந்து போவார்கள்; குழப்பத்தை நான் ஆக்கியோன் ஆவேன்; இந்த மக்களையெல்லாங் கொல்வோனாவேன். | (3.24) If I should cease to work, these worlds would fall in ruin and I should be the creator of disordered life and destroy these people. |
| 3.25. பாரதா! அறிவில்லாதார் செய்கையில் பற்றுடையோராய் எப்படித் தொழில் செய்கிறார்களோ அப்படியே அறிவுடையோன் பற்றை நீக்கி உலக நன்மையை நாடித் தொழில் செய்ய வேண்டும். | (3.25) As the unlearned act from attachment to their work, so should the learned also act, O Bharata (Arjuna), but without any attachment, with the desire to maintain the world-order. |
| 3.26. அறிவுடையோன் தொழிலில் பற்றுதல் கொண்ட அஞ்ஞானிகளுக்கு புத்தி பேதம் விளைவிக்கக் கூடாது. அவன் யோகத்தில் நின்று தொழில் செய்து எல்லாத் தொழில்களையும் கவர்ச்சியுடையனவாக்க வேண்டும். | (3.26) Let him (jñānin) not unsettle the minds of the ignorant who are attached to action. The enlightened man doing all works in a spirit of yoga, should set others to act (as well). |
| 3.27. எங்கும் தொழில்கள் இயற்கையின் குணங்களால் செய்யப்படுகின்றன. அகங்காரத்தால் மயங்கியவன், "நான் | (3.27) While all kinds of work are done by the modes of nature, he whose soul is bewildered by the self-sense thinks "I am the doer." |

| | |
|---|---|
| செய்கிறேன்" என்று நினைக்கிறான். | |
| 3.28. குணம், செய்கை இவற்றினுடைய பிரிவுகளின் உண்மையறிந்தோன், 'குணங்கள் குணங்களில் இயலுகின்றன' என்று கருதிப் பற்றற்றிருப்பான். | (3.28) But he who knows the true character of the two distinctions (of the soul) from the modes of nature and their works, O Mighty-armed (Arjuna), understanding that it is the modes which are acting on the modes, does not get attached. |
| 3.29. இயற்கையில் குணங்களால் மயங்கியவர்கள் குணங்களிலும் தொழில்களிலும் பற்றுதலடைகிறார்கள். சிற்றறிவுடைய அந்த மனிதர்களை முழுதுணர்ந்த ஞானி உழல்விக்கக்கூடாது. | (3.29) Those who are misled by the modes of nature get attached to the works produced by them. But let no one who knows the whole unsettle the minds of the ignorant who know only a part. |
| 3.30. எல்லாச் செய்கைகளையும் உள்ளறிவினால் எனக்கு அர்ப்பணமாகத் துறந்துவிட்டு, ஆசை நீங்கி, எனது என்பது அற்று, மனக் காய்ச்சல் தீர்ந்தவனாய்ப் போர் செய்யக் கடவாய். | (3.30) Resigning all thy works to Me, with thy consciousness fixed in the Self, being free from desire and egoism, fight, delivered from thy fever. |
| 3.31. என்னுடைய இந்த நித்தியமான கொள்கையை எந்த மனிதர் சிரத்தையுடையோராய்ப் பொறாமையின்றிப் பின்பற்றுகிறார்களோ, | (3.3I) Those men, too, who, full of faith and free from cavil, constantly follow this teaching of Mine are released from (the bondage of) works. |

| | |
|---|---|
| அவர்களும் தொழில்களிலிருந்து விடுபடுகிறார்கள். | |
| 3.32. என்னுடைய இக்கொள்கையை யாவர் பொறாமையால் பின்பற்றாது விடுகிறார்களோ, எவ்வித ஞானமுமில்லாத அம்மூடர்களை நாசமடைந்தோராகவே தெரிந்து கொள். | (3.32) But those who slight My teaching and do not follow it, know them to be blind to all wisdom, lost and senseless. |
| 3.33. ஞானமுடையவன்கூடத் தன் இயற்கைக்குத் தக்கபடியே நடக்கிறான். உயிர்கள் இயற்கைப்படி நடக்கின்றன. அடக்குதல் பயன்படாது. | (3.33) Even the man of knowledge acts in accordance with his own nature. Beings follow their nature. What can repression accomplish? |
| 3.34. இந்திரியத்துக்கு இந்திரிய விஷயத்தில் விருப்பு வெறுப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்விரண்டுக்கும் ஒருவன் வசப்படலாகாது. இவை இவனுக்கு வழித் தடைகளாம். | (3.34) For (every) sense attachment and aversion are fixed (in regard) to the objects of (that) sense. Let no one come under their sway for they are his (two) waylayers. |
| 3.35. நன்றாகச் செய்யப்படும் பர தர்மத்தைக் காட்டிலும் குணமற்றதெனினும், ஸ்வதர்மமே சிறந்தது. ஸ்வதர்மத்தில் | (3.35) Better is one's own law though imperfectly carried out than the law of another carried out perfectly. Better is death in (the fulfilment of) one's own law for to follow another's law is perilous. |

| | |
|---|---|
| இறந்துவிடினும் நன்றேயாம். பர தர்மம் பயத்துக்கிடமானது. அர்ஜூனன் சொல்லுகிறான்: | |
| 3.36. விருஷ்ணி குலத் தோன்றலே! மனிதனுக்கு இச்சையில்லாதபோதும் அவனை வலியக் கொண்டு புகுத்துவது போல் தூண்டிப் பாவம் செய்விப்பது யாது? பகவான் சொல்லுகிறான்: | *Arjuna* said:<br>(3.36) But by what is a man impelled to commit sin, as if by force, even against his will, O Vārṣṇeya (Kṛṣṇa)? |
| 3.37. இஃது விருப்பமும் சினமும், ரஜோ குணத்திற் பிறப்பது; பேரழிவு செய்வது; பெரும்பாவம். இதனை இங்கு சத்துருவாகத் தெரிந்து கொள். | *The Blessed Lord* said:<br>(3.37) This is craving, this is wrath, born of the mode of passion, all devouring and most sinful. Know this to be the enemy here. |
| 3.38. புகையினால் தீ சூழப்பட்டிருப்பது போலவும், கண்ணாடி அழுக்கால் மாசு படுவது போலவும், கர்ப்பத்தைக் கருப்பை சூழ்ந்திருப்பது போலவும் இது இவ்வுலகைச் சூழ்ந்திருக்கிறது. | (3.38) As fire is covered by smoke, as a mirror by dust, as an embryo is enveloped by the womb, so is this covered by that (passion). |
| 3.39. குந்தியின் மகனே, விருப்பமெனப்படும் இந் நிரப்பொணாத் தீ, ஞானிக்கு நித்தியப் பகையாய் ஞானத்தைச் சூழ்ந்து நிற்கிறது. | (3.39) Enveloped is wisdom, O Son of Kunti (Arjuna), by this insatiable fire of desire, which is the constant foe of the wise. |

| | |
|---|---|
| 3.40. இந்திரியங்களும், மனமும், புத்தியும் இதற்கு நிலைக்களன் என்பர். இவற்றால் இது ஞானத்தைச் சூழ்ந்து மனிதனை மயங்குவிக்கிறது. | (3.40) The senses, the mind and the intelligence are said to be its seat. Veiling wisdom by these, it deludes the embodied (soul). |
| 3.41. ஆதலால் பாரத ரேறே, நீ தொடக்கத்தில் இந்திரியங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு ஞானத்தையும் விஞ்ஞானத்தையும் அழிப்பதாகிய இந்த பாவத்தைக் கொன்று விடு. | (3.41) Therefore, O Best of Bharatas (Arjuna), control thy senses from the beginning and slay this sinful destroyer of wisdom and discrimination. |
| 3.42. இந்திரியங்களை உயர்வுடையன வென்பர். அவற்றிலும் மனம் மேல்; மனத்தைக் காட்டிலும் புத்தி மேல்; புத்திக்கு மேலே அவன் (ஆத்மா). | (3.42) The senses, they say, are great, greater than the senses is the mind, greater than the mind is the intelligence but greater than the intelligence is he. |
| 3.43. இங்ஙனம் புத்திக்கு மேலான பொருளை (ஆத்மாவை) உணர்ந்து, தன்னைத்தான் உறுதிப்படுத்திக் கொண்டு, வெல்லற்கரிய விருப்பமாம் பகையைக் கொல்லக் கடவாய், பெருந்தோளுடையாய்! | (3.43) Thus knowing him who is beyond the intelligence, steadying the (lower) self by the Self, smite, O Mighty-armed (Arjuna), the enemy in the form of desire, so hard to get at. |
| பகவத் கீதை : நான்காம் அத்தியாயம்<br>ஞான கர்ம சந்யாச யோகம் | |

| |
|---|
| அர்ஜுனா, உன்னை ஏமாற்றிச் சண்டையில் உற்சாக மூட்டுவதற்காக உன்னைக் கர்ம யோகத்தில் தூண்டுகிறேன் என்று எண்ணாதே. உலகத்தை படைக்கும் போதே இக்கர்ம யோகத்தை நான் மனுவுக்கு உபதேசித்தேன். பிறகு மனுவின் வழியாக உலகில் அது பரவிற்று' என்று சொல்லிக் கண்ணன் தனது அவதார ரகசியத்தைக் கூறுகிறான். பிறகு கர்ம யோகத்தின் பிரிவுகளையும் அவற்றுள்ளடங்கிய ஆத்ம ஞானத்தின் பெருமையையும் விளக்குகிறான். கர்மயோகம் ஞான பாகத்தை உள்ளடைக்கிக் கொண்டிருப்பதால் அதுவே ஞான யோகத்தின் பலனையும் அளிக்கும் என்று கூறுகிறான். ஸ்ரீபகவான் சொல்லுகிறான்:<br><br>CHAPTER IV<br>The Way of Knowledge<br>The Tradition of jñāna Yoga |

| | |
|---|---|
| 4.1. இந்த அழிவற்ற யோகத்தை நான் முன்னர் விவஸ்வானுக்குச் சொன்னேன். விவஸ்வான் மனுவுக்குச் சொன்னான். மனு இக்ஷ்வாகு ராஜனுக்குக் கூறினான். | 4.1. I proclaimed this imperishable yoga to Vivasvān; Vivasvān told it to Manu and Manu spoke it to Ikṣvāku. |
| 4.2. இவ்வாறு பரம்பரையாகக் கிடைத்த இதனை ராஜரிஷிகள் உணர்ந்திருந்தனர். பார்த்தா! அந்த யோகம் கால மிகுதியால் இவ்வுலகத்தில் இழக்கப்பட்டது. | 4.2. Thus handed down from one to another the royal sages knew it till that yoga was lost to the world through long lapse of time, O Oppressor of the foe (Arjuna). |
| 4.3. அந்தப் பழைய யோகத்தையே இன்று நான் உனக்குச் சொன்னேன், நீ என் பக்தனும் | 4.3. This same ancient yoga has been today declared to thee by Me; for thou art My devotee and My friend; and this is the supreme secret, |

| | |
|---|---|
| தோழனுமென்பது கருதி, இது மிகவும் உயர்ந்த ரகசியம். அர்ஜுனன் சொல்லுகிறான்: | |
| 4.4. உன் பிறப்புப் பிந்தியது; விவஸ்வானுடைய பிறப்பு முந்தியது. நீ இதை ஆதியில் சொன்னவனென்று நான் தெரிந்து கொள்வதெப்படி? ஸ்ரீபகவான் சொல்லுகிறான்: | Arjuna said:<br>4.4. Later was Thy birth and earlier was the birth of Vivasvat. How then am I to understand that thou didst declare it to him in the beginning? |
| 4.5. அர்ஜுனா! எனக்குப் பல ஜன்மங்கள் கழிந்திருக்கின்றன. உனக்கும் அப்படியே. பார்த்தா! நான் அவற்றை எல்லாம் அறிவேன்; நீ அவற்றை அறிகிலை. | The Blessed Lord said:<br>4.5. Many are My lives that are past, and thine also, O Arjuna; all of them I know but thou knowest not, O Scourge of the foe (Arjuna). |
| 4.6. பிறப்பற்றே னெனினும், அழிவற்றே னெனினும், உயிர்களுக்கெல்லாம் ஈசனே யெனினும், யான் எனது பிரகிருதியில் நிலைபெற்று ஆத்ம மாயையால் பிறப்பெய்துகிறேன். | 4.6. Though (I am) unborn, and Myself (is) imperishable, though (I am) the lord of all creatures, yet establishing Myself in My own nature, I come into (empiric) being through My power (māyā). |
| 4.7. பார்த்தா! எப்போதெப்போது தர்மம் அழிந்துபோய் அதர்மம் எழுச்சி பெறுமோ, அப்போது நான் என்னைப் பிறப்பித்துக் கொள்ளுகிறேன். | 4.7. Whenever there is a decline of righteousness and rise of unrighteousness, O Bharata (Arjuna), then I send forth (create incarnate) Myself |

| | |
|---|---|
| 4.8. நல்லோரைக் காக்கவும், தீயன் செய்வோரை அழிக்கவும், அறத்தை நிலைநிறுத்தவும் நான் யுகந்தோறும் பிறக்கிறேன். | 4.8. For the protection of the good, for the destruction of the wicked and for the establishment of righteousness, I come into being from age to age. |
| 4.9. எனது தெய்வத்தன்மை கொண்ட பிறப்பும் செய்கையும் இங்ஙனமென்பதை உள்ளபடி யுணர்வோன் உடலைத் துறந்த பின்னர் மறு பிறப்பு எய்துவதில்லை. அர்ஜுனா! அவன் என்னை எய்துகிறான். | 4.9. He who knows thus in its true nature My divine birth and works, is not born again, when he leaves his body but comes to Me, O Arjuna. |
| 4.10. விருபத்தையும், அச்சத்தையும் சினத்தையும் துறந்தோராய் என் மயமாய், என்னை அடைக்கலம் புகுந்து ஞானத் தவத்தால் தூய்மை பெற்று என்னியல்பு எய்தினோர் பலர். | 4.10. Delivered from passion, fear and anger, absorbed in Me, taking refuge in Me, many purified by the austerity of wisdom, have attained to My state of being. |
| 4.11. யாவர் என்னை எங்ஙனம் வேண்டுகிறார்களோ அவர்களை நான் அங்ஙனமே சார்கிறேன். பார்த்தா! மனிதர் யாங்கணும் என் வழியையே பின்பற்றுகிறார்கள். | 4.11. As men approach me so do I accept them: men on all sides follow my path, O Partha (Arjuna). |

| | |
|---|---|
| 4.12. தொழில்களில் வெற்றியை விரும்புவோர் இங்கு தேவதைகளைப் பூஜை செய்கிறார்கள். மனிதவுலகத்தில் தொழிலினின்றும் வெற்றி விரைவில் விளைவதன்றோ! | 4.12. Those who desire the fruition of their works on earth offer sacrifices to the gods (the various forms of the one Godhead) for the fruition of works in this world of men is very quick. |
| 4.13. குணத்துக்கும் செய்கைக்கும் தக்கபடி நான் நான்கு வர்ணங்களைச் சமைத்தேன். செய்கையற்றவனும் அழிவற்றவனுமாகிய யானே அவற்றைச் செய்தோனென்றுணர். | 4.13. The fourfold order was created by Me according to the divisions of quality and work. Though I am its creator, know Me to be incapable of action or change. |
| 4.14. என்னைக் கர்மங்கள் ஒட்டுவதில்லை. எனக்குக் கர்மப் பயனில் விருப்பமில்லை. இங்ஙனம் என்னையறிவோன் கர்மங்களால் கட்டப்பட மாட்டான். | 4.14. Works do not defile Me; nor do I have yearning for their fruit. He who knows Me thus is not bound by works. |
| 4.15. முற்காலத்தில் முக்தியை வேண்டினோரும் இதையுணர்ந்து தொழிலே செய்தனர். ஆதலால் முன்னோர்கள் முன்பு செய்தபடி, நீயும் தொழிலையே செய்யக்கடவாய். | 4.15. So knowing was work done also by the men of old who sought liberation. Therefore, do thou also work as the ancients did in former times. |

| | |
|---|---|
| 4.16. 'எது தொழில்; எது தொழிலல்லாதது' என்ற விஷயத்தில் ஞானிகளும் மயக்கமெய்துகிறார்கள். ஆதலால் உனக்குத் தொழிலினியல்பை உணர்த்துகிறேன். இதை அறிவதனால் தீங்கினின்றும்விடுபடுவாய். | 4.16. What is action? What is inaction? —as to this even the wise are bewildered. I will declare to thee what action is, knowing which thou shalt be delivered from evil. |
| 4.17. தொழிலின் இயல்புந் தெரியவேண்டும்; தொழிற்கேட்டின் இயல்புந் தெரியவேண்டும்; தொழிலின்மையின் இயல்புந் தெரியவேண்டும்; கர்மத்தின் நடை மிகவும் சூழ்ந்தது. | 4.17. One has to understand what action is, and likewise one has to understand what is wrong action and one has to understand about inaction. Hard to understand is the way of work. |
| 4.18. செய்கையில் செயலின்மையும், செயலின்மையில் செய்கையும் எவன் காணுகிறானோ, அவனே மனிதரில் அறிவுடையோன்; அவன் எத்தொழில் செய்கையிலும் யோகத்திலிருப்பான். | 4.18. He who in action sees inaction and action in inaction, he is wise among men, he is a yogin and he has accomplished all his work. |
| 4.19. எவனுடைய செய்கைத் தொடக்கங்களெல்லாம் விருப்பு நினைவு தவிர்ந்தனவோ, அவனுடைய செயல்கள் ஞானத் தீயால் | 4.19. He whose undertakings are all free from the will of desire, whose works are burned up in the fire of wisdom, him the wise call a man of learning. |

| | |
|---|---|
| எரிக்கப்பட்டனவாம்; அவனை ஞானிகள் அறிவுடையோனென்கிறார்கள். | |
| 4.20. கர்மப் பயனிலே பற்றுக் களைந்தவனாய் எப்போதும் திருப்தியுடையோனாய் எதனிலும் சார்பற்று நிற்போன் செய்கை செய்து கொண்டிருக்கையிலும் செயலற்றவனாவான். | 4.20. Having abandoned attachment to the fruit of works, ever content, without any kind of dependence, he does nothing though he is ever engaged in work. |
| 4.21. ஆசையற்றவனாய், சித்தத்தை ஆத்மாவால் கட்டுப்படுத்தி, எவ்வித தானங்களும் வாங்குவதைத் துறந்து, வெறுமே சரீரத் தொழில் மாத்திரம் செய்து கொண்டிருப்போன் பாவத்தையடைய மாட்டான். | 4.2I. Having no desires, with his heart and self under control, giving up all possessions, performing action by the body alone, he commits no wrong. |
| 4.22. தானாக வந்தெய்தும் லாபத்தில் சந்தோஷமுறுவோனாகி, இருமைகளைக் கடந்து, பொறாமையற்றவனாய் -- வெற்றியிலும் தோல்வியிலும் சமநிலை பெற்றான் தொழில் செய்தாலும் அதனால் கட்டுப்படுவதில்லை. | 4.22. He who is satisfied with whatever comes by chance, who has passed beyond the dualities (of pleasure and pain), who is free from jealousy, who remains the same in success and failure, even when he acts, he is not bound. |

| | |
|---|---|
| 23. பற்றுதலகன்றான், விடுதலை கொண்டான், ஞானத்தில் மதி நிலைக்கப் பெற்றான். வேள்வியெனக் கருதித் தொழில் புரிவான் -- அவனுடைய கர்மமெல்லாம் தானே நழுவிப் போய்விடுகிறது. | 4.23. The work of a man whose attachments are sundered, who is liberated, whose mind is firmly founded in wisdom, who does work as a sacrifice, is dissolved entirely. |
| 4.24. பிரம்மத்துக்கு அர்ப்பணமாக பிரம்ம அவியை பிரம்மத் தீயில் பிரம்மத்தால் ஓமம் பண்ணுவோன், பிரம்மத்தின் செய்கையில் சமாதான மெய்டினோன், அவன் பிரம்மத்தை அடைவான். | 4.24. For him the act of offering is God, the oblation is God. By God is it offered into the fire of God. God is that which is to be attained by him who realizes God in his works. |
| 4.25. சில யோகிகள் தேவருக்குச் செய்யப்படும் வேள்வியை வழிபடுகிறார்கள். வேறு சிலர் பிரம்மத் தீயில் வேள்வியையே ஆகுதி செய்து வேட்கின்றனர். | 4.25. Some yogins offer sacrifices to the gods while others offer sacrifice by the sacrifice itself into the fire of the Supreme.<br>S. interprets yajña in the second half of the verse as atman. |
| 4.26. வேறு சிலர் உட்கரணத்தை யடக்குதலாகிய சம்யமம் என்ற தீயில் செவி முதலிய இந்திரியங்களை ஆகுதி செய்கிறார்கள். வேறு சிலர் இந்திரியங்களாகிய தழல்களில் ஒலி முதலிய | 4.26. Some offer hearing and the other senses into the fires of restraint; others offer sound and the other objects of sense in the fires of sense. |

| | |
|---|---|
| விஷயங்களைச் சொரிகிறார்கள். | |
| 4.27. வேறு சிலர் ஞானத்தால் கொளுத்துண்ட தன்னாட்சியென்ற யோகத்தீயில் எல்லா இந்திரியச் செயல்களையும் உயிர்ச் செயல்களையும் ஓமம் பண்ணுகிறார்கள். | 4.27. Some again offer all the works of their senses and the works of the vital force into the fire of the yoga of self-control, kindled by knowledge. |
| 4.28. விரதங்களை நன்கு பாதுகாக்கும் முனிகளில் வேறு சிலர் திரவியத்தால் வேள்வி செய்வோர்; சிலர் தவத்தால் வேட்போர்; சிலர் யோகத்தால் வேட்போர்; சிலர் கல்வியால் வேட்போர்; சிலர் ஞானத்தால் வேட்போர். | 4.28. Some likewise offer as sacrifice their material possessions. or their austerities or their spiritual exercises while others of subdued minds and severe vows offer their learning and knowledge. |
| 4.29. இனி வேறு சிலர் பிராணாயாமத்தில் ஈடுபட்டவர்களாய் பிராணன், அபானன் என்ற வாயுக்களின் நடையைக் கட்டுப்படுத்தி அபானவாயுவில் பிராணவாயுவையும், பிராணவாயுவில் அபானத்தையும் ஆகுதி பண்ணுகிறார்கள். | 4.29. Others again who are devoted to breath control, having restrained the paths of prāṇa (the outgoing breath) and apāna (the incoming breath) pour as sacrifice prāṇa into apāna and apāna into prāṇa. |
| 4.30. வேறு சிலர் உணவை ஒழுங்குபடுத்தி உயிரை உயிரில் ஆகுதி | 4.30. While others, restricting their food, pour as sacrifice their life breaths into life breaths. All these are knowers of sacrifice (know what sacrifice is) and by sacrifice have their sins destroyed. |

| | |
|---|---|
| செய்கிறார்கள். இவ்வனைவரும் வேள்வி நெறியுணர்ந்து வேள்வியால் பாவமற்றுப் போயினோர். | |
| 4.31. வேள்வியில் மிஞ்சிய அமுதை யுண்போர் என்று முளதாகிய பிரம்மத்தை எய்துகிறார்கள். வேள்வி செய்யாதோருக்கிவுலகமில் லை. அவர்களுக்குப் பரலோகமேது. க்ருகுலத்தாரில் சிறந்தோய்! | 4.31. Those who eat the sacred food that remains after a sacrifice attain to the eternal Absolute; this world is not for him who offers no sacrifice, how then any other world, O Best of the Kurus (Arjuna)? |
| 4.32. பிரம்மத்தின் முகத்தில் இங்ஙனம் பலவித வேள்விகள் விரித்துக் காட்டப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் தொழிலிலே பிறப்பனவென்றுணர். இவ்வாறுணர்ந்தால் விடுதலை பெறுவாய். | 4.32. Thus many forms of sacrifice are spread out in the face of Brahman (Le. set forth as the means of reaching the Absolute) Know thou that all these are born of work , and so knowing thou shalt be freed. |
| 4.33. பார்த்தா! திரவியத்தைக் கொண்டு செய்யப்படும் வேள்வியைக் காட்டிலும் ஞானவேள்வி சிறந்தது. பார்த்தா! கர்மமெல்லாம், முற்றிலும், ஞானத்தில் முடிவு பெறுகிறது. | (4.33) Knowledge as a sacrifice is greater than any material sacrifice, 0 scourge of the foe (Arjuna), for all works without any exception culminate in wisdom. |
| 4.34. அதனை வணக்கத்தாலும், சூழ்ந்த வேள்வியாலும், தொண்டு | (4.35) When thou hast known it, thou shalt not fall again into this confusion, O Paṇḍava (Arjuna), for by this thou shalt see all existences without exception in the Self, then in Me. |

| | |
|---|---|
| புரிவதாலும் அறிந்து கொள். உண்மை காணும் ஞானிகள் உனக்கு ஞானத்தை உபதேசிப்பார்கள். | |
| 4.35. அந்த ஞானம் பெறுவதனால், பாண்டவா, நீ அப்பால் இவ்வித மயக்கமெய்தமாட்டாய். இதனால் நீ எல்லா உயிர்களையும், மிச்சமன்றி நின்னுள்ளே காண்பாய். அப்பால் அவற்றை என்னுள்ளே காண்பாய். | (4.35) When thou hast known it, thou shalt not fall again into this confusion, O Paṇḍava (Arjuna), for by this thou shalt see all existences without exception in the Self, then in Me. |
| 4.36. பாவிகளெல்லாரைக் காட்டிலும் நீ அதிகப் பாவியாக இருந்தாலும், அப்பாவத்தையெல்லாம் ஞானத் தோணியால் கடந்து செல்வாய். | (4.36) Even if thou shouldst be the most sinful of all sinners, thou shalt cross over all evil by the boat of wisdom alone. |
| 4.37. நன்கு கொளுத்துண்ட தீ விறகுகளைச் சாம்பலாக்கிவிடுதல் போலவே, அர்ஜுனா! ஞானத் தீ எல்லா வினைகளையும் சாம்பலாக்கிவிடும். | (4.37) As the fire which is kindled turns its fuel to ashes, O Arjuna, even so does the fire of wisdom tum to ashes all work. |
| 4.38. ஞானத்தைப் போல் தூய்மை தரும் பொருள் இவ்வுலகத்தில் வேறெதுவுமில்லை. யோகத்தில் நல்ல சித்தியடைந்தவன் | (4.38) There is nothing on earth equal in purity to wisdom. He who becomes perfected by yoga finds this of himself, in his self in course of time. |

| | |
|---|---|
| தானாகவே தக்க பருவத்தில் அதைத் தனக்குள் கிடைக்கப் பெறுகிறான். | |
| 4.39. பிரம்மத்தைப் பரமாகக் கொண்டு, இந்திரியங்களைக் கட்டுப்படுத்தியவனாய், சிரத்தையுடையோன் ஞானத்தையடைகிறான். ஞானத்தை அடைந்தபின் விரைவிலே பரசாந்தி பெறுகிறான். | (4.39) He who has faith, who is absorbed in it (i.e. wisdom) and who has subdued his senses gains wisdom and having gained wisdom he attains quickly the supreme peace. |
| 4.40. அறிவும் சிரத்தையுமின்றி ஐயத்தை இயல்பாகக் கொண்டோன் அழிந்து போகிறான். ஐயமுடையோனுக்கு இவ்வுலகமில்லை; மேலுலகமில்லை; இன்பமுமில்லை. | (4.40) But the man who is ignorant, who has no faith, who is of a doubting nature, perishes. For the doubting soul, there is neither this world nor the world beyond nor any happiness. |
| 4.41. யோகத்தால் செய்கைகளைத் துறந்து, ஞானத்தால் ஐயத்தை அறுத்துத் தன்னைத்தான் ஆள்வோனை, தனஞ்ஜயா! கர்மங்கள் கட்டுப்படுத்த மாட்டா! | (4.4l) Works do not bind him who has renounced all works by yoga, who has destroyed all doubt by wisdom and who ever possesses his soul, O winner of wealth (Arjuna). |
| 4.42. அஞ்ஞானத்தால் தோன்றி நெஞ்சில் நிலைகொண்டிருக்கும் இந்த ஐயத்தை உன் ஞான வாளால் அறுத்து யோக | (4.42) Therefore having cut asunder 'with the sword of wisdom this doubt in thy heart that is born of ignorance, resort to yoga and stand up, O Bhārata (Arjuna). |

| | |
|---|---|
| நிலை கொள். பாரத! எழுந்து நில்! | |

பகவத் கீதை : ஐந்தாம் அத்தியாயம்

சந்யாச யோகம்

கர்மயோகத்தில் ஞான பாகமடங்கி இருப்பதாலும், ஞான யோகத்தில் கர்ம பாகமடங்கி யிருப்பதாலும் இரண்டும் ஒன்றே. அவை இரண்டும் ஒரே விதமான பலனைக் கொடுக்கக் கூடியவை. அவை வெவ்வேறு பலனை அளிக்கும் என்று கூறுபவர் பலர். அவர்கள் அறிவில் தேர்ச்சி பெறாதவர்கள். ஆனால், கர்ம யோகமின்றி, ஞானயோகத்தைப் பெற இயலாது. சுக துக்கங்களைப் பொருட்படுத்தாமல் கர்ம யோகத்தையே தழுவியிருந்தால் பலனைக் கடுகப் பெறலாம். எல்லா ஆத்மாக்களும் ஒரே மாதிரியானவை. தோற்றும் வேறுபாடுகளெல்லாம் தேக சம்பந்தத்தால் வந்தவை என்ற உணர்வு வேண்டும். அர்ஜுனன் சொல்லுகிறான்:

## 05 Chapter BG CHAPTER V

## *True Renunciation*

### *Sāṁkhya and Yoga lead to the same goal*

| Bharathi Latha Font | Dr. Radhakrishnan |
|---|---|
| 5.1. கண்ணா! செய்கைகளின் துறவைப் புகழ்ந்து பேசுகிறாய்; பின்னர் அவற்றுடன் கலப்பதைப் புகழ்கிறாய். இவ்விரண்டில் எதுவொன்று சிறந்ததென்பதை நன்கு நிச்சயப்படுத்தி என்னிடஞ் சொல். ஸ்ரீபகவான் சொல்லுகிறான்: | Arjuna said:<br>(5.1) Thou praisest, O Kṛṣṇa, the renunciation of works and again their unselfish performance. Tell me for certain which one is the better of these two. |

| | |
|---|---|
| 5.2. துறவு, கர்ம யோகம், இவ்விரண்டும் உயர்ந்த நலத்தைத் தருவன. இவற்றுள் கர்மத் துறவைக் காட்டிலும் கர்மயோகம் மேம்பட்டது. | The Blessed Lord said:<br>(5.2) The renunciation of works and their unselfish performance both lead to the soul's salvation. But of the two, the unselfish performance of works is better than their renunciation. |
| 5.3. பகைத்தலும் விரும்புதலுமில்லாதவனை நித்திய சந்யாசி என்றுரைக்கக் கடவாய். பெருந்தோலுடையாய், இருமை நீங்கி அவன் எளிதில் பந்தத்தினின்று விடுபடுகிறான். | (5.3) He who neither loathes nor desires should be known as one who has ever the spirit of renunciation; for free from dualities he is released easily, O Mighty-armed (Arjuna), from bondage. |
| 5.4. சாங்கியத்தையும் யோகத்தையும் வெவ்வேறென்று சொல்வோர் குழந்தைகள்; பண்டிதர்கள் அங்ஙனம் கூறார். இவற்றுள் யாதேனுமொன்றில் நன்கு நிலைபெற்றோன் இரண்டின் பயனையும் எய்துகிறான். | 5.4: The ignorant, but not the learned (Panditah) say that Sankhya (yoga) and (karma) yoga are different. He who is firmly established in one gets the benefit of fruits of both. |
| 5.5. சாங்கியர் பெறும் நிலையையே யோகிகளும் பெறுகிறார்கள். சாங்கியத்தையும் யோகத்தையும் எவன் ஒன்றாகக் காண்பானோ, அவனே காட்சியுடையான். | (5) The status which is obtained by men of renunciation is<br>reached by men of action also. He who sees that the ways of<br>renunciation and of action are one, he sees (truly). |
| 5.6. பெருந் தோளாய், யோகமில்லாதவன் | (6) But renunciation, O Mighty-armed (Arjuna), is difficult |

| | |
|---|---|
| சந்நியாசம் பெறுதல் கஷ்டம். யோகத்தில் பொருந்திய முனி விரைவில் பிரம்மத்தை அடைகிறான். | to attain without yoga; the sage who is earnest in yoga<br>(the way of works) attains soon to the Absolute. |
| 5.7. யோகத்திலே மருவித் தூய்மை யுற்றோன், தன்னை தான் வென்றோன். இந்திரியங்களின் மீது வெற்றி கொண்டோன், எல்லா உயிர்களுந்தானேயானவன், அவன் தொழில் கொண்டிருப்பினும், அதில் ஒட்டுவதில்லை. | (7) He who is trained in the way of works, and is pure in<br>soul, who is master of his self and who has conquered the<br>senses, whose soul becomes the self of all beings, he is not<br>tainted by works, though he works. |
| 5.8. உண்மை அறிந்த யோகி, "நான் எதனையுஞ் செய்வதில்லை" என்றெண்ணக் கடவான். காண்கினும், கேட்கினும், தீண்டினும், மோப்பினும், உண்பினும், நடப்பினும், உயிர்ப்பினும், உறங்கினும், | (8) The man who is united with the Divine and knows the<br>truth thinks "I do nothing at all" for in seeing, hearing,<br>touching, smelling, tasting, walking, sleeping, breathing; |
| 5.9. புலம்பினும், விடினும், வாங்கினும், இமைகளைத் திறப்பினும், மூடினும், "இந்திரியங்கள் தம்முடைய விஷயங்களில் சலிக்கின்றன" என்று கருதியிருக்கக் கடவான். | (9) In speaking, emitting, grasping, opening and closing the<br>eyes he holds that only the senses are occupied with the<br>objects of the senses. |
| 5.10. செய்கைகளையெல்லாம் | (10) He who works, having given up attachment, resigning |

| | |
|---|---|
| பிரம்மத்தில் சார்த்திவிட்டுப் பற்றுதலை நீக்கி எவன் தொழில் செய்கிறானோ அவன், நீரில் தாமரையிலைபோல், பாவத்தால் தீண்டல் பெறுவதில்லை. | his actions to God, is not touched by sin, even as a lotus<br>leaf (is untouched) by water. |
| 5.11. யோகிகள் பற்றுதலைக் களைந்து, ஆத்ம சுத்தியின் பொருட்டாக உடம்பாலும், மனத்தாலும், புத்தியாலும் அன்றி வெறும் இந்திரியங்களாலும் தொழில் செய்வார். | (11) The yogins (men of action) perform works merely with<br>the body, mind, understanding or merely with the senses,<br>abandoning attachment, for the purification of their souls. |
| 5.12. யோகத்தில் பொருந்தியவன் கர்மப் பயனைத் துறந்து நிஷ்டைக்குரிய சாந்தியை அடைகிறான். யோகத்தில் இணங்காதோன் விருப்பத்துக்கு வசமாய்ப் பயனிலே பற்றுதல் கொண்டு தளைப்படுகிறான். | (12) The soul earnest (or devoted) attains to peace· wellfounded,<br>by abandoning attachment to the fruits of works,<br>but he 'whose soul is not in union with the Divine is impelled<br>by desire, and is attached to the fruit (of action) and is<br>(therefore) bound. . |
| 5.13. தன்னை வசங்கொண்ட ஆத்மா எல்லாக் கர்மங்களையும் மனதால் துறந்து, எதனையும் செய்வதுமின்றிச் செய்விப்பதுமின்றி, ஒன்பது வாயில் கொண்ட உடற்கோட்டையில் இன்புற்றிருக்கிறான். | (I3) The embodied (soul), who has controlled his nature<br>having renounced all actions by the mind (inwardly) dwells<br>at ease in the city of nine gates, neither working nor causing<br>work to be done. |

| | |
|---|---|
| 5.14. செய்கைத் தலைமை, செய்கை, செய்கைப் பயன் பெறுதல் -- இவற்றுளெதனையும் கடவுள் மனிதனுக்குத் தரவில்லை. இயற்கையே இயல் பெறுகிறது. | (14) The Sovereign Self does not create for the people<br>agency, nor does He act. Nor does He connect works with<br>their fruits. It is nature that works out (these). |
| 5.15. எவனையும் பாவி அல்லது நற்செய்கையுடையோனென்று கடவுள் ஏற்பதில்லை. அஞ்ஞானத்தால் ஞானம் சூழப்பட்டிருக்கிறது. அதனால் ஜந்துக்கள், மயக்கமெய்துகின்றன. | (15) The All-pervading Spirit does not take on the sin or<br>the merit of any. Wisdom is enveloped by ignorance;<br>thereby creatures are bewildered. |
| 5.16. அந்த அஞ்ஞானத்தை ஆத்ம ஞானத்தால் அழித்தவர்களுடைய ஞானம் சூரியனைப் போன்றதாய்ப் பரம்பொருளை ஒளியுறக் காட்டுகிறது. | (16) But for those in whom ignorance is destroyed by wisdom,<br>for them wisdom lights up the Supreme Self like the sun. |
| 5.17. பிரம்மத்தில் புத்தியை நாட்டி, அதுவே தாமாய், அதில் நிஷ்டையெய்தி, அதில் ஈடுபட்டோர், தம்முடைய பாவங்களெல்லாம் நன்கு கழுவப் பெற்றோராய், மீளாப் பதமடைகிறார்கள். | (I7) Thinking of That, directing one's whole conscious<br>being to That, making That their whole aim, with That as<br>the sole object of their devotion, they reach a state from<br>which there is no return, their sins washed away by wisdom. |
| 5.18. கல்வியும் விநயமும் நன்கு கற்ற | (18) Sages see with at?-equal eye, a learned and humble |

| | |
|---|---|
| பிராமணனிடத்திலும், பசுவினத்தும், யானையினிடத்தும், நாயினிடத்தும், நாயைத் தின்னும் புலையனித்தும் பண்டிதர் சமப் பார்வையுடையோர். | Brahmin, a cow, an elephant or even a dog or an outcaste. |
| 5.19. மனம் சம நிலையில் நிற்கப் பெற்றோர் இவ்வுலகத்திலேயே இயற்கையை வென்றோராவர். பிரம்மம் மாசற்றது. சம நிலையுற்றது ஆதலால் அவர்கள் பிரம்மத்தில் நிலைபெறுகிறார்கள். | (I9) Even here (on earth) the created (world) is overcome<br>by those whose mind is established in equality. God is<br>flawless and the same in all. Therefore are these (persons)<br>established in God. |
| 5.20. விரும்பிய பொருளைப் பெறும்போது களி கொள்வான்; பிரிமற்றதைப் பெறும்போது துயர்ப்பட மாட்டான்; பிரம்மஞானி ஸ்திர புத்தியுடையோனாய், மயக்கம் நீங்கி, பிரம்மத்தில் நிலை பெறுகிறான். | (20) One should not rejoice on obtaining what is pleasant<br>nor sorrow on obtaining what is unpleasant. He who is<br>(thus) firm of understanding and unbewildered, (such a)<br>knower of God is established in God. |
| 5.21. புறத் தீண்டுதல்களில் பற்றுதல்கள் கொள்ளாமல் தனக்குள்ளே இன்பத்தைக் காண்போன் பிரம்ம யோகத்தில் பொருந்தி அழியாத இன்பத்தை எய்துகிறான். | (2I) When the soul is no longer attached to external contacts<br>(objects) one finds the happiness that is in the Self.<br>Such a one who is self-controlled in Yoga on God (Brahma)<br>enjoys undying bliss. |

| | |
|---|---|
| 5.22. புறத் தீண்டுதல்களில் தோன்றும் இன்பங்கள் துன்பத்திற்குக் காரணங்களாகும். அவை தொடக்கமும் இறுதியுமுடையான, குந்தி மகனே, அறிவுடையோன் அவற்றில் களியுறுவதில்லை. | (22) Whatever pleasures are born of contacts (with objects)<br>are only sources of sorrow, they have a beginning and an end,<br>o Son of Kuntī (Arjuna) no wise man delights in them. |
| 5.23. சரீரம் நீங்குமுன்னர், இவ்வுலகத்திலேயே விருப்பத்தாலும் சினத்தாலும் விளையும் வேகத்தை எவன் பொறுக்க வல்லானோ அந்த மனிதன் யோகி, அவன் இன்பமுடையோன். | (23) He who is able to resist the rush of desire and anger,<br>even here before he gives up his body, he is a yogin, he is<br>the happy man. |

| | |
|---|---|
| 5.24. தனக்குய்ள்ளே இன்பமுடையவனாய், உள்ளே மகிழ்ச்சி காண்பவனாய், உள்ளே ஒளி பெற்றவனாகிய யோகி, தானே பிரம்மமாய், பிரம்ம நிர்வாணமடைகிறான். | (24) He who finds his happiness within, his joy within and likewise his light only within, that yogin becomes divine and attains to the beatitude of God (brahmanirvāna). |
| 5.25. *இருமைகளை (*நன்மை - தீமை; குளிர் - சூடு; இன்பம் - துன்பம் என எல்லாப் பொருள்களைப் பற்றி நிற்கும் இரட்டை நிலைகள்) வெட்டிவிட்டுத் தம்மைத்தாம் கட்டுப்படுத்தி, எல்லா உயிர்களுக்கும் இனியது செய்வதில் மகிழ்ச்சியெய்தும் ரிஷிகள் பாவங்களொழிந்து பிரம்ம நிர்வாணம் அடைகிறார்கள். | (25) The holy men whose sins are destroyed, whose doubts (dualities) are cut asunder, whose minds are disciplined and who rejoice in (doing) good to all creatures, attain to the beatitude of God. |
| 26. விருப்பமும், சினமும் தவிர்ந்து சித்தத்தைக் கட்டுப்படுத்திய ஆத்ம ஞானிகளாகிய முனிகளுக்கு பிரம்ம நிர்வாணம் அருகிலுள்ளது. | (26) To those austere souls (yatis) who are delivered from desire and anger and who have subdued their minds and have knowledge of the Self, near to them lies the beatitude of God. |
| 5.27. புறத் தீண்டுதல்களை அகற்றிப் புருவங்களுக்கிடையே விழிகளை நிறுத்தி, மூக்கினுள்ளே இயங்கும் பிராணவாயுவையும் அபான வாயுவையும் சமமாகச் செய்து கொண்டு; | (27) and (28). Shutting out all external objects, fixing the vision between the eyebrows, making even the inward and the outward breaths moving within the nostrils, the sage who has controlled the senses, mind and understanding, who is intent on liberation, who has cast away desire, fear and anger, he is ever freed. |

| | |
|---|---|
| 28. "புலன்களை, மனத்தை, மதியையும் கட்டி விடுதலை யிலக்கெனக் கொண்டு விருப்பமும் அச்சமும் சினமும் தவிர்த்தான் முக்தனே யாவான் முனி." | (27) and (28). Shutting out all external objects, fixing the vision between the eyebrows, making even the inward and the outward breaths moving within the nostrils, the sage who has controlled the senses, mind and understanding,<br>who is intent on liberation, who has cast away desire, fear<br>and anger, he is ever freed. |
| 5.29. "வேள்வியும் தவமும் *மிசைவோன் யானே உலகுகட் கெல்லாம் ஒருபேரரசன் எல்லா உயிர்கட்கு நண்பன் யான்' என் றறிவான் அமைதி யறிவான்.<br>(*மிசைவது = உண்பது) | (29) And having known Me as the Enjoyer of sacrifices and austerities, the Great Lord of all the worlds. the Friend of all beings, he (the sage) attains peace .. |

## பகவத் கீதை : ஆறாம் அத்தியாயம்
## தியான யோகம்

கர்ம யோக ஞான யோகங்களில் சித்தி பெற்றவனுக்குண்டாகும் ஆத்மானுபவம் இந்த அத்தியாயத்தில் கூறப்படுகிறது. இவ்வாத்மானுபவத்தில் ஈடுபட்டு ஆதியிலேயே திருப்தியடைந்தவன் வேறு விஷயங்களில் மனதைச் செலுத்தமாட்டான். அவனுக்குத் தோழன், பகைவன், பந்து, நல்லவன், கெட்டவன் என்று வேறுபாடின்றி எல்லோரிடமும் ஒரேவிதமான மனப்பான்மை ஏற்படும். அவன் ஜனங்களுடைய சேர்க்கையை வெறுத்துத் தனிமையிலே விருப்பமுற்றுத் திடமான ஆசனத்திலமர்ந்து தனது ஆத்ம சொரூபத்தை எண்ணி எண்ணி மகிழ்வான். இவ்வாத்மானுபவமே பேரானந்தமென்று எண்ணியிருப்பான். எல்லா ஆத்மாக்களும் தேகசம்பந்தத்தை நீக்கிப் பார்த்தால் ஒருவகைப்பட்டவை என்று எண்ணி, முடிவில் கடவுளும் அவ்வாத்மாக்களும் ஒருவகைப் பட்டவர்களென்றும்

| | |
|---|---|
| உணர்வான். இந்நிலை பெற்றவனே யோகிகளில் சிறந்தவன். ஸ்ரீபகவான் சொல்லுகிறான்:<br># Bhagavadgītā Chapter VI The True Yoga<br>## Renunciation and Action are One 1-47 | |
| 6.1. செய்கையின் பயனில் சார்பின்றிச் செய்யத்தக்கது செய்வோன் துறவி; அவனே யோகி, தீ வளர்க்காதவனும் கிரியை செய்யாதவனும் அவன் ஆகார். | (6.I) He who does the work which he ought to do without seeking its fruit he is the saṁnyāsin, he is the yogin, not he who does not light the sacred fire, and performs no rites. |
| 6.2. பாண்டவா! எதனை சந்நியாசமென்கிறார்களோ, அதுவே யோகமென்றறி. தன் கோட்பாடுகளைத் துறக்காத எவனும் யோகியாக மாட்டான். | (2) 'What they call renunciation, that know to be disciplined activity, 0 Pandava (Arjuna), for no one becomes a yogin who has not renounced his (selfish) purpose. |
| 3. யோக நிலையில் ஏற விரும்பும் யோகிக்குத் தொழிலே கருவியாகக் கூறப்படுகிறது. அந்நிலையில் ஏறிய பின் அவனுக்கு சாந்தம் கருவியாகிறது. | (3) Work is said to be the means of the sage who wishes to attain to yoga; when he has attained to yoga, serenity is said to be the means . |
| 6.4. ஒருவன் எல்லாக் கோட்பாடுகளையும் துறந்துவிட்டுப் புலன்களிலேனும், செயல்களிலேனும் பற்றுதலின்றியிருப்பானாயின், அப்போதவன் 'யோகநிலையில் ஏறியவன்' என்று சொல்லப்படுகிறான். | (4) When one does not get attached to the objects of sense or to works, and has renounced all purposes, then, he is said to have attained to yoga. |
| 5. தன்னைத் தான் உயர்த்திக் கொள்க; தன்னைத் தன்னாலிழிவுறுத்த வேண்டா; | (5) Let a man lift himself by himself; let him not degrade himself; for the Self alone is the friend of the self and the |

| | |
|---|---|
| தனக்குத் தானே நண்பன்; தனக்குத் தானே பகைவன். | Self alone is the enemy of the self. |
| 6.6. தன்னைத் தான் வென்றவனே தனக்குத் தான் நண்பன்; தன்னைத் தான் வெல்லாதான் தனக்குத் தான் பகைவன் போற் கேடு சூழ்கிறான். | (6) For him who has conquered his (lower) self by the<br>(higher) Self his Self is a friend but for him who has not possessed his (higher) Self: his very Self will act in enmity. like an enemy. |
| 7. தன்னை வென்று ஆறுதலெய்தியவனிடத்தே சீதோஷ்ணங்களிலும், சுக துக்கங்களிலும், மானாபிமானங்களிலும் சமநிலைப்பட்ட பரமாத்மா விளங்குகிறது. | (7) When one has conquered one's self (lower) and has attained to the calm of self-mastery, his Supreme Self abides<br>ever concentrate, he is at peace in cold and heat, in pleasure<br>and pain, in honour and dishonour |
| 6.8. *ஞானத்திலும் விஞ்ஞானத்திலும் திருப்தி கொண்டவனாய், மலை முடிவில் நிற்பான் போன்று, புலன்களை வென்று, ஓட்டையும் கல்லையும் பொன்னையும் ஒன்று போலே காணும் யோகியே நிலையுற்றானெனப்படுவான். (*ஞானமென்பது கடவுளியலைப் பற்றிய அறிவு; விஞ்ஞானமென்பது உலகியலைப் பற்றியது) | (8) The ascetic (yogi) whose soul is satisfied with wisdom and .knowledge, who is unchanging and master of his senses,.<br>to whom a clod, a stone and a piece of gold are the same, is said to be controlled (in yoga). |
| 9. அன்பர், நட்பார், பகைவர், ஏதிலர், நடுவர், எதிரிகள், சுற்றத்தார், நல்லோர், தீயோர் எல்லோரிடத்தும் சமபுத்தியுடையான் மேலோனாவான். | (9) He who is equal-minded among friends, companions and<br>foes, among those who are neutral and impartial, among those who are hateful and related, among saints and sinners,<br>excels. |

| | |
|---|---|
| 6.10. மறைவிடத்தில் இருந்து கொண்டு, தனியனாய், உள்ளத்தைக் கட்டி, ஆசையைத் துறந்து, ஏற்பது நீக்கி எப்போதும் ஆத்மாவில் யோகமுறக் கடவான். | (10) Let the yogin try constantly to concentrate his mind<br>(on the Supreme Self) remaining in solitude and alone, selfcontrolled.<br>free from desires and (longing for) possessions. |
| 11. சுத்தமான இடத்தில் அதிக உயரமில்லாமலும், அதிகத் தாழ்வில்லாமலும், துணி, மான் தோல், தர்ப்பை, இவற்றின்மீது தனக்கோர் உறுதியான ஆசனம் சமைத்துக் கொண்டு, | (11) He should set in a clean place his firm seat, neither too high nor too low, covered with sacred grass, a deerskin and a cloth, one over the other. |
| 6.12. அங்கு மனதை ஒருமுகமாக்கி, உள்ளத்தையும் புறச் செயல்களையும் நன்கு கட்டுப்படுத்தி, ஆசனத்தமர்ந்து, ஆத்மா நன்கு தூய்மையடையும்படி யோகத்திலே பொருந்தக் கடவான். | 12) There taking his place on the seat, making his mind one-pointed and controlling his thought and sense, let him practise yoga for the purification of the soul. |
| 13. உடம்பையும் தலையையும், கழுத்தையும் சமமாக அசைவின்றி வைத்துக் கொண்டு, உறுதி சான்றவனாய், மூக்கு நுனியைப் பார்த்துக் கொண்டு, திசைகளை நோக்காமல், | (13) Holding the body, head and neck, erect and still, looking fixedly at the tip of his nose, without looking around (without allowing his eyes to wander). |
| 6.14. நன்கு சாந்தமெய்தியவனாய், அச்சத்தைப் போக்கி பிரம்மச்சரிய விரதத்தில் நிலைகொண்டு, மனதை வசப்படுத்தி என்னிடத்தே சித்தத்தை இசைத்து, எனக்கு ஈடுபட்டு யோகத்திலிருக்கக் கடவான். | (14) Serene and fearless, firm in the vow of celibacy, subdued<br>in mind, let him sit, harmonized, his mind turned to Me<br>and intent on Me alone. |

| | |
|---|---|
| 15. இங்ஙனம் எப்போதும் மனதைக் கட்டுப்படுத்தி ஆத்மாவில் யோகமுற்றிருக்கும் யோகி, என்பதால் நிலை பெற்றதாகிய மிகச் சிறந்த விடுதலையிலுள்ள ஆறுதலையறிவான். | (15) The yogin of subdued mind, ever keeping himself thus harmonized, attains to peace, the supreme nirvana, which abides in Me |
| 6.16. மிகைபட உண்போனுக்கு யோகமில்லை; உணவற்றோனுக்கு ஏகாந்தநிலை எய்தாது. மிகுதியாக உறங்குவோனுக்குமில்லை; அர்ஜுனா! மிகுதியாக விழிப்போனுக்கும் அஃதில்லை. | (16) Verily, yoga is not for him who eats too much or abstains too much from eating. It is not for him, 0 Arjuna, who sleeps too much or keeps awake too much |
| 17. ஒழுங்குக்கு உட்பட்ட உணவும், விளையாட்டும் உடையோனாய், வினைகளில் ஒழுங்குக்குட்பட்ட நடைகளுடையவனாய், உறக்கத்திலும் விழிப்பிலும் ஒழுங்குக்குட்பட்டானாயின், அவனுடைய யோகம் துயரை அழிக்கிறது. | (I7) For the man who is temperate in food and recreation, who is restrained in his actions, whose sleep and waking are regulated, there ensues discipline (yoga) which destroys all sorrow. |
| 6.18. உள்ளம் கட்டுக்கடங்கித் தனதுள்ளேயே நிலைபெற ஒருவன் எந்த விருப்பத்திலும் வீழ்ச்சியற்றானாயின், யோகமுற்றா னெனப்படுவான். | (18) When the disciplined mind is established in the Self alone, liberated from all desires, then is he said to be harmonized (in yoga). |
| 19. சித்தத்தைக் கட்டி ஆத்ம யோகத்தில் கலந்து நிற்கும் யோகிக்குக் காற்றில்லாத இடத்தில் அசைவின்றி நிற்கும் விளக்கை முன்னோர் உவமையாகக் காட்டினர். | (19) As a lamp in a windless place flickereth not, to such is likened the yogi of subdued thought who practises union with the Self (or discipline of himself). |

| | |
|---|---|
| 6.20. எங்கு சித்தம் யோக ஒழுக்கத்தில் பிடிப்புற்று ஆறுதலெய்துமோ, எங்கு ஆத்மாவினால் ஆத்மாவை யறிந்து ஒருவன் ஆத்மாவில் மகிழ்ச்சி யடைகிறானோ, | (20) That in which thought is at rest, restrained by the practice of concentration, that in which he beholds the Self through the self and rejoices in the Self; |
| 21. புத்தியால் தீண்டத்தக்கதும், புலன்களைக் கடந்து நிற்பதுமாகிய பேரின்பத்தை எங்குக் காண்பானோ, எங்கு நிலைபெறுவதால் இவன் உண்மையினின்றும் வழுவுவதில்லையோ, | (21) That in which he finds this supreme delight, perceived<br>by the intelligence and beyond the reach of the senses<br>wherein established, he no longer falls away from the truth; |
| 6.22. எத்தனை யெய்தியபின் அதைக் காட்டிலும் பெரிய லாபம் வேறிருப்பதாகக் கருத மாட்டானோ, எங்கு நிலை பெறுவதால் பெரிய துக்கத்தாலும் சலிப்பெய்த மாட்டானோ, | (22) That, on gaining which he thinks that there is no greater gain beyond it, wherein established he is not shaken<br>even by the heaviest sorrow; |
| 23. அந்நிலையே துன்பத்துடன் கலத்தலை விடுதலாகிய யோக நிலையென்று உணர். உள்ளத்தில் ஏக்கமின்றி உறுதியுடன் அந்த யோகத்தை ஒருவன் பற்றி நிற்கக் கடவான். | (23) Let that be known by the name of yoga, this disconnection<br>from union with pain. This yoga should be practised with determination, with heart undismayed. |
| 6.24. *சங்கல்பத்தினின்றும் (*சங்கல்பம்=மனத்தீர்மானம்) எழும் எல்லா விருப்பங்களையும் மிச்சமறத் துறந்துவிட்டு எல்லாப் பக்கங்களிலும் மனத்தால் இந்திரியக் குழாத்தைக் கட்டுப் படுத்தி, | (24) Abandoning without exception all desires born of (selfish) will, restraining with the mind all the senses on every<br>side; |

| | |
|---|---|
| 25. துணிந்த மதியுடன் மனதை ஆத்மாவில் நிறுத்தி மெல்ல மெல்ல ஆறுதல் பெறக் கடவான்; எதற்கும் கவலையுறாதிருக்கக் கடவான். | (25) Let him gain little by little tranquillity by means of reason controlled by steadiness and having fixed the mind on the Self, let him not think of anything (else). |
| 6.26. எங்கெங்கே மனம் சஞ்சலமாய் உறுதியின்றி உழலுகிறதோ, அங்கங்கே அதைக் கட்டுப்படுத்தி ஆத்மாவுக்கு வசமாக்கிக் கொள்க. | (26) Whatsoever makes the wavering and unsteady mind wander away let him restrain and bring itback to the control of the Self alone. |
| 27. மனம் சாந்தமாய், ரஜோ குணம் ஆறி, மாசு நீங்கி, பிரம்மமேயாகிய இந்த யோகிக்கு மிகச் சிறந்த இன்பம் கிடைக்கிறது. | (27) For supreme happiness comes to the yogin whose mind is peaceful, whose passions are at rest, who is stainless and has become one with God. |
| 6.28. குற்றங்களைப் போக்கி இங்ஙனம் எப்போதும் ஆத்மாவில் கலப்புற்றிருப்பானாயின், அந்த யோகி பிரம்மத்தைத் தொடுவதாகிய மிக உயர்ந்த இன்பத்தை எளிதில் துய்க்கிறான். | (28) Thus making the self ever harmonized, the yogin, who has put away sin, experiences easily the infinite bliss of contact with the Eternal. |
| 29. யோகத்தில் கலந்தவன் எங்கும் சமப் பார்வையுடையவனாய், எல்லா உயிர்களிடத்தும் தானிருப்பதையும், தன்னுள் எல்லா உயிர்களுமிருப்பதையும் காணுகிறான். | (29) He whose self is harmonized by yoga seeth the Self abiding in all beings and all beings in the Self; everywhere he sees the same. |
| 6.30. எவன் எங்கும் என்னைக் காண்கிறானோ, எல்லாப் பொருள்களையும் என்னிடத்தே காண்கிறானோ, அவனுக்கு நான் | (30) He who sees Me every where and sees all in Me; I am not lost to him nor is he lost to Me. |

| | |
|---|---|
| அழியமாட்டேன்; எனக்கவன் அழிய மாட்டான். | |
| 31. ஒருமையில் நிலை கொண்டவனாய் எல்லா உயிர்களிடத்திலுள்ள என்னைத் தொழுவோன் யாங்கணும் சென்ற போதிலும், அந்த யோகி என்னுள்ளேயே இயலுகிறான். | (3I) The yogin who established in oneness, worships Me abiding in all beings lives in Me, howsoever he may be active. |
| 6.32. இன்பமாயினும், துன்பமாயினும் -- எதிலும் ஆத்ம சமத்துவம் பற்றி சமப்பார்வை செலுத்துவானாயின், அவன் பரம யோகியாகக் கருதப்படுவான். அர்ஜுனன் சொல்லுகிறான்: | (32) He, O Arjuna, who sees with equality everything, in the image of his own self, whether in pleasure or in pain, he is considered a perfect yogi .. |
| 33. மதுசூதனா! இங்ஙனம் நீ சமத்துவத்தால் ஏற்படுவதாகச் சொல்லிய யோகம், ஸ்திரமான நிலையுடையதாக எனக்குத் தோன்றவில்லை, எனது சஞ்சலத் தன்மையால். | Arjuna said:<br>(33) This yoga declared by you to be of the nature of equality (evenness of mind), O Madhuslidana (Kṛṣṇa see no stable foundation for, on account of restlessness. |
| 6.34. கண்ணா! மனம் சஞ்சலமுடையது; தவறும் இயல்பினது, வலியது; உரனுடையது. அதைக் கட்டுப்படுத்துதல் காற்றைக் கட்டுவதுபோல் மிகவும் கஷ்டமான செய்கையென்று நான் மதிக்கிறேன். ஸ்ரீபகவான் சொல்லுகிறான்: | (34) For the mind is verily fickle, 0 Kr..sna, it is impetuous, strong and obstinate. I think that it is as difficult to control as the wind. |
| 35. பெருந்தோளாய்! மனம் கட்டுதற்கரியதுதான், சலனமுடையதுதான்; ஐயமில்லை. ஆனால் குந்தியின் மகனே! அதைப் | The Blessed Lord said:<br>35) Without doubt,O Mighty-armed (Arjuna), the mind is difficult to curb and restless but it can be controlled, 0 Son |

| | |
|---|---|
| பழக்கத்தாலும், விருப்பின்மையாலும் கட்டி விடலாம். | of Kunti (Arjuna) ,by constant practice and non-attachment. |
| 6.36. தன்னைக் கட்டாதவன் யோகமெய்துதல் அரிதென்று நான் கருதுகிறேன். தன்னைக் கட்டியவன், முயற்சியாலும் உபாயத்தாலும் அதனை எய்த வல்லான். அர்ஜுனன் சொல்லுகிறான்: | (36) Yoga is hard to attain, I agree, by one who is not selfcontrolled;<br>but by the self-controlled it is attainable by<br>striving through proper means. |
| 37. நம்பிக்கை யுடையோயெனினும், தன்னைக் கட்டாமையால் யோகத்தினின்றும் மனம் வழுவியவன் யோகத்தில் தோற்றுப்போய், அப்பால் என்ன கதியடைகிறான், கண்ணா? | (37) He who cannot control himself though he has faith, with the mind wandering away from yoga, failing to attain perfection in yoga, what way does he go, 0 Kṛṣṇa? |
| 6.38. ஒரு வேளை அவன் இரண்டுங் கெட்டவனாய், உடைந்த மேகம்போல் அழிகிறானோ? பெருந்தோளாய்! உறுதியற்றவனாய், பிரம்ம நெறியிலே குழப்பமெய்திய மூடன் யாதாகிறான்? | (38) Does he not perish like a rent cloud, 0 Mighty-armed (Kṛṣṇa), fallen from both and without any hold and bewildered in the path that leads to the Eternal? |
| 39. கண்ணா! எனக்குள்ள இந்த ஐயத்தை நீ அறுத்து விடுக. நின்னையன்றி இந்த ஐயத்தை யறுப்போர் வேறெவருமிலர். ஸ்ரீபகவான் சொல்லுகிறான்: | (39) Thou shouldst dispel completely this, my doubt, O Kṛṣṇa,for there is none else than Thyself who can destroy this doubt.<br>a,for there is none else than Thyself who can destroy<br>this doubt. |
| 6.40. பார்த்தா! அவனுக்கு இவ்வுலகிலும், மேலுலகத்திலும் அழிவில்லை; மகனே! நன்மை செய்வோன் எவனும் கெட்ட கதியடைய மாட்டான். | (40) O, Partha (Arjuna) , neither in this life nor hereafter<br>is there destruction for him;<br>for never does anyone who does |

| | |
|---|---|
| | good, dear friend, tread the path of woe. |
| 41. யோகத்தில் தவறியவன், புண்ணியம் செய்வோரின் உலகங்களை யெய்தி, அங்கு கணக்கில்லாத வருஷங்கள் வாழ்ந்து, தூய்மையுடைய செல்வர்களின் வீட்டில் பிறக்கிறான். | (41) Having attained to the world of the righteous and dwelt there for very many years, the man who has fallen away from yoga is again born in the house of such as are pure and prosperous. |
| 6.42. அல்லது, புத்திமான்களாகிய யோகிகளில் குலத்திலேயே பிறக்கிறான். இவ்வுலகில் இது போன்ற பிறவி யெய்துதல் மிகவும் அரிது. | (42) Or he may be born in the family of yogins who are endowed with wisdom. For such a birth as this is more difficult to obtain in the world. |
| 43. அங்கே அவன் பூர்வ சரீரத்துக்குரிய புத்தியைப் பெறுகிறான். குருநந்தனா! அப்பால் அவன் மறுபடியும் வெற்றிக்கு முயற்சி செய்கிறான். | (43) There he regains the (mental) impressions (of union<br>with the Divine) which he had developed in his previous<br>life and with this (as the starting point) he strives again for<br>perfection, 0 Joy of the Kurus (Arjuna). |
| 6.44. பண்டைப் பழக்கத்தால் அவன் தன் வசமின்றியும் இழுக்கப்படுகிறான். யோகத்தை அறிய வேண்டுமென்ற விருப்பத்தாலேயே ஒருவன் ஒலியுலகத்தைக் கடந்து செல்லுகிறான். | (44) By his former practice, he is carried on irresistibly,<br>Even the seeker after the knowledge of yoga goes beyond<br>the Vedic rule. |
| 45. பாவம் நீங்கியவனாய், ஊன்றி முயல்வானேயாயின், யோகி பல பிறவிகளின் வெற்றிப் பயனாகிய பரகதியை அப்போதடைகிறான். | (45) But the yogi who strives with assiduity, cleansed of all sins, perfecting himself through many lives, then attains to<br>the highest goal. |

| | |
|---|---|
| 6.46. தவஞ் செய்வோரைக் காட்டிலும் யோகி சிறந்தோன்; ஞானிகளிலும் அவன் சிறந்தோனாகக் கருதப் படுகிறான்; கர்மிகளிலும் அவன் சிறந்தோன்; ஆதலால் அர்ஜுனா! யோகியாகுக. | (46) The yogin is greater than the ascetic; he is considered to be greater than the man of knowledge, greater than the man of ritual works, therefore do thou become a yogin, O Arjuna. |
| 6.47. மற்றெந்த யோகிகளெல்லாரிலும், எவனொருவன் அந்தராத்மாவில் என்னைப் புகுத்தி என்னை நம்பிக்கையுடன் போற்றுகிறானோ அவன், மிக மேலான யோகியென்பது என்னுடைய கொள்கை. | (47) And of all yogins, he who full of faith worships Me, with his inner self abiding in Me,him, I hold to be the most attuned (to me in Yoga). |

## பகவத் கீதை : ஏழாம் அத்தியாயம்
## ஞான விஞ்ஞான யோகம்

பக்தி யோகத்திற்கு இலக்கான இறைவனுடைய சொரூபம், சுபாவம், மேன்மை முதலியன இந்த அத்தியாயத்தில் விளக்கிக் கூறப்படுகின்றன. மனிதன் இவைகளை அறியவொட்டாமல் பிரகிருதி சம்பந்தம் தடுத்துக் கொண்டிருப்பதால் இதை நீக்க வேண்டியது அவசியம். ஆனால், இறைவனைச் சரண் புகுந்தாலன்றி இத்தடையை நீக்க இயலாது. பக்தர்களில், துன்புற்றார், செல்வத்தை விரும்புவோர், ஞான சொரூப நிலையை விரும்புவோர் ஈசுவர தத்துவத்தை யுணர்ந்தவர் என நான்கு வகையுண்டு. அவர்களில் நான்காம் வகுப்பினரே மேலானவர். அந்த நிலையைப் பெறுவதற்கு வெகு பிறப்புகள் எடுத்தாக வேண்டும். இறைவனை தவிர்த்து மற்ற தெய்வங்களைத் தொழுபவர்களும் உண்மையில் இறைவனளிக்கும் பயனையேதான் பெறுகின்றனர். ஆனால், அவ்விதமான பயன்கள் அழிவுற்றிருக்கும். இறைவனையே

வணங்குகிறவர்கள், இறைவனையே யடைந்து அழிவிலா ஆனந்தத்தைப் பெறுகின்றனர். ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்:

## CHAPTER VII
## GOD and the WORLD

| | |
|---|---|
| 7.1. பார்த்தா!, என்பால் இசைந்த மனத்தினனாய், என்னைச் சார்ந்து, யோகத்திலே அமர்ந்தானாய், என்னை முழுதும் உணருமாறு சொல்லக் கேளாய். | The Blessed Lord said:<br>(7.1) Hear then, O Partha (Arjuna), how, practising yoga,<br>with the mind clinging to Me, with Me as thy refuge, thou shalt know Me in full, without any doubt. |
| 7.2. ஞானத்தையும், விஞ்ஞானத்தையும் சம்பூரணமாக உனக்குச் சொல்லுகிறேன். இதை அறிந்தால் பிறகு நீ அறிய வேண்டியது மிச்சமொன்றுமில்லை. | 7.2. I will declare to thee in full this wisdom together with knowledge by knowing which there shall remain nothing more here left to be known, |
| 7.3. பல்லாயிர மனிதரில் ஒருவன் சித்தி பெற முயல்கிறான். முயற்சியுடைய சித்தர் பலரில் ஒருவன் என்னை உள்ளபடி அறிகிறான். | (3) Among thousands of men scarcely one strives for perfection<br>and of those who strive and succeed, scarcely one knows Me in truth. |
| 7.4. மண், நீர், தீ, காற்று, வான், மனம், மதி, *அகங்காரம், இவ்வெட்டு வகையாக என் இயற்கை பிரிந்து தோன்றுகிறது. (*அகங்காரம் -- எல்லாச் சேதன உயிர்களுக்குமுள்ள "நான்" என்ற கொள்கை.) | (4) Earth, water, fire, air, ether, mind and understanding<br>and self-sense-this is the eightfold division of My nature. |
| 7.5. இது என் கீழியற்கை. இதினின்றும் வேறுபட்டதாகிய என் மேலியற்கையை அறி; அதுவே உயிராவது; பெருந்தோளாய்! | (5) This is my lower nature, Know My other and higher nature which is the soul, by which this world is upheld, O Mighty-armed (Arjuna). |

| | |
|---|---|
| அதனால் இவ்வுலகு தரிக்கப்படுகிறது. | |
| 7.6. எல்லா உயிர்களுக்கும் அது காரணமென்றுணர். அதனால் நான் உலக முழுமைக்கும் ஆக்கமும் அழிவுமாவேன். | (6) Know that all beings have their birth in this. I am the origin of all this world and its dissolution as well. |
| 7. 7. தனஞ்ஜயா! என்னைக் காட்டிலும் உயர்ந்த பொருள் வேறெதுவுமில்லை. நூலில் மணிகளைப் போல் இவ்வையகமெல்லாம் என்மீது கோர்க்கப்பட்டது. | (7) There is nothing whatevwer that is higher than I, O Winner of wealth (Arjuna). All that is here is strung on me as rows of gems on a string. |
| 7.8. நான் நீரில் சுவை; இந்து மகனே! நான் ஞாயிற்றிலும், திங்களிலும் ஒளி; எல்லா வேதங்களிலும் நான் பிரணவம். வானில் ஒலி நான்; ஆண் மக்களிடத்து நான் ஆண்மை. | (8) I am the taste in the waters, O son of Kuntī (Arjuna), I am the light in the moon and the sun. I am the syllable Aum in all Vedas; I am the sound in ether and manhood in man. |
| 7.9. மண்ணில் தூய நாற்றமும், தீயில் சுடரும் யான். எல்லா உயிர்களிலும் உயிர்ப்பு நான், தவஞ்செய்வோரின் தவம் யான். | (9) I am the pure fragrance in earth and brightness in fire. I am the life in all existences and the austerity in ascetics. |
| 7.10. எல்லா உயிர்களுக்கும் நான் சாதனமாகிய விதையென்றுணர். பார்த்தா! புத்தியுடையோரின் புத்தி நான். ஒளியுடையோரின் ஒளி நான். | (10) Know Me, O Partha (Arjuna), to be the eternal seed of all existences. I am the intelligence of the intelligent; I am the splendour of the splendid. |
| 7.11. வல்லோரிடத்தே விருப்பமும் விழைவுந் தீர்ந்த வலிமை நான். | (11) I am the strength of the strong, devoid of desire and |

| | |
|---|---|
| பரதரேறே! உயிர்களிடத்து நான் கடமை தவறாத விருப்பமாவேன். | passion. In beings am I the desire which is not contrary to law, O Lord of the Bharatas (Arjuna). |
| 7.12. சத்வ ரஜஸ் தமோ குணங்களைச் சார்ந்த மன நிலைகளெல்லாம் என்னிடத்தே பிறந்தன. அவை என்னுள் இருக்கின்றன. நான் அவற்றுள் இல்லை. | (12) And whatever states of being there may be, be they harmonious (sattvika), passionate (rajasa) slothful (tamasa)<br>-know thou that they are all from Me alone. I am not in them, they are in Me. |
| 7.13. இந்த மூன்று குணங்களாகிய எண்ணங்களால் இவ்வுலக மெல்லாம் மயங்கிப் போய், இவற்றினும் மேலாம் அழியாத இயல்பு கொண்ட என்னை உணராதிருக்கிறது. | (I3) Deluded by these threefold modes of nature (guṇas)<br>this whole world does not recognize Me who am above them<br>and imperishable. |
| 7.14. இந்த குணமயமாகிய எனது தேவமாயை கடத்தற்கரியது. என்னையே யாவர் சரணடைவரோ அவர்கள் இந்த மாயையைக் கடக்கின்றார்கள். | (14) This divine māyā of Mine, consisting of the modes is hard to overcome. But those who take refuge in Me alone cross beyond it. |
| 7.15. தீமை செய்யும் மூடர், மானிடரில் கடைப்பட்டார், மாயையால் ஞானமழிந்தோர் அசுரத் தன்மையைப் பற்றி நிற்போர், -- (இணையோர்) என்னைச் சரண் புகார். | (15) The Evil doers who are foolish, low in the human scale,<br>whose minds are carried away by illusion and who partake<br>of the nature of demons do not seek refuge in Me. |
| 16. நற்செய்கையுடைய மக்களில் நான்கு வகையார் என்னை | (16) The virtuous ones who worship Me are of four kinds, |

| | |
|---|---|
| வழிபடுகின்றனர். பரதரேறே! துன்புற்றார், அறிவை விரும்புவோர், பயனை வேண்டுவோர், ஞானிகள் என. | the man in distress, the seeker for knowledge, the seeker for<br>wealth and the man of wisdom, O Lord of the Bharatas<br>(Arjuna). |
| 7.17. அவர்களில் நித்திய யோகம் புண்டு ஒரே பக்தி செலுத்தும் ஞானி சிறந்தவன். ஞானிக்கு நான் மிகவும் இனியவன்; அவன் எனக்கு மிகவும் இனியவன். | (17) Of these the wise one, who is ever in constant union with the Divine, whose devotion is single-minded, is the best.<br>For I am supremely dear to him and he is dear to Me. |
| 18. மேற்சொல்லிய யாவரும் நல்லாரே; எனினும் ஞானியை நான் யானாகவே கொண்டுள்ளேன். அவன், யோகத்தில் இசைந்து, உத்தம கதியாகிய என்னைக் கடைப்பிடித்து நிற்கிறான். | (18) Noble indeed are all these but the sage, I hold, is verily<br>Myself. For being perfectly harmonized, he resorts to Me alone as the highest goal. |
| 7.19. பல பிறவிகளில் இறுதியில் ஞானவான், "எல்லாம் வாசுதேவனே" என்று கருதி என்னை அடைக்கலமாகப் பற்றுகிறான்.<br>அவ்வித மகாத்மா<br>கிடைத்தற்கரியவன். | (19) At the end of many lives" the man of wisdom resorts<br>to Me. knowing that Vasudeva (the Supreme) is all that is. Such a great soul is very difficult to find. |
| 20. வெவ்வேறு விருப்பங்களால் கவரப்பட்ட அறிவினையுடையோர், தத்தம் இயற்கையால் கட்டுண்டு, வெவ்வேறு நியமங்களில்<br>நிற்பாராய் அன்னிய தேவதைகளை வழிபடுகின்றனர். | (20) But those whose minds are distorted by desires resort to other gods, observing various rites, constrained by their<br>own natures. |

| | |
|---|---|
| 7.21. எந்த எந்த பக்தன், நம்பிக்கையுடன் எந்த எந்த வடிவத்தை அர்ச்சிக்க விரும்புகிறானோ அவனுடைய அசையாத நம்பிக்கைக்குத் தக்க வடிவத்தை நான் மேற்கொள்ளுகிறேன். | (2I) Whatever form any devotee with faith wishes to worship,<br>I make that faith of his steady. |
| 22. அவன் அந்த நம்பிக்கையுடன் கலந்து அவ்வடிவத்தை ஆராதித்து வேண்டுகிறான். அதினின்றும் தான் விரும்பினவற்றை எய்துகிறான்; எனினும் அவற்றை வகுத்துக் கொடுப்போன் யானே. | (22) Endowed with that faith, he seeks the propitiation of such<br>a one and from him he 0btains his desires, the benefits<br>being decreed by Me alone. |
| 7.23. எனினும், அற்பமதியுடைய அன்னோர் எய்தும் பயன் இறுதி யுடைத்தாம். தேவர்களைத் தொழுவோர் தேவர்களை எய்துகின்றனர், என்னடியார் என்னையே எய்துகிறார்கள். | (23) But temporary is the fruit gained by these men of small minds. The worshippers of the gods go to the gods but My devotees come to Me. |
| 24. மறைவும் வெளிப்பாடும் உடையோனாக என்னை மதியற்றார் கருதுகின்றனர். என் அழிவற்ற உத்தமமாகிய பர நிலையை அன்னார் அறிகிலர். | (24) Men of no understanding think of Me, the unmanifest, as having manifestation, not knowing My higher nature, changeless and supreme. |
| 7.25. எல்லாவற்றுக்கும் ஒளியாகிய என்னை, யோகமாயை சூழ்வதில்லை. பிறப்பும், கேடுமற்ற | (25) Veiled by My creative power (yogamāyā) I am not revealed to all. This lewildered world knows Me not, the<br>unborn, the unchanging. |

| | |
|---|---|
| என்னை மூடவுலகம் அறியவில்லை. | |
| 26. சென்றன, நிகழ்வன, வருவன ஆகிய உயிர்களையெல்லாம் நானறிவேன், என்னை அறிந்தோர் எவருமிலர். | (26) I know the beings that are past, that are present) O Arjuna, and that are to come but Me no one knows. |
| 7.27. விருப்பத்தாலும், பகைமையாலும் எழுந்த இருமைகளின் மயக்கத்தால், பாரதா! எல்லா உயிர்களும் மயங்கிவிடுகின்றன, பகைவரைச் சுடுவோய். | 27) All beings are born to delusion O Bharata (Arjuna). overcome by the dualities which arise from wish and hate,<br>O Conqueror of the foe (Arjuna). |
| 28. எந்த ஜனங்கள் பாவந் தீர்ந்து புண்ணியச் செயல்கள் செய்கின்றனரோ, அவர்கள் இருமைகளின் மயக்கந்தீர்ந்து திடவிரதமுடையோராய் என்னை வழிபடுகின்றனர். | (28) But those men of virtuous deeds in whom sin has come to an end (who have died to sin), freed from the/delusion of<br>dualities, worship Me steadfast in their vows. |
| 7.29. மூப்பினின்றும், மரணத்தினின்றும் விடுபடுமாறு என்னை வழிபட்டு முயற்சி செய்வோர் "அது" என்ற பிரம்மத்தை யுணர்வார்; ஆத்மஞான முழுதையும் உணர்வார்; செய்கையனைத்தையு முணர்வார். | (29) Those who take refuge in Me and strive for deliverance from old age and death, they know the Brahman (or Absolute)<br>entire (they know) the Self and all about action. |
| 7.30. பூதஞானம், தேவஞானம், யாகஞானம் இவற்றுடன் என்னை யாவர் இறுதிக் காலத்திலேனும் | (30) Those who know Me as the One that governs the material and the divine aspects, and all sacrifices, they, |

| | |
|---|---|
| அறிவாரோ, யோகத்திற் பொருந்திய சித்தமுடைய அன்னோரே அறிஞர். | with their minds harmonized, have knowledge of Me even at the time of their departure (from here). |

பகவத் கீதை : எட்டாம் அத்தியாயம்

அக்ஷர பிரம்ம யோகம்

## CHAPTER VIII

# The Course of Cosmic Evolution

முற்கூறிய நான்குவித பக்தர்களும் தனித்தனியே கைப்பற்ற வேண்டிய பக்தி வழிகளும், அவைகளுக்குள் வித்தியாசமும் கூறப்படுகின்றன. ஆக்கையினின்றும் ஆவி கிளம்புங்கால் எத்தகைய எண்ணம் மனிதனின் மனதுக்குள் இருக்கின்றதோ, அத்தகைய பலனையே மறுபிறவியில் பெறுவானாதலால் பக்தர்கள் இறக்கும் தருணத்தில், கடவுளைத் தியானித்திருப்பது அவசியம். வாழ்நாட்களில் மனதுக்குக் கடவுளிடம் நிலைத்திருக்கும் பழக்கத்தை உண்டுபண்ணினால்தான் அம்மனம் மரண காலத்தில் கடவுளிடம் நிலைபெறும். ஆகையால் பக்தர் அனைவரும் தங்கள் வாழ்நாட்களில் மனதால் கடவுளை தியானம் செய்துகொண்டே தங்கள் கர்மங்களைச் செய்ய வேண்டும். நான்காவது வகையான பக்தர்கள் பெறும் பரமபதம்தான் அழிவற்றது. மற்ற பலனெல்லாம் அழிவுற்றது. பக்தர்கள் இறந்த பிறகு ஆத்மா செல்லும் வழி இருவகைப்பட்டிருக்கும். ஒன்றில் சென்றால் என்றைக்கும் திரும்பி வராத வீட்டைப் பெறலாம். மற்றொன்றில் சென்றால், காலக்கிரமத்தில் திரும்பி வரவேண்டிய இடத்தை அடையலாம். அர்ஜுனன் சொல்லுகிறான்:

| | |
|---|---|
| 8.1. அந்த பிரம்மம் எது? ஆத்ம ஞானம் யாது? புருஷோத்தம, கர்மமென்பது யாது? பூதஞானம் | Arjuna said:<br>(8.1) What is Brahman (or the Absolute)? What is the Self and what is action, O the Best of persons? What is said to |

| | |
|---|---|
| யாது? தேவஞானம் என்பது எதனை? | be the domain of the elements? What is called the domain<br>of the gods? |
| 8.2. யாக ஞானம் என்பதென்ன? தம்மைத் தாம் கட்டியவர்களால் இறுதிக் காலத்திலேனும் இவ்வுலகத்தில் நீ அறியப்படுவ தெங்கனம்? ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்: | (2) What is the domain (part) of sacrifice in this body and how,<br>O Madhusūdana (Kṛṣṇa),<br>How again art Thou to be known<br>at the time of departure by the self-controlled? |
| 8.3. அழிவற்ற பரம்பொருளே பிரம்மம், அதனியல்பை அறிதல் ஆத்ம ஞானமெனப்படும். உயிர்த் தன்மையை விளைவிக்கும் இயற்கை கர்மமெனப்படுகிறது. | The Blessed Lord said:<br>(3) Brahman (or the Absolute) is the indestructible, the Supreme (higher than all else), essential nature is called the<br>Self. Karma is the name given to the creative force that brings beings into existence. |
| 8.4. அழிவுபடும் இயற்கையைக் குறித்தது பூதஞானம். புருஷனைப் பற்றியது தேவஞானம். உடம்பெடுத்தோரில் உயர்ந்தவனே! உடம்புக்குள் என்னை யறிதல் யாகஞானம். | (4) The basis of all created things is the mutable nature: the basis of the divine elements is the cosmic spirit. And<br>the basis of all sacrifices, here in the body is Myself, O Best of embodied beings (Arjuna). |
| 8.5. இறுதிக் காலத்தில் உடம்பைத் துறந்து எனது நினைவுடன் இறப்போன் எனதியல்பை எய்துவான், இதில் ஐயமில்லை. | (5) And whoever, at the time of death, gives up his body and departs, thinking of Me alone, he comes to My status (of being); of that there is no doubt. |
| 8.6. ஒருவன் முடிவில் எவ்வெத் தன்மையை நினைப்பனாய் உடலைத் துறக்கின்றானோ, அவன் எப்போதும் அத்தன்மையிலே | (6) Thinking of whatever state (of being) he at the end gives up his body, to that being does he attain, O Son of Kunti (Arjuna), being ever absorbed in the thought thereof. |

| | |
|---|---|
| கருத்துடையவனாய் அதனையே எய்துவான். | |
| 8.7. ஆதலால் எல்லாக் காலங்களிலும் என்னை நினை, போர் செய். என்னிடத்தே மனத்தையும், புத்தியையும் அர்ப்பணம் செய்வதனால் என்னையே பெறுவாய். | (7) Therefore at all times remember Me and fight When thy mind and understanding are set on Me, to Me alone shalt thou come without doubt. |
| 8.8. வேறிடஞ் செல்லாமலே யோகம் பயிலும் சித்தத்துடன் சிந்தனை செய்து கொண்டிருப்போன் தேவனாகிய பரம புருஷனை அடைகிறான். | (8) He who meditates on the Supreme Person with his thought attuned by constant practice and not wandering after anything else, he, O Partha (Arjuna), reaches the Person, Supreme and Divine. |
| 8.9. கவியை, பழையோனை, ஆள்வோனை, அணுவைக் காட்டிலும் அணுவை, எல்லாவற்றையும் தரிப்பவனை, எண்ணுதற்கரிய வடிவுடையோனை, இருளுக்கப்பால் கதிரோனது நிறங்கொண்டிருப்பானை, எவன் நினைக்கிறானோ; | (9) He who meditates on the Seer, the ancient, the ruler, subtler than the subtle, the supporter of all, whose form is beyond conception, who is suncoloured beyond the darkness. |
| 8.10. இறுதிக் காலத்தில் அசைவற்ற மனத்துடன், புருவங்களிடையே உயிரை நன்கேற்றி பக்தியுடனும், யோக பலத்துடனும், எவன் நினைக்கிறானோ, அவன் அந்தக் கடவுளாகிய பரம புருஷனை அடைகிறான். | (10) He who does so, at the time of his departure, with a steady mind, devotion and strength of yoga and setting well his life force in the centre of the eyebrows, he attains to this Supreme Divine Person. |
| 8.11. எந்த நிலையை வேதமுணர்ந்தோர் அழிவற்றதென்பர், விருப்பமற்ற | (11) I shall briefly describe to thee that state which the knowers of the Veda call the Imperishable, which ascetics |

| | |
|---|---|
| முனிகள் எதனுட் புகுவர், எதை விரும்பி பிரம்மச்சரிய விரதம் காக்கப்படும், அந்த நிலையை உனக்குச் சுருக்கமாகச் சொல்லுகிறேன். | freed from passion enter and desiring which they lead a life of self-control. |
| 8.12. எல்லா வாயில்களையும் நன்கு கட்டி, மனதை உள்ளத்தில் நிறுத்தி, உயிரைத் தலையின் உச்சியில் நிலையுறுத்தி யோக தாரணையில் உறுதிபெற்று, | (12) All the gates of the body restrained, the mind confined within the heart, one's life force fixed in the head, established in concentration by yoga. |
| 8.13. "ஓ" என்ற பிரம்ம எழுத்தை ஒன்றையே ஜபித்துக் கொண்டு என்னை ஸ்மரிப்பவனாய் உடம்பைத் துறப்போன் பரமகதி பெறுகின்றான். | (13) He who utters the single syllable Aum (which is) Brahman, remembering Me as he departs, giving up his body, he goes to the highest goal. |
| 8.14. நித்திய யோகத் திசைந்து, பிரிது நினைப்பின்றி என்னை எப்பொழுதும் எண்ணும் யோகிக்கு நான் எளிதில் அகப்படுவேன், பார்த்தா, | (14) He who constantly meditates on Me, thinking of none else, by him who is a yogin ever disciplined (or united with the Supreme), I am easily reached. |
| 8.15. என்னை யடைந்து பரம சித்தி பெற்ற மகாத்மாக்கள், மறுபடி நிலையற்றதும் துன்பத்தின் ஆலயமும் ஆகிய மறுபிறப்பை யடையமாட்டார். | (15) Having come to Me, these great souls do not get back to rebirth, the place of sorrow, impermanent, for they have reached the highest perfection. |
| 8.16. அர்ஜுனா! பிரம்மலோகம் வரை எல்லா உலகங்களும் மறுபிறப்பு உடையன. குந்தி மகனே! என்னை அடைந்தவனுக்கு மறுபிறப்பு இல்லை. | (16) From the realm of Brahma downwards, all worlds are subject to return to rebirth, but on reaching Me, O Son of Kuntī (Arjuna), there is no return to birth again. |

| | |
|---|---|
| 8.17. பிரம்மத்துக்கு ஆயிரம் யுகம் ஒரு பகல், ஆயிரம் யுகம் ஓரிரவு. இதை யறிந்தோரே இராப்பகலின் இயல்பறிவார். | (17) Those who know that the day of Brahma is of the duration of a thousand ages and that the night (of Brahma) is a thousand ages long, they are the knowers of day and night. |
| 8.18. 'அவ்யக்தம்', அதாவது மறைவுபட்ட உலகத்தினின்றும் தோற்றப் பொருள்கள் வெளிப்படுகின்றன. *இரவு வந்தவுடன் அந்த மறைவுலகத்துக்கே மீண்டும் கழிந்து விடுகின்றன. | (18) At the coming of day, all manifested things come forth from the unmanifested and at the coming of night they merge in that same, called the unmanifested. |
| 8.19. இந்த பூதத் தொகுதி ஆகியாகித் தன் வசமின்றியே * இரவு வந்தவுடன் அழிகிறது; பார்த்தா! *பகல் வந்தவுடன் இது மீண்டும் பிறக்கிறது. (*இங்கு, பகலும் இரவுமான மேற்கூறியபடி பிரம்மத்தின் பகலிரவுகளாகிய யுக சகஸ்ரங்கள்.) | (19) This very same multitude of existences arising again and again merges helplessly at the coming of night, 0 Partha (Arjuna), and streams forth into being at the coming of day. |
| 20. அவ்யக்தத்தினும் அவ்யக்தமாய் அதற்கப்பால் சநாதன பதமொன்றிருக்கிறது. எல்லா உயிர்களும் அழிகையில் அப்பதம் அழியாது. | (20) But beyond this unmanifested, there is yet another Unmanifested Eternal Being who does not perish even when all existences perish. |
| 8.21. அவ்யக்தம் அழிவற்றதெனப்படும். அதனையே பரமகதி யென்பர். எதை எய்தியபின் மீள்வதில்லையோ, அதுவே என் பரமபதம். | (2I) This Unmanifested is called the Imperishable. Him they speak of as the Supreme Status. Those who attain to Him return not. That is My supreme abode. |

| | |
|---|---|
| 22. வேறிடஞ் செல்லாத பக்தியால், பார்த்தா! அந்தப் பரமபுருஷன் எய்தப்படுவான். அவனுள்ளே எல்லாப் பொருள்களும் நிலைகொண்டன. அவன் இவ்வுலகமெங்கும் உள்ளூரப் பரந்திருக்கிறான். | (22) This is the Supreme Person, O Partha (Arjuna), in whom all existences abide and by whom all this is pervaded (who) can, however, be gained by unswerving devotion. |
| 8.23. யோகிகள் இறப்பதால் எக்காலத்தில் மீளா நிலையும் மீளும் நிலையும் பெறுவாரோ, அக்காலத்தைச் சொல்லுகிறேன். | (23) Now I shall declare to thee, O Best of Bharatas (Arjuna), the time in which yogins departing, never return and also that wherein departing they return. |
| 8.24. தீ, ஒளி, பகல், சுக்கில பக்ஷம், உத்தராயணத்தின் ஆறு மாதங்கள்; இவற்றில் இறக்கும் பிரம்ம ஞானிகள் பிரம்மத்தையடைகிறார்கள். | (24) Fire, light, day, the bright (half of the month) ..the six months of the northern path (of the Sun), then going forth the men who know the Absolute go to the Absolute. |
| 8.25. புகை, இரவு, கிருஷ்ண பக்ஷம், தக்ஷிணாயனத்தின் ஆறு மாதங்கள்; இவற்றில் இறக்கும் யோகி சந்திரனொளியைப் பெற்றிருந்து மீளுகிறான். | (25) Smoke, night, so also the dark (half of the month), the six months of the southern part (of the Sun), then going forth, the yogi obtains the lunar light and returns. |
| 8.26. உலகத்தில் இந்த ஒளி வழியும், இருள் வழியும் சாசுவதமாகக் கருதப்பட்டன. இவற்றுள் ஒன்றினால் மனிதன் மீளாப் பதம் பெறுவான். மற்றொன்று மீளும் பதந்தருவது. | (26) Light and darkness, these paths are thought to be the world's ev.rlasting (paths). By the one he goes not to return, by the other he returns again. |
| 8.27. இவ்வழிகளிரண்டையும் உணர்ந்தால் அப்பால் யோகி | (27) The yogin who knows these paths, O Partha (Arjuna), |

| | |
|---|---|
| மயக்கமுறுவதில்லை. ஆதலால், அர்ஜுனா, எப்போதும் யோகத்தில் கலந்திரு. | is never deluded. Therefore, at all times, O Arjuna, be thou firm in yoga.' |
| 28. இதனை யறிவதால் யோகி வேதங்களிலும், தவங்களிலும், தானங்களிலும் காட்டிய தூய்மைப் பயனைக் கடந்து, ஆதி நிலையாகிய பரநிலையை எய்துகிறான். | (28) The yogin having known all this, goes beyond the fruits of meritorious deeds assigned to the study of the Vedas, sacrifices, austerities and gifts and attains to the supreme and primal status. |

## பகவத் கீதை : ஒன்பதாம் அத்தியாயம்

## ராஜ வித்தியாச ராஜ குஹ்ய யோகம்

## CHAPTER IX

# The Lord is more than His Creation

## The Sovereign Mystery

இங்கு வித்தைகளுள் சிறந்ததும், ரகசியங்களுள் மேலானதுமான பக்தி யோகத்தின் சொரூபமும் மேன்மையும், பலன் முதலானவையும் கூறப்படுகின்றன. பக்தி யோகத்தில் இறங்குவோன், அதில் முழு நம்பிக்கை கொள்ள வேண்டும். பின்வரும் கடவுள் பெருமைகளையும் நன்குணரவேண்டும். கடவுள் எங்கும் நிறைந்த பரம்பொருள். உலகமனைத்தும் அவரிடத்திலேயே நிலைபெற்று நிற்கிறது. பிரளய காலத்தில் உலகங்கள் அனைத்தும் அவற்றின் முதற்கிழங்காகிய பிரகிருதியில் மறைகின்றன. சிருஷ்டி காலத்தில் கடவுள் அவைகளை பிரகிருதியினின்றும் வெளிப்படுத்துகிறார். உலகத்திற்கு இறைவனும், இருப்பிடமும், சரணும், தோழனும் கடவுளே. பக்தர்கள் தங்கள் செயல்களனைத்தையும் கடவுளுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும். மற்ற விஷயங்களைத் துறந்து கடவுளையே தியானம் செய்பவன் எத்தகைய கொடிய பாவியாயினும் நல்லோன் என்றே கருதப்பட வேண்டும். கடவுளிடத்திலேயே மனதைச் செலுத்த வேண்டும். கடவுளையே நேசிக்க வேண்டும். கடவுளையே

| | |
|---|---|
| வணங்க வேண்டும். இப்படி இருப்பவன் கடவுளை அடைவான். கடவுள் சொல்லுகிறான்: | |
| 9.1. அசூயை யற்றவனாகிய உனக்கு இந்த அதி ரகசியமான ஞானத்தை விஞ்ஞானத்துடன் சொல்லுகிறேன். இதையறிவதால் தீமையிலிருந்து விடுபடுவாய். | The Blessed Lord said:<br>(9.1) To Thee, who dost not cavil, I shall declare this profound<br>secret of wisdom combined with knowledge, by<br>knowing which thou shalt be released from evil. |
| 9.2. ராஜவித்தை, ராஜரகசியம், தூய்மை தருவதில் மிக மாண்புடையது, கண்ணெதிரே காண்டற்குரியது. அறத்துக் கிசைந்தது, செய்தற்கு மிக எளிது, அழிவற்றது. | (2) This is sovereign knowledge, sovereign secret, supreme<br>sanctity, known by direct experience" in accord with the law, very easy to practise and imperishable. |
| 9.3. பகையைச் சுடுவோய், இல்லறத்தில் நம்பிக்கையற்ற மனிதர் என்னை எய்தாமல் மீண்டும் நரக சம்சாரப் பாதைகளில் மீளுகின்றனர். | (3) Men who have no faith in this way, not attaining to Me, O Oppressor of the foe (Arjuna), return to the path of Mortal living (saṃsāra). |
| 9.4. அவ்யக்த வடிவாய் நான் இவ்வுலக முழுமையும் சூழ்ந்திருக்கிறேன். என்னிடத்தே பூதங்களெல்லாம் நிலைபெற்றன. அவற்றுட்பட்டதன்று என் நிலை. | The Incarnate Lord as the Supreme Reality<br>(4) By Me all this universe is pervaded through My unmanifested<br>form. All beings abide in Me but I do not abide<br>in them. |
| 5. (மற்றொரு வகையால் நோக்குமிடத்தே) பூதங்கள் என்னுள் நிற்பனவுமல்ல, என் ஈசுவர யோகத்தின் பெருமையை இங்கு பார், பூதங்களைத் தரிக்கிறேன், அவற்றுட்-பட்டேனல்லேன். என் | (5) And (yet) the beings do not dwell in Me; behold My divine mystery. My spirit which is the source of all beings<br>sustains the beings but does not abide in them. |

| | |
|---|---|
| ஆத்மாவில் பூத சிந்தனை இயல்கிறது. | |
| 9.6. எங்கும் இயல்வானும் பெரியானுமாகிய காற்று, எப்படி எப்போதும் வானில் நிலைபெற்றிருக்கிறானோ, அப்படியே பொருள்களெல்லாம் என்னுள் நிலைபெற்றனவென்று தெரிந்து கொள். | (6) As the mighty air moving everywhere ever, abides in etheric space (ākāśa), know thou that in the same manner all existences abide in Me. |
| 9.7. குந்தி மகனே, கற்ப நாசத்தால் எல்லா உயிர்களும் என் இயல்பை எய்துகின்றன. மறுபடி கற்பத் தொடக்கத்தில் நான் அவற்றைப் படைக்கிறேன். | (7) All beings, O Son of Kuntī (Arjuna), pass into nature which is My own at the end of the cycle; and at the beginning of the (next) cycle, I send them forth. |
| 9.8. என் சக்தியில் உறுதிகொண்டு மீட்டு மீட்டும் பூதத் தொகுதி முழுதையும் என் வசமின்றி, சக்தி, அதாவது இயற்கையின் வசத்தால் நான் படைக்கிறேன். | (8) Taking hold of nature which is My own, I send forth again and again all this multitude of beings which are helpless, being under the control of nature (prakṛti). |
| 9.9. தனஞ்சயா! என்னை அத்தொழில்கள் தளையுறுத்தா, அவ்வினைகளிடையே நான் மேற்பட்டவன்போல் அமர்ந்திருக்கிறேன். | (9) Nor do these works bind Me, O winner of wealth (Arjuna),<br>for I am seated as if indifferent, unattached in those actions. |
| 9.10. என் மேற்பார்வையில் *சக்தி சராசர உலகங்களைப் பெறுகிறாள். குந்தி மகனே! இந்த ஏதுவால் உலகம் சுழல்கிறது. (*சக்தி, இயற்கை, பிரகிருதி (Nature) என்ற சொற்கள் ஒரே பொருளுடையன. அஃதே, ஏது அல்லது காரணம் என்றும் சொல்லப்படும். உலகத் | (10) Under My guidance, nature (prakṛti) gives birth to all<br>things, moving and unmoving and by this means, O Son of Kuntī (Arjuna), the world revolves. |

| | |
|---|---|
| தோற்றத்துக்கு அதுவே காரணமாதலாலும், பிரம்மம் குணாதீத மாகையால் காரணமென்று சொல்லத் தகாதலாலும், பிரம்மம் பரம்பொருள்; சுத்த சாக்ஷி.) | |
| 9.11. மனித சரீரந் தரித்த என்னை மூடர் புறக்கணிக்கிறார்கள். உயிர்களுக்கெல்லாம் உயர் தலைவன் நான் என்ற என் பரம நிலையை அவர்கள் அறிகிலர். | (11) The deluded despise Me clad in human body, not knowing My higher nature as Lord of all existences. |
| 9.12. வீணாசையுடையோர், வீண் செயலாளர், வீணறிவாளர், மதியற்றோர், மயக்கத்துக்கு இடமான ராக்ஷத ஆசுர மோகினி சக்திகளைச் சார்ந்து நிற்கின்றனர். (ராக்ஷத, ஆசுர, மோகினி சக்திகளாவன -- அவா, குரூரம், மயக்கம் என்ற சித்த இயல்புகள்) | (12) Partaking of the deceptive nature of fiends and demons,<br>their aspirations are vain, their actions vain and their knowledge vain and they are devoid of judgment. |
| 9.13. பார்த்தா! மகாத்மாக்கள் தெய்வீக இயல்பைக் கைக்கொண்டு பூத முதலும் கேடற்றவனுமாகிய என்னை வேறு மனம் இன்றி வழிபடுகிறான். | (13) The great-souled, O Partha (Arjuna), who abide in the divine nature, knowing (me as) the imperishable source<br>of all beings, worship Me with an undistracted mind. |
| 9.14. திட விரதத்துடன் முயற்சி புரிவோராய், எப்போதும் என்னைப் புகழ்வோராய், என்னைப் பக்தியால் வணங்குவோராய் நித்திய யோகிகள் உபாசிக்கிறார்கள். | (14) Always glorifying Me, strenuous and steadfast in vows,<br>bowing down to Me with devotion, they worship Me, ever<br>disciplined. |
| 9.15. வேறு சிலர் ஞான வேள்வியால் வேட்போராய் | (15) Others again sacrifice with the sacrifice of wisdom and |

| | |
|---|---|
| என்னை ஒருமையாகவும் பன்மையாகவும் பலவாறாக எல்லாவிடத்தும் வழிபடுகிறார்கள். | worship Me as the one, as the distinct and as the manifold, facing in all directions. |
| 9.16. நான் ஓமம்; நான் யாகம்; நான் 'ஸ்வதா' என்ற வாழ்த்துரை; நான் மருந்து; மந்திரம்; நான் நெய், நான் தீ; நான் ஆவி. | (16) I am the ritual action, I am the sacrifice, I am the ancestral oblation, I am the (medicinal) herb, I am the (sacred) hymn, I am also the melted butter, I am the fire and I am the offering. |
| 9.17. இந்த உலகத்தின் அப்பன் நான்; இதன் அம்மா நான்; இதைத் தரிப்போன் நான்; இதன் பாட்டன் நான்; இதன் அறியப்படு பொருள் நான்; தூய்மை செய்வது நான்; ஓங்காரம் நான்; நான் ரிக்; நான் ஸாமம்; நான் யஜுர். | (17) I am the father of this world, the mother, the supporter and the grandsire. I am the object of knowledge, the purifier. I am the syllable Aum and I am the ṛk, the sama and the yajus as well. |
| 9.18. இவ்வுலகத்தின் புகழ், இதனிறைவன், இதன் கரி, இதனுறையுள், இதன் சரண், இதன் தோழன், இதன் தொடக்கம், இதன் அழிவு, இதன் இடம், இதன் நிலை, இதன் அழியாத விதை. | (18) (I am) the goal, the upholder, the lord, the witness, the abode, the refuge and the friend. (I am) the origin and the dissolution, the ground, the resting place and the imperishable seed. |
| 19. நான் வெப்பம் தருகிறேன்; மழையை நான் கட்டிவிடுகிறேன். நான் அதனைப் பெய்விக்கிறேன். நானே அமிர்தம்; நானே மரணம். அர்ஜுனா! உள்ளதும் யான்; இல்லதும் யான். | (19) I give heat; I withhold and send forth the rain. I am immortality and also death, I am being as well as nonbeing, O Arjuna, |
| 9.20. சோமமுண்டார், பாவமகன்றார், மூன்று வேதமறிந்தார், என்னை வேள்விகளால் வேண்டி வானுலகு | (20) The knowers of the three Vedas who drink the soma |

| | |
|---|---|
| தர வேண்டுகின்றனர். அவர்கள் புண்ணிய ஸ்தானமாகிய தேவேந்திர லோகத்தை யெய்தி வானுலகில் திவ்யமான தேவ போகங்களைத் துய்க்கிறார்கள். | juice and are cleansed of sin, worshipping Me with sacrifices,<br>pray for the way to heaven. They reach the holy world Indra (the lord of heaven) and enjoy in heaven the pleasures of the gods. |
| 9.21. விரிவாகிய வானுலகிலே இன்புற்றுப் புண்ணியந் தீர்ந்தவுடன் மறுபடி அழிவுடைய மனித உலகத்துக்குத் திரும்புகிறார்கள். இப்படி மூன்று வேத முறைகளைத் தொழுவார் விருப்பங்களில் வீழ்ந்து உழல்வார். | (9.21) Having enjoyed the spacious world of heaven, they<br>enter (return to) the world of mortals, when their merit is exhausted; thus conforming to the doctrine enjoined in the three Vedas and desirous of enjoyments, they obtain the changeable (what is subject to birth and death). |
| 9.22. வேறு நினைப்பின்றி என்னை வழிபடுவோர் யாவரோ, அந்த நித்திய யோகிகளின் நன்மை தீமையை நான் பொறுப்பேன். | (9.22) But those who worship Me, meditating on Me alone, to them who ever persevere, I bring attainment of what<br>they have not and security in what they have.' |
| 9.23. அன்னிய தேவதைகளை நம்பிக்கையுடன் தொழும் அன்பரும், குந்தியின் மகனே! விதி வழுவி என்னையே தொழுகின்றனர். | (9.23) Even those who are devotees of other gods, worship<br>them with faith, they also sacrifice to Me alone, O Son of<br>Kuntī (Arjuna), though not according to the true law. |
| 9.24. நானே வேள்விகளில் எல்லாம் உணவு உண்பவன். நானே தலைவன்; என்னை மனிதர் உள்ளபடி அறியார்; ஆதலால் நழுவி வீழ்வார். | (9.24) For I am the enjoyer and lord of all sacrifices. But these men do not know Me in My true nature and so they fall. |

| | |
|---|---|
| 9.25. தேவ விரதிகள் தேவரை எய்துவார்; பிதிர்க்களை நோற்பார் பிதிர்க்களை யடைவார்; பூதங்களைத் தொழுவார் பூதங்களை யடைவார்; என்னை வேட்போர் என்னை எய்துவார். | (9.25) Worshippers of the gods go to the gods, worshippers of the manes go to the manes, sacrificers of the spirits go to the spirits and those who sacrifice to Me come to Me. |
| 9.26. இலையேனும், பூவேனும், கனியேனும், நீரேனும் அன்புடனே எனக்கு அளிப்பவன் ஆயின், முயற்சியுடைய அன்னவன் அன்புடன் அளித்ததை உண்பேன் யான். | (9.26) Whosoever offers to Me with devotion a leaf, a flower, a fruit, or water, that offering of love, of the pure of heart I accept. |
| 27. நீ எது செய்யினும், எதனை நீ உண்பினும், எதை நீ ஓமம் பண்ணினும், எதனைக் கொடுத்தாலும், எத்தவத்தைச் செய்தாலும், குந்தி மகனே! கடவுளுக்கர்ப்பணமென்று செய். | (9.27) Whatever thou doest, whatever thou eatest, whatever thou offerest, whatever thou givest away, whatever austerities thou dost practise-do that, O Son of Kuntī (Arjuna), as an offering to Me. |
| 9.28. இங்ஙனம் மங்களம் அமங்களமாகிய பயன்களைத் தருவனவாகிய கர்மத் தளைகளினின்றும் விடுபடுவாய். துறவெனும் யோகத்திசைந்து விடுதலை பெறுவாய், என்னையும் பெறுவாய். | (9.28) Thus shalt thou be freed from the good and evil results which are the bonds of action. With thy mind firmly set on the way of renunciation, thou shalt become free and attain to Me. |
| 9.29. நான் எல்லா உயிர்களிடத்தும் சமமானவன். எனக்குப் பகைவனுமில்லை, நண்பனுமில்லை, ஆனால், என்னை அன்புடன் தொழுவோர் -- அன்னவர் | (9.29) I am the same in (alike to) all beings. None is hateful nor dear to Me. But those who worship Me with devotion they are in Me and I also in them. |

| | |
|---|---|
| என்னகத் தமர்ந்தார்; அவரகத்து நான் உளேன். | |
| 9.30. மிகவும் கொடிய நடையோனாயினும், பிறிது வழிபடாதே என்னை வழிபடுவோன் நல்லோனென்றே கருதுக; ஏனெனில் நன்கு முயல்கின்றான். ஆதலின் | (9.30) Even if a man of the most vile conduct worships me with undistracted devotion, he must be reckoned as righteous for he has rightly resolved. |
| 9.31. அன்னவன் விரைவிலே அறவானாவான், நித்திய சாந்தியு மெய்துவான், குந்தி மகனே; குறிக்கொள்! என தன்பன் சாகமாட்டான். | (9.3l) Swiftly does he become a soul of righteousness and obtain lasting peace. O Son of Kuntī (Arjuna), know thou for certain that My devotee perishes never. |
| 9.32. பாவிகளென்னைப் பணிவாராயினும் மாதரேனும், வைசியரேனும் சூத்திரரும் பரகதி பெறுவார். | (9.32) For those who take refuge in Me, O Pārtha (Arjuna), though they are lowly born, women, Vaiśyas, as well as Śudras, they also attain to the highest goal. |
| 9.33. அப்படி யிருக்கத் தூய்மையார்ந்த அந்தணரும் ராஜரிஷிகளும் எனக் கன்பராயின், என்னே! ஆதலால்; நிலையற்றதும் இன்ப மற்றதுமாகிய இவ்வுலகப் பிறவி யெய்திய நீ என்னை வழிபடக் கடவாய். | (9.33) How much more then, holy Brahmins and devoted royal saints; Having entered this impermanent sorrowful world, do thou worship Me. |
| 9.34. மனத்தை எனக்காக்கிவிடு; பக்தியை எனக்காக்கு, என்னைத் தொழு. என்னைப் பரமாகக் கொள். இங்ஙனமியற்றும் தற்கலப்பு யோகத்தால் என்னையே எய்துவாய். | (9.34) On Me fix thy mind; to Me be devoted; worship Me; revere Me; thus having disciplined thyself, with Me as thy goal, to Me shalt thou come. |

பகவத் கீதை : பத்தாம் அத்தியாயம்

விபூதி யோகம்

CHAPTER X

# God is the Source of all; to know Him is to know all

## The Immanence and Transcendence of God

பக்தியுடன் தியானம் செய்வதற்காகக் கடவுளின் பெருமை இதில் விரித்துக் கூறப்படுகின்றது. கடவுளே எல்லாவற்றிற்கும் பிறப்பிடம். அவரிடமிருந்தே எல்லாம் வெளிவரும். அவரே அழியா வீடு. அவரே அமரர்க்கும் முன்னோர். அவரே பிறப்பிலர். அவரே இறைவன். அவரே உயிர்களனைத்தின் உள்ளத்தில் நிறைந்திருக்கும் ஆத்மா. அவரே வேதங்களுள் சிறந்த சாம வேதம். தேவரில் இந்திரன். ருத்திரர்களில் சங்கரன். மலைகளில் மேருமலை. சப்தங்களுள் பிரணவம். ஸ்தாவரங்களுள் இமயமலை. மரங்களுள் அரசமரம். மனிதர்களுள் அரசன். பசுக்களுள் காமதேனு. அசுரருள் பிரகலாதான். பறவைகளுள் கருடன். வீரர்களுள் ராமன். எழுத்துக்களுள் 'அ' என்னும் முதலெழுத்து. மாதங்களுள் மார்கழி. மேற்கூறியவையெல்லாம் உதாரணமாக ஒவ்வொன்றிலும் சிறந்தவையாக எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. அவரின் பெருமையைத் தனித்தனியே முற்றிலும் கூறுவது இயலாத காரியம். எந்த அசைபொருளும் அசையாப் பொருளும் அவரைவிட்டுத் தனித்து நிற்க முடியாது. ஸ்ரீபகவான் சொல்லுகிறான்:

| | |
|---|---|
| 10.1. பெருந்தோளுடையாய்! பின்னுமோர் முறை நான் சொல்லப்புகும் மிகவுயர் சொல்லினைக் கேளாய்; நீ எனக்கு உகந்தவன்; ஆதலால் நினது நலம் வேண்டி இங்கதனை விளம்புவேன் நினக்கே. | The Blessed Lord said:<br>10.1) Again, O Mighty-armed (Arjuna), hearken to My supreme word. From a desire to do thee good, I will declare it to thee, now that thou art taking delight (in My words). |

| | |
|---|---|
| 10.2. வானவர் கணங்கள் என் மகிமையை உணரார்; பெருந்தகை முனிவரு முணரார்; யாங்கணும், வானோர்கட்கும் மகரிஷிகட்கும் ஆதி நானே. | (10.2) Neither the hosts of gods nor the great sages know any origin of Me for Iam the source of the gods and the great sages In every way. |
| 10.3. பிறப்பதில்லான்; தொடங்குதலிலாதான், உலகின் பெருமுதலான என்றனை யுணர்வோன். மானிடருக்குள்ளே மயக்கந் தீர்ந்தான், பாவமனைத்தினும் விடுதலைப் பட்டான். | (10.3) He who knows Me, the unborn, without beginning, also the mighty lord of the worlds, he, among mortals is undeluded and freed from all sins |
| 10.4. மதியும், ஞானமும், மயக்கமின்மையும், பொறுத்தலும், துன்பமும், உண்மையும், இன்மையும், அச்சமும், அஞ்சாமையும், | (10.4) Understanding, knowledge, freedom from bewilderment, patience, truth, self-control and calmness; pleasure and pain, existence and non-existence, fear and fearlessness. |
| 10.5. துன்புறுத்தாமையும், நடுமையும், மகிழ்ச்சியும், ஈகையும், தவமும், இகழும், புகழும், இங்ஙனம் பலபடுமியல்புகளெல்லாம் என்னிடம் பெறுவன உயிர்கள். | (10.5) Non-violence, equal-mindedness, contentment, austerity, charity, fame and ill-fame (are) the different states of beings proceed from Me alone. |
| 10.6. முன்னை மகரிஷிகள் எழுவரும் நான்கு மனுக்களும் மனத்தால் என்னியல்பு எய்தினர். அவர்களுடைய மரபினரே இம் மக்களெல்லாரும். | (10.6) The seven great sages of old, and the four Manus also are of My nature and born of My mind and from them are all these creatures in the world. |
| 10.7. இத்தகைத்தாகும் எனது பெருமையும் யோகந்தனையும் உள்ளவாறுணர்வோன் அசைவிலா | (10.7) He who knows in truth this glory (magnifestation and power (steady action) of Mine is united (with Me) by unfaltering |

| | |
|---|---|
| யோகத்தமர்வான்; இதிலோர் ஐயமில்லை. | yoga; of this there is no doubt. |
| 10.8. நான் அனைத்திற்கும் தொடக்கம். என்னிடமிருந்தே எல்லாம் இயலும். இங்ஙன முணர்ந்த புலவர் என்னை அன்புடன் தொழுவார். | (10.8) I am the origin of all; from Me all (the whole creation) proceeds. Knowing this, the wise worship Me, endowed with conviction. |
| 10.9. அகத்தினை என்பால் வைத்து, உயிரை என்னுள்ளே புகுத்தி, ஒருவரையொருவர் உணர்விப்பாராய், எக்காலுந் தம்முள் என்னைக் குறித்தியம்புவார்; அன்னோர் மகிழ்ச்சியும் இன்பமும் அடைவார். | (10.9) Their thoughts (are fixed) in Me, their lives (are wholly) given up to Me, enlightening each other and ever conversing of Me, they are contented and rejoicing in Me. |
| 10.10. எப்போதும் யோகத் திருப்பாராகில் அன்புடன் என்னை வழிபடும் அன்னோர்க்கு யான் புத்தியோகம் அளிப்பேன். இதனால் என்னையவர் எய்துவார். | (10.10) To these who are constantly devoted and worship with love, I grant the concentration of understanding which they come unto Me. |
| 10.11. அன்னவர்க்கிரங்கி யான் அன்னவர் ஆத்ம இயல்புயானாகி ஒளியுடை ஞானவிளக்கால் அவரிடை அஞ்ஞானத்தால் தோன்றுமிருளைத் தொலைப்பேன். அர்ஜுனன் சொல்லுகிறான்: | (10.11) Out of compassion for those same ones, remaining within My own true state, I destroy the darkness born of ignorance by the shining lamp of wisdom. |
| 10.12. நீயே பரப்பிரம்மம், நீயே பரவீடு, தூய்மையனைத்தினுஞ் சிறப்புடைய தூய்மை நீ. நின்னையே "நித்தியபுருஷ" னென்றும், ஆதிதேவனென்றும், | Arjuna said: (10.I2) Thou art the Supreme Brahman, the Supreme Abode and the Supreme Purifier, the Eternal, Divine Person, the First of the gods, the Unborn, the All-pervading. |

| | |
|---|---|
| பிறப்பிலானென்றும், இறைமைக் கடவுளென்றும், | |
| 10.13. முனிவரெல்லாரும் மொழிகிறார்; தேவரிஷி நாரதருமங்ஙனமே நவில்கிறார். அசிதரும் தேவலரும் வியாசரும் அங்ஙனமே செப்புகிறார். இங்கு நீ நேரே எனக்கு அதை உரைக்கின்றாய். | (10.13) All the sages say this of Thee, as well as the divine seer Nārada, so also Asita, Devala, Vyāsa and Thou thyself declarest it to me. |
| 10.14. கேசவா! நினது *கிளவி யனைத்தையும் மெய்யெனக் கொண்டேன். பகவனே! விண்ணவரும் அசுரரு நின் விளக்கத்தை யறிவாரோ? (*கிளவி = சொல்) | (10.14) I hold as true, all this that thou sayest to me, O Kesava (Kṛṣṇa); neither the gods nor the demons, O Lord, know Thy manifestation. |
| 10.15. புருஷோத்தமா, உன்னை நீயே அறிவாய் பூதங்களானாய்! பூதத் தலைவனே தேவ தேவ! வையத் திறைவா! | (10.15) Verily Thou Thyself knowest Thyself by Thyself, O Supreme Person; the Source of beings, the Lord of creatures; the God of gods, the Lord of the world! |
| 10.16. எந்த மகிமைகளால் நீ இவ்வுலகங்களைச் சூழ்ந்து நிற்கிறாயோ, அந்த நின் மகிமைகள் தேவத்தன்மையுடையன. அவற்றை எனக்கு மிச்சமின்றி உணர்த்த வேண்டுகிறேன். | (10.16) Thou shoulds tell me of Thy divine manifestations, without exception, whereby, pervading these worlds, Thou dost abide (in them and beyond). |
| 10.17. யோகி! எப்போதும் உன்னையே சிந்தித்து நின்னை யுணருமாறெங்ஙனே? பகவனே! எவ்வெப் படிகளில் நின்னை யான் கருதல் வேண்டும்? | (10.17) How may I know Thee, O Yogin, by constant meditation? In what variousaspects art Thou, O Blessed Lord, to be thought of by me? |

| | |
|---|---|
| 10.18. ஜனார்த்தனா! நின் யோகத்தையும், பெருமையையும் விரித்து மற்றொரு முறை சொல்க. அமிர்தம் போன்ற நின் சொற்கள் எனக்குத் தெவிட்டவில்லை. ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்: | (10.18) Relate to me again in detail, O Janārdana (Kṛṣṇa), of<br>Thy power and manifestation; for I am not satiated with hearing Thy nectar-like speech. |
| 10.19. அச்ச! என் ஆத்மப் பெருமைகள் தேவத்தன்மை உடையனவே, அவற்றுள் பிரதானமானவற்றை நினக்குச் சொல்லுகிறேன். எனது விஸ்தாரத்துக்கு முடிவில்லை. | The Blessed Lord said:<br>(10.19) Yes, I will declare to thee of My divine forms but only<br>of those which are prominent, O best of the Kurus (Arjuna), for there is no end to my extent (the details). |
| 10.20. அர்ஜுனா! உயிர்களனைத்தின் உள்ளே நிற்கும் ஆத்மா நான். அவ்வுயிர்களின் ஆதி நான், இடையும் அவற்றின் இறுதியும் நானே. | (10.20) I, O Guḍākeśa (Arjuna), am the self seated in the<br>hearts of all creatures. I am the beginning, the middle and the very end of beings. |
| 10.21. ஆதித்யர்களில் நான் விஷ்ணு; ஒளிகளில் நான் கதிர் சான்ற ஞாயிறு; காற்றுகளில் மரீசி; நக்ஷத்திரங்களில் சந்திரன். | (10.21) Of the Ādityas I am Viṣṇu; of the lights (I am) the radiant Sun; I am Marīci of the Maruts: of the stars I am<br>the moon. |
| 10.22. வேதங்களில் யான் சாமவேதம்; தேவரில் இந்திரன்; புலன்களில் மனம் யான்; உயிர்களிடத்தே உணர்வு நான். | (10.22) Of the Vedas I am the Sāmaveda; of the gods I am Indra; of the senses I am mind and of beings I am consciousness. |
| 10.23. ருத்திரர்களில் நான் சங்கரன்; இயக்கர் அரக்கருள் யான் குபேரன்; வசுக்களில் நான் தீ; மலைகளில் மேரு. | (10.23) Of the Rudras I am Sarnkara (Siva); of the Yakṣas<br>and the Rākṣasas (I am) Kubera; of the Vasus I am Agni<br>(Fire) and of mountain-peaks I am Meru. |

| | |
|---|---|
| 10.24. பார்த்தா! புரோகிதர்களில் தலைவனாகிய பிருகஸ்பதி நான் என்றுணர். படைத் தலைவரில் நான் கந்தன். நீர் நிலைகளில் நான் கடல். | (10.24) Of the household priests, O Pārtha (Arjuna), know me to be the chief-- Bṛhaṣpati; of the (war) generals I am Skanda; of the lakes I am the ocean. |
| 10.25. மகரிஷிகளில் நான் பிருகு; வாக்குகளில் நான் "ஓம்" என்ற ஓரெழுத்து. யக்ஞங்களில் நான் ஜபயக்ஜம்; ஸ்தாவரங்களில் நான் இமாலயம். | (10.25) Of the great sages I am Bhṛgu; of utterances, I am the single syllable Aum; of offerings I am the offering of silent meditation and of unmovable things (I am) the Himālaya. |
| 10.26. மரங்களனைத்திலும் நான் அரசமரம்; தேவரிஷிகளில் நான் நாரதன்; கந்தர்வருள்ளே நான் சித்தரகுப்தன்; சித்தர்களில் கபிலமுனி. | (10.26) Of all trees (I am) the Aśvattha and of divine seers (I am) Nārada ; among the gandharvas (I am) Chitraratha and of the perfected ones (I am) Kapila the sage. |
| 10.27. குதிரைகளினிடையே நான் அமிர்தத்தில் பிறந்த உச்சை சிரவமென்றுணர். யானைகளில் என்னை ஐராவதமென்றும், மனிதரில் அரசனென்றும் அறி. | (10.27) Of horses, know me to be Ucchaiśravas, born of nectar; of lordly elephants (I am) Airāvata and of men (I am) the monarch. |
| 10.28. ஆயுதங்களில் நான் வஜ்ரம்; பசுக்களில் நான் காமதேனு; பிறப்பிப்போரில் நான் மன்மதன்; பாம்புகளில் வாசுகி. | (10.28) Of weapons I am the thunderbolt; of the cows I am the cow of plenty; of the progenitors I am the God of love; of the serpents I am Vāsuki. |
| 10.29. நாகர்களினிடை நான் அநந்தன்; நீர் வாழ்வோரில் வருணன்; பிதிர்க்களில் நான் அரியமான்; தம்மைக் கட்டினவர்களில் நான் யமன். | (10.29) Of the nāgas I am Ananta; of the dwellers in water I am Varuna ; of the (departed) ancestors I am Aryama; of those who maintain law and order, I am Yama. |

| | |
|---|---|
| 10.30. அசுரரில் பிரகலாதன் யான்; இயங்குவனவற்றில் காலம் யான்; விலங்குகளில் சிங்கம்; பறவைகளில் கருடன். | (10.30) Of the Titans I am Prahlāda ; of calculators I am Time:<br>of beasts I am the King of beasts (lion) and of birds (I am)<br>the son of Vinatā (Garuḍa). |
| 10.31. தூய்மை செய்வனவற்றுள்ளே காற்று நான்; படை தரித்தோரில் நான் ராமன்; மீன்களில் நான் சுறா; ஆறுகளில் கங்கை. | (10.31) Of purifiers I am the wind; of warriors I am Rāma ; of<br>fishes I am the alligator and of rivers I am the Ganges. |
| 10.32. படைப்புக்களின் ஆதியும் அந்தமும் நான், அர்ஜுனா! வித்தைகளில் நான் அத்யாத்ம வித்தை; பேசுவோரிடையே நான் பேச்சு. | (10.32) Of creations I am the beginning, the end and also the<br>middle, O Arjuna; of the sciences (I am) the science of the<br>self; of those who debate I am the dialectic. |
| 10.33. எழுத்துக்களில் நான் 'அகரம்'; புணர்ப்புக்களில் இரட்டைப் புணர்ப்பு; நான் அழிவற்ற காலம்; எப்பாரிசத்தும் சுமப்போன் யானே. | (10.33) Of letters I am (the letter) A and of compounds (I am)<br>the dual; I also am imperishable time and I the creator whose<br>face is turned on all sides. |
| 10.34. எல்லாவற்றையும் அழிக்கும் மரணம் நான். எதிர்காலப் பொருள்களின் பிறப்பு நான். பெண்களிடத்து நான் கீர்த்தி, வாக்கு, நினைவு, மேதை, ஸ்திதி, பொறை. | (10.34) I am death, the all-devouring and (am) the origin of<br>things that are yet to be; and of feminine beings, (I am) fame, prosperity, speech, memory, intelligence, firmness<br>and patience. |
| 10.35. அங்ஙனமே, சாமங்களில் நான் "பிருகத்சாமம்" என்ற பெரிய சாமம்; சந்தஸ்களில் நான் காயத்ரி; | (10.35) Likewise, of hymns (I am) Brihatsāman, of metres (I am) gāyatrī ; of months (I am) mārgaśīrṣa and of seasons |

| | |
|---|---|
| மாதங்களில் நான் மார்கழி; பருவங்களில் மலர்சான்ற இளவேனில். | (I am) the flower-bearer (spring). |
| 10.36. வஞ்சகரின் சூது நான்; ஒளியுடையோரின் ஒளி நான். நான் வெற்றி, நான் நிச்சயம்; உண்மையுடையோரின் உண்மை நான். | (10.36) Of the deceitful I am the gambling; of the splendid I am the splendour; I am victory; I am effort and I am the goodness of the good. |
| 10.37. விருஷ்ணி குலத்தாரில் நான் வாசுதேவன்; பாண்டவர்களில் தனஞ்ஜயன்; முனிகளில் வியாசன்; கவிகளில் சுக்கிரகவி. | (10.37) Of the Vṛṣṇis I am Vāsudeva; of the Pāṇḍavas (I am) the Winner of wealth (Arjuna); of the sages I am Vyāsa also and of the poets (I am) the poet Uśanā. |
| 10.38. ஆள்வோரிடத்தே கோல் நான்; வெற்றியை விரும்புவோரிடத்தே நீதி நான். ரகசியங்களில் நான் மௌனம்! ஞானமுடையோரிடத்தே நான் ஞானம். | (10.38) Of those who chastise I am the rod (of chastisement); of those that seek victory I am the wise policy; of things secret I am the silence and of the knowers of wisdom I am the wisdom. |
| 10.39. எல்லா உயிர்களிலும் விதை எதுவோ அது நான். அர்ஜுனா! சராசரங்களில் என்னையின்றியுள்ள பூதமொன்றில்லை. | (10.39) And further, whatsoever is the seed of all existences that am I, O Arjuna; nor is there anything, moving or unmoving that can exist without Me. |
| 10.40. பார்த்தா! என் திவ்ய மகிமைகளுக்கு முடிவில்லை. விஸ்தாரமான என் மகிமைகளில் கொஞ்சம் மாத்திரமே உனக்குரைத்தேன். | (10.40) There is no end to My divine manifestations, O Conqueror of the foe (Arjuna). What has been declared by Me is only illustrative of My infinite glory. |
| 10.41. எதெது பெருமையுடைத்து, உண்மையுடைத்து, அழகுடைத்து, | (10.41) Whatsoever being there is endowed with glory and grace and vigour, know |

| | |
|---|---|
| வலிமையுடைத்து -- அதுவெல்லாம் எனது ஒளியின் அம்சத்தில் பிறந்ததென்றுணர். | that to have sprung from a fragment of My splendour. |
| 10.42. அன்றி, இதைப் பலவாறாகத் தெரிவதில் உனக்குப் பயன் யாது? எனது கலையொன்றால் இவ்வையகத்தை நிலை நிறுத்தியுள்ளேன். | (10.42) But what need is there, O Arjuna, for such detailed knowledge by you? I support this entire universe pervading it with a single fraction of Myself. |

## பகவத் கீதை : பதினொன்றாம் அத்தியாயம்

## விசுவரூப தரிசனம்

இங்ஙனம் கண்ணனுடைய பெருமைகளைக் கேட்ட அர்ஜுனன் அவற்றை நேரில் காண வேண்டுமென்ற விருப்பமுற்றுக் கண்ணனை வேண்ட அவன் அவற்றைக் காண்பதற்குரிய திவ்ய நேத்திரங்களை அளிக்கிறான். அர்ஜுனன் அவற்றால் கண்ணனுடைய விசுவரூபத்தைக் கண்டு மகிழ்கிறான். விசுவரூபத்தின் சொரூபம் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அநேக வாய்களும், பல கண்களும், பல ஆயுதங்களும், சிறந்த ஆடை ஆபரணங்களும், சிறந்த வாசனைகளும் பொருந்திய அந்த விசுவரூபத்தில் வையக முழுதும் ஒருங்கே அடங்கியிருப்பதைக் கண்ட அர்ஜுனன் வியப்புற்றுக் கண்ணனைத் துதிக்கிறான். பிறகு அர்ஜுனனது வேண்டுகோளின் பேரில், கண்ணன் தனது விசுவரூபத்தைச் சுருக்கிக் கொண்டு, முன்போல் கைகளில் சாட்டையும் சங்கு சக்கரங்களையுமேந்தி நின்று, தனது உண்மையான சொரூபத்தைக் காணவும் தன்னைப் பெறவும் பக்தி ஒன்றே சிறந்த மார்க்கமாதலால் தன்னையே நேசித்திருக்கும்படி அர்ஜுனனுக்கு உபதேசிக்கிறான். அர்ஜுனன் சொல்லுகிறான்:

Having heard the greatness of Bhagavān, Arjuna supplicated to Him and expressed his desire to see His Universal Form. Bhagavān blesses him with supernatural eyes. Arjuna was joyous to see the universal form of the Lord. There is extensive description of the Universal form. Multiple mouths, many eyes, multiple weapons, exquisite clothes and fragrances, all encompassing the whole world in unity amaze Arjuna and make him worship bhagavān.

Upon request from Arjuna, Bhagavān retracts His Universal Form and appears in His usual four-handed form holding the whip, conch, and discus He instructs Arjuna the Path of Devotion is the best among all paths and to hold Him dear.

## CHAPTER XI

# The Lord's Transfiguration

## Arjuna wishes to see the Universal Form of God

| | |
|---|---|
| 11.1. என் மீதருள் பூண்டு, எனக்கிரங்கி, ஆத்ம ஞானமென்ற பரம ரகசியத்தை நீ எனக்கு உரைத்தது கேட்டு, என் மயக்கம் தீர்ந்து போயிற்று. | Arjuna said:<br>(11.1) The supreme mystery, the discourse concerning the Self which thou hast given out of grace for me-by this my bewilderment is gone from me. |
| 11.2. உயிர்களின் தோற்றத்தையும் அழிவையும் பற்றி விரிவுறக் கேட்டேன். தாமரையிதழ் போன்ற விழிகளையுடையோய், நின் கேடற்ற பெருமையையும் கேட்டேன். | (11.2) The birth and passing away of things have been heard by me in detail from Thee, O Lotus-eyed (Kṛṣṇa), as also Thy imperishable majesty. |
| 11.3. பரமேசுவரா, புருஷோத்தமா, நின்னைப்பற்றி நீ எனக்குச் சொல்லியபடியே, நின் ஈசுவர ரூபத்தைக் காண விரும்புகிறேன். | (11.3) As Thou hast declared Thyself to be, O Supreme Lord, even so it is. (But) I desire to seeThy divine form, O Supreme Person. |
| 11.4. இறைவனே, யோகேசுவரா, அதை நான் காணுதல் சாத்தியமென்று நீ கருதுவாயெனில், எனக்கு நின் அழிவற்ற ஆத்மாவைக் காட்டுக. ஸ்ரீபகவான் சொல்லுகிறான்: | (11.4) If Thou, O Lord, thinkest that by me, It can be seen then reveal to me, Thy mperishable Self, O Lord of yoga (Kṛṣṇa). |
| 11.5. பல நூறாகவும், பல்லாயிரமாகவும் வகை பல, நிறம் | The Blessed Lord said:<br>(11.5) Behold, O Partha (Arjuna), My forms, a hundred-fold, a thousand-fold, |

| | |
|---|---|
| பல, அளவு பலவாகும் என் திவ்ய ரூபங்களைப் பார்! பார்த்தா! | various in kind, divine, of various colours and shapes. |
| 11.6. ஆதித்யர்களைப் பார்; வசுக்களைப் பார்; அசுவினி தேவரைப் பார். மருத்துக்களைப் பார்; பாரதா! இதற்குமுன் கண்டிராத பல ஆச்சரியங்களைப் பார். | (11.6) Behold, the Ādityas, the Vasus, the Rudras, the two Aśvins and also the Maruts, Behold, O Bhārata (Arjuna) many wonders never seen before. |
| 11.7. அர்ஜுனா! இன்று, இங்கே, என்னுடலில் சராசரமான உலக முழுதும் ஒருங்கு நிற்பதைப் பார்; இன்னும் வேறு நீ எதைக் காண விரும்பினும், அதை இங்கு காண். | (11.7) Here today, behold the whole universe, moving and unmoving and whatever else thou desirest to see, O Gudakesa (Arjuna), all unified in My body, |
| 11.8. உன்னுடைய இயற்கையான இக்கண்களால் என்னைப் பார்க்க முடியாது. உனக்கு ஞானக் கண் கொடுக்கிறேன். என்னுடைய ஈசுவர யோகத்தைப் பார். சஞ்ஜயன் சொல்லுகிறான்: | (11.8) But thou canst not behold Me with this (human) eye of yours; I will bestow on thee the supernatural eye. Behold My divine power. |
| 11.9. அரசனே இவ்வாறுரைத்துவிட்டு, அப்பால் பெரிய யோகத் தலைவனாகிய ஹரி பார்த்தனுக்கு மிக உயர்ந்த தன் கடவுள் வடிவைக் காட்டினான். | Samjaya said:<br>(11.9) Having thus spoken, O King, Hari, the great lord of yoga, then revealed to Pārtha (Arjuna), His Supreme and Divine Form. |
| 11.10. (அவ்வடிவம்) பல வாய்களும், பல விழிகளுமுடையது; பல அற்புதக் காட்சிகளுடையது; பல திவ்யாபரணங்கள் பூண்டது; பல தெய்வீகப் படைகள் ஏந்தியது. | (11.10) Of many mouths and eyes, of many visions of marvel, of many divine ornaments, of many divine uplifted weapons. |
| 11.11. திவிய மாலைகளும் ஆடைகளும் புனைந்தது; திவ்ய கந்தங்கள் பூசியது; எல்லா வியப்புக்களும் சான்றது; | (11.11) Wearing divine garlands and raiments, with divine perfumes and ointments, made up of allwonders, resplendent, |

| | |
|---|---|
| எல்லையற்றது; எங்கும் முகங்களுடைய தேவ ரூபம். | boundless, with face turned everywhere . |
| 11.12. வானத்தில் ஒருங்கே ஆயிரம் இரவிகள் எழுவாராயின் அங்கு தோன்றும் ஒளியை அந்த மகாத்மாவின் ஒளிக்கு நிகராகக் கூறலாம். | (11.12) If the light of a thousand suns were to blaze forth all at once in the sky, that might resemble the splendour of that exalted Being. |
| 11.13. அங்கு பல பகுதிப்பட்டதாய், வையக முழுதும் அந்தத் தேவ தேவனுடைய சரீரத்தில் ஒருங்குற்று நிற்பதை அப்போது பாண்டவன் கண்டான். | (11.13) There the Pandava (Arjuna) beheld the whole universe, with its manifold divisions gathered together in one, in the body of the God of gods. |
| 11.14. அப்போது தனஞ்ஜயன் பெரு வியப்பெய்தி, மயிர் சிலிர்த்து, அக்கடவுளை முடியால் வணங்கிக் கைகளைக் கூப்பிக் கொண்டு சொல்லுகிறான். அர்ஜுனன் சொல்லுகிறான்: | (11.14) Then he, the Winner of wealth (Arjuna) , struck with amazement, his hair standing on end, bowed down his head to the Lord, with hands folded (in salutation), said: |
| 11.15. தேவனே! நின் உடலில் எல்லாத் தேவர்களையும் காண்கிறேன். பூத வகைகளின் தொகுதிகளைக் காண்கிறேன். தாமரை மலரில் வீற்றிருக்கும் ஈசனாகிய பிரமனையும், எல்லா ரிஷிகளையும் தேவ சர்ப்பங்களையும் இங்கு காண்கிறேன். | Arjuna said:<br>(11.15) In Thy body, O God, I see all the gods and the varied hosts of beings as well, Brahmā, the lord seated on the lotus throne and all the sages and heavenly nāgas, |
| 11.16. பல தோளும், பல வயிறும், பல வாயும், பல விழிகளுமுடைய எல்லையற்ற வடிவிலே நின்னை எங்கணும் காண்கிறேன். எல்லாவற்றுக்கும் ஈசனே, எல்லாந் | (11.16) I behold Thee, infinite in form on all sides, with numberless arms, bellies, faces and eyes, but I see not Thy end or Thy middle or Thy beginning, O Lord of the universe, O |

| | |
|---|---|
| தன் வடிவாகக் கொண்டவனே, உனக்கு முடிவேனும், இடையேனும், தொடக்கமேனும் காண்கிலேன். | Form Universal. |
| 11.17. மகுடமும் தண்டும் *வலயமும் தரித்தாய். ஒளித்திரளாகி யாங்கணும் ஒளிர்வாய். தழல்படு தீயும் ஞாயிறும் போல அளவிடற்கரியதாக நினைக் காண்கிறேன். (*வலயம் = சக்கரம்) | (11.17) I behold Thee with Thy crown, mace and discus, glowing everywhere as a mass of light, hard to discern, (dazzling) on all sides with the radiance of the flaming fire and sun, incomparable. |
| 11.18. அழிவிலாய், அறிதற்குரியனவற்றில் மிகவுஞ் சிறந்தாய்; வையத்தின் உயர் தனி உறையுளாவாய்; கேடிலாய்; என்றுமியல் அறத்தினைக் காப்பாய்; 'சநாதன புருஷன்' நீயெனக் கொண்டேன். | (11.18) Thou art the Imperishable, the Supreme to be realized. Thou art the ultimate resting-place of the universe; Thou art the undying guardian of the eternal law. Thou art the Primal Person, I think. |
| 11.19. ஆதியும் நடுவும் அந்தமுமில்லாய், வரம்பிலா விறவினை; கணக்கிலாத் தோளினை; ஞாயிறுந் திங்களும் நயனமாகக் கொண்டனை; எரியுங் கனல் போலியலு முகத்தினை; ஒளியால் முழுமையுலகையும் கொளுத்துவாய்; இங்ஙன முன்னைக் காண்கிறேன். | (11.19) I behold Thee as one without beginning, middle or end, of infinite power, of numberless arms, with the moon and the sun as Thine eyes, with Thy face as a flaming fire, whose radiance burns up this universe. |
| 11.20. வானத்துக்கும் பூமிக்கும் நடுவேயுள்ள இடைவெளியும் எல்லாத் திசையும் நின்னால் நிரப்புற்றிருக்கின்றன. உன்னுடைய அற்புதமும் உக்கிரமுமான | (11.20) This space between heaven and earth is pervaded by Thee alone, also all the quarters (directions of the sky). O Exalted One, when this wondrous, terrible form of Thine is seen, the three worlds tremble. |

| | |
|---|---|
| இவ்வடிவத்தைக் கண்டு மூன்று உலகங்களும் சோர்வெய்துகின்றன. | |
| 11.21. இந்த வானவர் கூட்டமெல்லாம் நின்னுள்ளே புகுகின்றது. சிலர் அச்சமெய்தி நின்னைக் கைகூப்பிப் புகழ்கின்றனர். மகரிஷிகளும் சித்தர்களுமாகிய கூட்டத்தார் நின்னை வண்மையுடைய புகழுரைகள் சொல்லிப் புகழ்கின்றனர். | (11.21) Yonder hosts of gods enter Thee and some, in fear, extol Thee, with folded hands, And bands of great seers and perfected ones cry "hail" and adore Thee with hymns of abounding praise. |
| 11.22. *ருத்திரர், ஆதித்யர், வசுக்கள், சாத்யர், விசுவே தேவர், அசுவினி தேவர், மருத்துக்கள், ஊஷ்மபர், கந்தர்வர், யக்ஷர், அசுரர், சித்தர், இக்கூட்டத்தார்களெல்லாரும் நின்னை வியப்புடன் நோக்குகின்றனர். (*இங்கே கூறப்படும் ருத்திரர் முதலானோர் தேவ வகுப்புகளாவார்) | (11.22) The Rudras, the Ādityas, the Vasus, the Sādhyas: the Viśvas, the two Aśvins, the maruts and the manes and the hosts of Gandharvas, Yakṣas, Asuras and Siddhas, all gaze at Thee and are quite amazed. |
| 11.23. பெருந்தோளாய், பல வாய்களும், விழிகளும், பல கைகளும், பல கால்களும், பல வயிறுகளும், பல பயங்கரமான பற்களுமுடைய நின் பெருவடிவைக் கண்டு உலகங்கள் நடுங்குகின்றன. யானும் அங்ஙனமே. | (11.23) Seeing Thy great form, of many mouths and eyes, O Mighty-armed, of many arms, thighs and feet, of many bellies, terrible with many tusks, the worlds tremble and so do I. |
| 11.24. வானைத் தீண்டுவது, தழல்வது, பல வர்ணங்களுடையது. திறந்த வாய்களும் கனல்கின்ற விழிகளுமுடையது. இனைய நின் வடிவத்தைக் கண்டு விஷ்ணுவே, | (11.24) When I see Thee touching the sky, blazing with many hues, with the mouth opened wide, and large glowing eyes, my inmost soul trembles in fear and I find neither |

| | |
|---|---|
| எனக்கு நிலைகொள்ளவில்லை. யான் அமைதி காணவில்லை. | steadiness nor peace, O Viṣṇu! |
| 11.25. அஞ்சு தரும் பற்களையுடைத்தாய், ஊழித் தீ போன்ற நின் முகங்களைக் கண்ட அளவிலே, எனக்குத் திசைகள் தெரியவில்லை; சாந்தி தோன்றவில்லை. தேவர்களின் தலைவனே; வையகத்துக்கு உறைவிடம் ஆவாய்; அருள் செய்க! | (11.25) When I see Thy mouths terrible with their tusks, like Time's devouring flames, I lose sense of the directions and find no peace. Be gracious, O Lord of gods, Refuge of the Worlds! |
| 11.26. இந்தத் திருதராஷ்டிரனின் மக்களெல்லாரும் மற்ற அரசக் கூட்டத்தார்களுடன் நின்னுள்ளே (புகுகின்றனர்). பீஷ்மனும், துரோணனும், சூதன் மகனாகிய இந்த கர்ணனும் நம்முடைய பக்கத்து முக்கிய வீரர்களும், | (11.26) All yonder sons of Dhrtaṛāṣṭra together with the hosts of kings and also Bhīṣma, Droṇa and Karṇa along with the chief warriors on our side too,- |
| 11.27. கொடிய பற்களுடைய பயங்கரமான நின் வாய்களில் விரைவுற்று வீழ்கின்றனர். சிலர் நின் பல்லிடைகளில் அகப்பட்டுப் பொடிபட்ட தலையினராகக் காணப்படுகின்றனர். | (11.27) Are rushing into Thy fearful mouths set with terrible tusks. Some caught between the teeth are seen with their heads crushed to powder. |
| 11.28. பல ஆறுகளின் வெள்ளங்கள் கடலையே நோக்கி வந்து வீழ்வது போல் இந்த நரலோக வீரர் நின் சுடர்கின்ற வாய்களில் வந்து வீழ்கின்றனர். | (11.28) As the many rushing torrents of rivers race towards the ocean, so do these heroes of the world of men rush into Thy flaming mouths. |
| 11.29. விளக்குப் பூச்சிகள் மிகவும் விரவுடனெய்தி எரிகின்ற விளக்கில் வீழ்ந்து நாசமுறுதல் போல, உலகங்கள் மிகவும் விரைவுடன் | (11.29) As moths rush swiftly into a blazing fire to perish there, so do these men rush into Thy mouths with great speed to their own destruction, |

| | |
|---|---|
| நின் வாய்களில் வந்து விழுந்து நாசமடைகின்றன. | |
| 11.30. கனல்கின்ற நின் வாய்களால் எப்புறத்தும் எல்லா உலகங்களையும் நீ தீண்டுகிறாய். விஷ்ணு! நின் உக்கிரமான சுடர்கள் தங்கதிர்களால் வையை முழுதையும் நிரப்பிச் சுடுகின்றன. | (11.30) Devouring all the worlds on every side with Thy flaming mouths, thou lickest them up. Thy fiery rays fill this whole universe and scorch it with their fierce radiance, O Viṣṇu! |
| 11.31. உக்கிர ரூபந் தரித்த நீ யார்? எனக்குரைத்திடுக, தேவற்களிற் சிறந்தாய், நின்னை வணங்குகிறேன். அருள் புரி. ஆதியாகிய உன்னை அறிய விரும்புகிறேன். இங்கு உனது தொழிலை அறிகிலேன். ஸ்ரீபகவான் சொல்லுகிறான்: | (11.31) Tell me who Thou art with form so terrible. Salutation to Thee, O Thou Great Godhead, have mercy. I wish to know Thee (who art) the Primal One, for I know not Thy working. |
| 11.32. உலகத்தை அழிக்கத் தலைப்பட்ட காலமே நான் மனிதர்களை இங்குக் கொல்லத் தொடங்கியுள்ளேன். இங்கிருதிறத்துப் படைகளிலே நிற்கும் போராட்கள் அனைவரினும் உன்னைத் தவிர வேறு யாரும் மிஞ்ச மாட்டார்கள். | The Blessed Lord said:<br>(11.32) Time am I, world-destroying, grown mature, engaged here in subduing the world. Even without thee (thy action), all the warriors standing arrayed in the opposing armies shall cease to be. |
| 11.33. ஆதலால் நீ எழுந்து நில்; புகழெய்து; பகைவரை வென்று செழிய ராஜ்யத்தை ஆள். நான் இவர்களை ஏற்கனவே கொன்றாய் விட்டது. *இடக்கை வீரா, நீ வெளிக்காரணமாக மட்டும் நின்று தொழில் செய். (*இடக்கைவீரன் என்பது பார்த்தனுக்கு ஒரு பெயர்) | (11.33) Therefore arise thou and gain' glory. Conquering thy foes, enjoy a prosperous kingdom. By Me alone are they slain already, Be thou merely the occasion, O Savyasācin<br>(Arjuna). |

| | |
|---|---|
| 11.34. துரோணனையும், பீஷ்மனையும், ஜயத்ரதனையும், கர்ணனையும் மற்ற யுத்த வீரர்களையும் நான் கொன்றாய்விட்டது. (வெளிப்படையாக) நீ கொல்; அஞ்சாதே; போர் செய்; செருக்களத்தில் நின் பகைவரை வெல்வாய். சஞ்சயன் சொல்லுகிறான்: | (11.34) Slay Drona, Bhisma, Jayadratha, Kama and other great warriors as well, who are already doomed by Me.. Be not afraid. Fight, thou shalt conquer the enemies in battle. |
| 11.35. கேசவன் சொல்லிய இவ்வார்த்தையைக் கேட்டுப் பார்த்தன் மெய்ந் நடுக்கத்துடன் அஞ்சலி புரிந்தான். மீட்டும் கண்ணனை நமஸ்காரம் பண்ணி, அச்சத்துடன் வாய் குழறி வணங்கிச் சொல்லுகிறான். அர்ஜுனன் சொல்லுகிறான்: | (11.35) Having heard this utterance of Keśava (Kṛṣṇa), Kirīṭin (Arjuna), with folded hands and trembling, saluted again and prostrating himself with great fear, spoke in a faltering voice to Kṛṣṇa. |
| 11.36. *இருஷிகேசா! உன் பெருங்கீர்த்தியில் உலகங் களிப்பதும் இன்புறுவதும் பொருந்தும். ராட்சதர் அச்சமுற்றுத் திசைகளில் மறைகிறார்கள். சித்தக் குழாத்தினர் அனைவரும் நின்னை வணங்குகிறார்கள். (இருஷிகேசன் (ரிஷிகேசன்) என்பது கண்ணனுக்கு ஒரு பெயர்) | Arjuna said:<br>(11.36) O Hriṣīkeśa (Kṛṣṇa),rightly does the world rejoice and delight in glorifying Thee. The Raksasas are fleeing in terror inall directions and all the hosts of perfected ones are bowing down before Thee (in adoration). |
| 11.37. மகாத்மாவே! நின்னை எங்ஙனம் வணங்காதிருப்பார்? நீ ஆதி கர்த்தா. பிரம்மனிலும் சிறந்தாய். அநந்தா, தேவேசா, வையத்தின் உறைவிடமே, நீ | (11.37) And why should they not do Thee homage, O Exalted One, who art greater than Brahmā, the original creator? O Infinite Being, Lord of the gods, Refuge of the universe, |

| | |
|---|---|
| அழிவற்ற பொருள், நீ சத்; நீ அவற்றைக் கடந்த பிரம்மம். | Thou art the Imperishable, the being and the non-being and what is beyond that. |
| 11.38. நீ ஆதிதேவன், தொல்லோன், நீ இந்த அகிலத்தின் பரம நிலையம். நீ அறிவோன், நீ அறிபடு பொருள். நீ பரமபதம். அநந்த ரூபா நீ இவ்வுலகினுட் பரந்து கிடக்கிறாய். | (11.38) Thou art the First of gods, the Primal Person, the Supreme Resting Place of the world. Thou art the knower and that which is to be known and the supreme goal. And by Thee is this universe pervaded, O Thou of infinite form! |
| 11.39. நீ வாயு, யமன், அக்கினி, வருணன், சந்திரன், முப்பாட்டனாகிய பிரமன் நீ. உன்னை ஆயிரமுறை கும்பிடுகிறேன். மீண்டு மீண்டும் உனக்கு "நமோ நம:" | (11.39) Thou art Vāyu (the wind), Yama (the destroyer), Agni (the fire), Varuṇa (the sea-god) and Śaśānka (the moon), and Prajāpati, the grandsire (of all). Hail, hail to Thee, a thousand times. Hail, hail to Thee again and yet again. |
| 11.40. உன்னை முன்புறத்தே கும்பிடுகிறேன்; உன்னைப் பின்புறத்தே கும்பிடுகிறேன். எல்லாமாவாய், உன்னை எப்புறத்துங் கும்பிடுகிறேன். நீ எல்லையற்ற வீரியமுடையாய், அளவற்ற வலியுடையாய், சர்வத்திலும் நிறைந்திருக்கிறாய்; ஆதலால் நீ சர்வன். | (11.40) Hail to Thee in front, (hail) to Thee behind and hail Thee on every side, O All; boundless in power and immeasurable in might, Thou dost penetrate all and therefore Thou art All. |
| 11.41. இப்படிப்பட்ட நின் பெருமையை அறியாமல் நின்னைத் தோழனென்று கருதித் துடிப்புற்று, "ஏ கண்ணா! ஏ யாதவா! ஏ தோழா!" என்று தவறுதலாவேனும் | (11.41) For whatsoever I have spoken in rashness to Thee, thinking that Thou art my companion and unaware of this (fact of) Thy greatness, ('O Kṛṣṇa, O Yādava, O Comrade"; out of my negligence or may be through fondness, |

| | |
|---|---|
| அன்பாலேனும் நான் சொல்லியிருப்பதையும், | |
| 11.42. விளையாட்டிலும், படுக்கையிலும், இருப்பிலும், உணவிலும், தனியிடத்தேனும், அன்றி (மற்றவர் முன்னே யெனினும்) நான் உனக்கு வேடிக்கையாகச் செய்திருக்கும் அவமதிப்புகளையும் -- அவற்றையெல்லாம் பொறுக்கும்படி வேண்டுகிறேன், அளவற்றோய்! | (11.42) And for whatsoever disrespect was shown to Thee in jest, while at play or on the bed or seated or at meals, either alone or in the presence of others, I pray, O Unshaken One, forgiveness from Thee, the Immeasurable. |
| 11.43. சராசரமாகிய இவ்வுலகத்துக்கு நீ தந்தையாவாய், இவ்வுலகத்தால் தொழத்தக்கனை; மிகவும் சிறந்த குரு நீ. உனக்கு நிகர் யாருமில்லை, எனில் உனக்கு மேல் வேறு யாவர்? மூன்று உலகங்களையும் ஒப்பற்ற பெருமை உடையவனே! | (11.43) Thou art the father of the world of the moving and the unmoving. Thou art the object of its worship and venerable teacher. None is equal to Thee, how then could there be one greater than Thee in the three worlds, O Thou<br>of incomparable greatness? |
| 11.44. ஆதலால், உடல் குனிய வணங்கி நின்பால் அருள் கேட்கிறேன். ஈசா, வேண்டுதற்குரியாய், மகனைத் தந்தை போலும், தோழனை தோழன் போலும், அன்பனை யன்பன் போலும் நீ என்னைப் பொறுத்தல் வேண்டும். | (11.44) Therefore bowing down and prostrating my body before Thee, Adorable Lord, I seek Thy grace. Thou, O God,<br>shouldst bear with me as a father to his son, as a friend to his friend, as a lover to his beloved. |
| 11.45. இதற்கு முன் காணாததை இன்று கண்டு மகிழ்ச்சியுறுகிறேன் எனினும், என் மனம் அச்சத்தால் சோர்கிறது. தேவா, எனக்கு, நின் முன்னை வடிவத்தைக் காட்டுக. | (11.45) I have seen what was never seen before and I rejoice but my heart is shaken with fear. Show me that other (previous) form of Thine, O God and be gracious, O Lord of the gods and Refuge of the Universe! |

| | |
|---|---|
| தேவேசா, ஜகத்தின் நிலையமே, எனக்கருள் செய்க. | |
| 11.46. முன்போலவே, கிரீடமும், தண்டும் கையில் சக்கரமுமாக நின்னைக் காண விரும்புகிறேன். அகில மூர்த்தியே, ஆயிரந்தோளாய், முன்னை நாற்றோள் வடிவினை எய்துக. ஸ்ரீபகவான் சொல்லுகிறான்: | (11.46) I wish to see Thee even as before with Thy crown, mace, and disc in Thy hand. Assume Thy four-armed shape, OThou of a thousand arms and of universal form. |
| 11.47. அர்ஜுனா! யான் அருள்கொண்டு ஆத்ம யோகத்தால் எனது பரவடிவை நினக்குக் காண்பித்தேன். ஒளிமயமாய், அனைத்துமாய், எல்லையற்றதாய், ஆதியாகிய இவ்வடிவத்தை இதற்கு முன் உன்னைத் தவிர வேறு யாரும் பார்த்ததே கிடையாது. | The Blessed Lord said:<br>(11.47) By My grace, through My divine power; O Arjuna, was shown to thee this supreme form, luminous, universal, infinite and primal which none but thee has seen before. |
| 11.48. வேதங்களாலும், வேள்வியாலும், கல்விகளாலும், தானங்களாலும், கிரியைகளாலேனும், மனித உலகத்தில் என்னை இவ்வடிவத்தில் உன்னையன்றி வேறு யாராலும் பார்க்க முடியாது. குருகுலத்தில் சிறந்த வீரா! | (11.48) Neither by the Vedas, (nor by) sacrifices nor by study nor by gifts nor by ceremonial rites nor by severe austerities can I with this form be seen in the world of men by any one else but thee, O hero of the Kurus (Arjuna). |
| 11.49. இப்படிப்பட்ட என் கோர வடிவத்தைக் கண்டு கலங்காதே; மயங்காதே. அச்சம் நீங்கி இன்புற்ற மனத்துடன் எனது முன்னை வடிவத்தை இதோ பார். சஞ்ஜயன் சொல்லுகிறான்: | (11.49) May you not be afraid, may you not be bewildered seeing this terrific form of Mine. Free from fear and glad at heart, behold again this other (former) form of Mine. |
| 11.50. இங்ஙனம் வாசுதேவன் அர்ஜுனனிடம் கூறி மீண்டும் தன் | Saṁjaya said:<br>(11.50) Having thus spoken to Arjuna, Vāsudeva (Kṛṣṇa) |

| | |
|---|---|
| பழைய வடிவத்தைக் காட்டினான். அந்த மகாத்மா மறுபடி தன் இனிய வடிவமெய்தி அச்சமுற்றிருந்த பார்த்தனை ஆறுதல் கொள்ளச் செய்தான். அர்ஜுனன் சொல்லுகிறான்: | revealed to him again His own form. The Exalted One, having assumed again the form of grace, comforted the terrified Arjuna. |
| 11.51. ஜனார்த்தனா! நினது தண்மை பொருந்திய இம்மானிட வடிவத்தைக் கண்டு இப்போது யான் அமைதியுற்றேன். என் உணர்வு மீண்டது; இயற்கை நிலையெய்தினேன். ஸ்ரீபகவான் சொல்லுகிறான்: | Arjuna said:<br>(11.51) Beholding again this Thy gracious human form, O Janardana (Kṛṣṇa), I have now become collected in mind and am restored to my normal nature. |
| 11.52. காண்பதற்கரிய என் வடிவத்தை இங்கு கண்டனை, தேவர்கள்கூட இவ்வடிவத்தைக் காண எப்போதும் விரும்பி நிற்கிறார்கள். | The Blessed Lord said:<br>(11.52) This form of Mine which is indeed very hard to see, thou hast seen. Even the gods are ever eager to see this form. |
| 11.53. என்னை நீ கண்டபடி, இவ்விதமாக வேதங்களாலும், தவத்தாலும், தானத்தாலும், வேள்வியாலும் என்னைக் காணுதல் இயலாது. | (11.53) In the form in which thou hast seen Me now, I cannot be seen either by the Vedas or by austerities or by gifts or by sacrifices. |
| 11.54. பிறிதிடஞ் செல்லாத பக்தியால் மாத்திரமே என்னை இவ்விதமாக அறிதலும், உள்ளபடி காணுதலும், என்னுட் புகுதலும் இயலும். | (11.54) But by unswerving devotion to Me, O Arjuna, I can be thus known, truly seen and entered into, O Oppressor of the foe (Arjuna). |
| 11.55. என் தொழில் செய்வான், எனைத்தலைக் கொண்டோன் என்னுடை அடியான், பற்றெலாம் இற்றான் எவ்வுயிரி டத்தும் பகைமை யிலாதான் யாவன், | (11.55) He who does work for Me, he who looks upon Me as his goal, he who worships Me, free from attachment, who is free from enmity to all creatures, he goes to Me, O Pandava (Arjuna). |

| | |
|---|---|
| பாண்டவ! அவனென்னை எய்துவான். | |

பகவத் கீதை : பனிரெண்டாம் அத்தியாயம்
பக்தி யோகம்

ஞான யோக, பக்தி யோகங்களுள், ஞான யோகம் தாமதித்தே பயனளிக்கு மென்றும், அதில் மனதை நிறுத்துவது கஷ்டமானதென்றும், பக்தி யோகமோ கடுகப் பலனையளிக்கு மென்றும், அதில் மனதை நிறுத்துவது சுலபமான தென்றும் கூறப்படுகிறது. பிறகு பக்தி யோகத்தைப் பெறுவதற்குரிய உபாயங்கள் கூறப்படுகின்றன, பக்தர்கள் பிறரிடத்தில் சிநேக பாவத்துடனும் அகங்காரமற்றும், இன்ப துன்பங்களைச் சமமாய் எண்ணியும், கிடைத்ததைக் கொண்டு திருப்தியுடனும் இருக்க வேண்டும். தன்னைப் பிறர் இகழ்ந்து பேசினாலும் புகழ்ந்து பேசினாலும் மனதில் மாறுதலடையக் கூடாது. இவ்விதமான பக்தர்களிடத்தில்தான் கடவுளுக்கு அதிகப் பிரீதி. அர்ஜுனன் சொல்லுகிறான்:

Jñāna Yoga offers delayed benefits among Jñāna, Yoga and Bhakti Yogas. It is hard to concentrate the mind in Jñāna yoga. Bhakthi yoga offers quicker benefits and concentrating the mind on it is easy, so it is said. The path to Bhakthi Yoga is described. Bhakthas should entertain friendship to all, remain free of ego, treat pleasure and pain equally, and live a life of contentment with what one gets. One should remain steady in mind, when others speak of you in exaltation or condemnation. Bhagavan entertains love to this class of Bhakthas. -Translation by Krishnaraj

## CHAPTER XII

# Worship of the Personal Lord is better than meditation of the Absolute

## Devotion and Contemplation

| | |
|---|---|
| 12.1. இங்ஙனம் எப்போதும் யோகத்தமர்ந்து நின்னை வழிபடும் | Arjuna said: (12.1) Those devotees who, thus ever earnest, worship Thee and those again (who |

| | |
|---|---|
| தொண்டர்களா, அல்லது நாசமற்ற 'அவ்யக்த' வஸ்துவை வழிபடுவோரா, இவ்விரு திறத்தாரில் யோகஞானத்திலே மேம்பட்டார் யாவர்? ஸ்ரீபகவான் சொல்லுகிறான்: | worship) the Imperishable and the Unmanifested, which of these have the greater knowledge of yoga? |
| 12.2. என்னிடத்தே மனத்தைச் செலுத்தி நித்திய யோகிகளாய், உயர்ந்த நம்பிக்கையுடன் என்னை வழிபடுவோர் யாவரோ, அவர்களே யோகத்தில் சிறந்தாரென நான் கருதுகிறேன். | The Blessed Lord said:<br>(12.2) Those who fixing their minds on Me worship Me, ever earnest and possessed of supreme faith–them do I consider most perfect in yoga. |
| 12.3. இனி அழிவற்றதும், குறிப்பற்றதும், அவ்யக்தமும் (தெளிவற்றதும்), எங்கும் நிறைந்ததும், கருதொணாததும், நிலையற்றதும், அசைவற்றதும், உறுதி கொண்டதுமாகிய பொருளை யாவர் வழிபடுகின்றனரோ, | (12.3) But those who worship the Imperishable, the Undefinable, the Unmanifested, the Omnipresent, the Unthinkable the Unchanging and the Immobile, the Constant. |
| 12.4. இந்திரியக் குழாத்தை நன்கு கட்டுப்படுத்தி எங்கும் சமபுத்தியுடையோராய், எல்லா உயிர்களுக்கும் நன்மை விரும்புவோராகிய அவர்களும் என்னையே அடைகிறார்கள். | (12.4) By restraining all the senses, being even-minded in all conditions, rejoicing in the welfare of all creatures, they come to Me indeed (just like the others). |
| 12.5. ஆனால், 'அவ்யக்த'த்தில் மனம் ஈடுபட்டோர்க்குத் தொல்லை யதிகம். உடம்பெடுத்தோர் 'அவ்யக்த' நெறியெய்துதல் மிகவும் கஷ்டம். | (12.5) The difficulty of those whose thoughts are set on the Unmanifested is greater, for the goal of the Unmanifested is hard to reach by the embodied beings. |
| 12.6. எல்லாத் தொழில்களையும் எனக்கெனத் துறந்து, என்னைப் | (12.6) But those, who, laying all their actions on Me, intent |

| | |
|---|---|
| பரமாகக் கொண்டு, பிறழாத யோகத்தால் என்னை நினைத்து வழிபடுவோர் யாவரோ, | on Me, worship, meditating on Me, with unswerving devotion, |
| 12.7. என்பால் அறிவைப் புகுத்திய அன்னோரை நான் மரண சம்சாரக் கடலினின்றும் விரைவில் தூக்கிவிடுவேன். | (12.7) These whose thoughts are set on Me, I straightway deliver from the ocean of death-bound existence, O Pārtha<br>(Arjuna). |
| 12.8. மனதை என்பால் நிறுத்தி; மதியை என்னுட் புகுத்து; இனி நீ என்னுள்ளே உறைவாய்; ஐயமில்லை. | (12.8) On Me alone fix thy mind, let thy understanding dwell<br>in Me. In Me alone shalt thou live thereafter. Of this there is no doubt. |
| 12.9. என்னிடம் ஸ்திரமாக நின் சித்தத்தைச் செலுத்த நின்னால் முடியாதென்றால், பழகிப் பழகி என்னை யடைய விரும்பு. | (12.9) If, however, thou art not able to fix thy thought steadily on Me, then seek to reach Me by the practice of concentration,<br>O Winner of wealth (Arjuna). |
| 12.10. பழகுவதிலும் நீ திறமையற்றவனாயின், என் பொருட்டுத் தொழில் செய்வதை மேலாகக் கொண்டிரு. என் பொருட்டுத் தொழில்கள் செய்து கொண்டிருப்பதனாலும் சித்தி பெறுவாய். | (12.10) If thou art unable even to seek by practice, then be as one whose supreme aim is My service; even performing actions for My sake, thou shalt attain perfection. |
| 12.11. இதுவும் நின்னால் செய்யக்கூடவில்லை யென்றால் என்னுடன் லயித்திருப்பதை வழியாகக் கொண்டு, தன்னைத்தான் கட்டுப்படுத்தி, எல்லாச் செயல்களின் பயன்களையும் துறந்துவிடு. | (12.11) If thou art not able to do even this, then taking refuge<br>in My disciplined activity, renounce the fruit of all action, with the self subdued. |

| | |
|---|---|
| 12.12. பழக்கத்தைக் காட்டிலும் ஞானம் சிறந்தது. ஞானத்தைக் காட்டிலும் தியானம் சிறந்தது. தியானத்தைக் காட்டிலும் செய்கைப் பயன்களைத் துறந்து விடுதல் மேம்பட்டது. அத்துறவைக் காட்டிலும் சாந்தி உயர்ந்தது. | 12.12) Better indeed is knowledge than the practice (of concentration); better than knowledge is meditation; better than meditation is the renunciation of the fruit of action; on renunciation (follows) immediately peace. |
| 12.13. எவ்வுயிரையும் பகைத்தலின்றி, அவற்றிடம் நட்பும் கருணையும் உடையவனாய், யானென்பதும் எனதென்பதும் நீங்கி, இன்பத்தையும் துன்பத்தையும் நிகராகக் கொண்டு பொறுமையுடையவனாய், | (12.13) He who has no ill will to any being, who is friendly and compassionate, free from egoism and self-sense, even-minded in pain and pleasure and patient. |
| 12.14. எப்போதும் மகிழ்ச்சியுடையவனாய், தன்னைக் கட்டியவனாய், திட நிச்சயமுடையவனாய் என்னிடத்தே மனத்தையும் மதியையும் அர்ப்பணம் செய்து என் தொண்டனாகிய யோகி எனக்கினியவன். | (12.14) The Yogi who is ever content, self-controlled, unshakable in determination, with mind and understanding given up to Me-he, My devotee, is dear to Me. |
| 12.15. எவனை உலகத்தார் வெறுப்பதில்லையோ, உலகத்தாரை எவன் வெறுப்பதில்லையோ, களியானாலும் அச்சத்தாலும், சினத்தாலும் விளையும் கொதிப்புகளினின்றும் எவன் விடுபட்டானோ, அவனே எனக்கினியவன். | (12.15) He from whom the world does not shrink and who does not shrink from the world and who is free from joy and anger, fear and agitation, he too is dear to Me. |
| 12.16. எதனையும் எதிர்பார்த்தலின்றித் தூயோனாய், | (12.16) He who has no expectation, is pure, skilful in action, unconcerned, and |

| | |
|---|---|
| திறமுடையோனாய், பற்றுதலற்றவனாய், கவலை நீங்கியவனாய், எல்லா ஆடம்பரத்தையுந் துறந்து என்னிடம் பக்தி செய்வோனே எனக்கினியவன். | untroubled, who has given up all initiative (in action), he, My devotee, is dear to Me. |
| 12.17. களித்தலும், பகைத்தலும், துயர்ப்படுதலும், அவாவுறுதலும் இன்றி நன்மையுந் தீமையுந் துறந்த தொண்டனே எனக்கினியவன். | (12.17) He who neither rejoices nor hates, neither grieves nor desires, and who has renounced good and evil, he who is thus devoted is dear to Me. |
| 12.18. பகைவனிடத்தும், நண்பனிடத்தும், மானத்திலும், அவமானத்திலும், குளிரிலும், வெப்பத்திலும், இன்பத்திலும், துன்பத்திலும் சமப்பட்டவன் பற்றுவிட்டவன். | (12.18) He who (behaves) alike to foe and friend, also to good and evil repute and who is alike in cold and heat, pleasure and pain and who is free from attachment. |
| 12.19. புகழையும் இகழையும் நிகராகக் கொண்ட மௌனி, யாது வரினும் அதில் மகிழ்ச்சியுறுவான், குறியற்றான், ஸ்திர புத்தியுடையான் இத்தகைய பக்தன் எனக்கினியவன். | (12.19) He who holds equal blame and praise, who is silent (restrained in speech), content with anything (that comes), who has no fixed abode and is firm in mind, that man who is devoted is dear to Me |
| 12.20. இந்தத் தர்மரூபமான அமிர்தத்தை யான் சொல்லியபடி வழிபடுவோர், நம்பிக்கையுடையோர், என்னை முதலாகக் கொண்டோர், அத்தகைய பக்தர் எனக்கு மிகவுமினியர். | (12.20) But those who with faith, holding Me as their supreme aim, follow this immortal wisdom, those devotees are exceedingly dear to Me. |
| பகவத் கீதை : பதின்மூன்றாம் அத்தியாயம்<br>க்ஷேத்ர-க்ஷேத்ரக்ஞ விபாக யோகம் | |

இதில் தேகம் ஆத்மா இவைகளுடைய சொரூபமும், இவைகள் ஒன்றோடொன்று சேர்வதற்குக் காரணமும் கூறப்படுகின்றன. தேகம் என்பது பிரகிருதியின் விகாரமாகும். அது ஐந்து பூதங்களும் பதினொரு புலன்களும் அடங்கியது. இத்தேகத்தின் சேர்க்கையால்தான் ஆத்மாவுக்கு அற்ப விஷயங்களில் விருப்பமும், இன்பம், துன்பம், கோபம், தாபம் முதலியவைகளும் உண்டாகின்றன. கைவல்ய நிலை பெற்ற ஆத்மாவுக்கு இவை ஒன்றும் இல்லை. அத்தகைய நிலையைப் பெறவேண்டுமானால் கர்வம், டம்பம் இவைகளை விடவேணும். ஆசாரியனைப் பணிந்து அவனருளால் தூய்மைப் பெற்று புலன்களை அடக்க வேண்டும். வேறு பலனைக் கோராமல் கடவுளைத் தியானிக்க வேண்டும். ஆத்மாவுக்கு உண்மையில் பிறப்பு இறப்பு கிடையாது. தேக சம்பந்தமே பிறப்பெனவும் அதன் பிரிவே இறப்பெனவும் கூறப்படும். அறிவற்ற தேகமானது ஆத்ம சம்பந்தத்தால் பற்பல காரியங்களைச் செய்கிறது. இவ்வித ஆத்ம சொரூபத்தைக் கர்ம யோகத்திலும், ஞான யோகத்திலும் பெறலாம். *தாவர ஜங்கமங்களெல்லாம் ஆத்ம பிரகிருதியின் சேர்க்கையால் உண்டாகின்றன. (பதிப்பாளர் விளக்கம்: *தாவர ஜங்கமம் என்றால் நிலைத்திணை, இயங்குதிணைப் பொருட்கள் i.e. the immovables and the movables. நிலம் வீடு போன்ற அசையாப் பொருட்களும், நகை, பொன், பொருட்கள் போன்ற அசையும் பொருட்களும் என்று பொருள்) (க்ஷேத்திரம் = இடம். க்ஷேத்திரக்ஞன் = இடத்தை அறிவோன். பிரகிருதி = இயற்கை. புருஷன் = ஆத்மா ஞானம் = அறிவு. ஞேயம் = அறியப்படு பொருள்.) அர்ஜுனன் சொல்லுகிறான்:

In this chapter 13, there is a mention about the characteristics of the forms of ātman and body and the reason they come together in an individual. Body is Pṛakrti’s Vikram or transformation and contains five Bhūtas and 11 organs. Ātma, because of its association with the body, develops a desire for trivial things, besides becoming subject to pleasure, pain, anger and sorrow. Emancipated soul has no such burden. To attain such condition, one must give up arrogance and ostentation. Showing humility to Acharya, and purifying the senses by his grace, one should restrain one's organs. One

should meditate on the Omnipotent and not ask for material things. Ātma has neither birth nor death. Body with ātma is birth. Shedding of the body by ātma is death. Unintelligent body because of its association with the soul (ātma) does multitude of actions. One can obtain a state of real nature of ātma by Karma Yoga and Jñāna Yoga.

The Immovables and the Movables originate because of merger of ātma with Prakṛti (Nature). Translation: Krishnaraj

## CHAPTER XIII

# The Body called the Field, the Soul called the Knower of the Field and Discrimination betweenthem

## The Field and the Knower of the Field

| | |
|---|---|
| பிரகிருதி, புருஷன், க்ஷேத்திரம், க்ஷேத்திரக்ஞன், ஞானம், ஞேயம் என்னுமிவற்றை அறிய விரும்புகிறேன். ஸ்ரீபகவான் சொல்லுகிறான்: | Arjuna said:<br>Prakrti and purusa, the field and the knower of the field, knowledge and the object of knowledge, these I should like to know, O Kesava (Kṛṣṇa), |
| 13.1. குந்தி மகனே! இந்த உடம்பு க்ஷேத்திரம் என்று சொல்லப்படுகிறது. இதனை அறிந்து நிற்போனை க்ஷேத்திரக்ஞனென்று பிரம்ம ஞானிகள் சொல்லுகிறார்கள். | The Blessed Lord said:<br>(13.1) This body, O Son of Kuntī (Arjuna), is called the field and him who knows this, those who know thereof call the knower of the field. |
| 13.2. பாரதா! எல்லா க்ஷேத்திரங்களிலும் க்ஷேத்திரக்ஞன் நானே என்றுணர். க்ஷேத்திரமும், க்ஷேத்திரக்ஞனும் எவை என்றறியுஞ் ஞானமே உண்மையான ஞானமென்பது என் கொள்கை. | (13.2) Know Me as the Knower of the field in all fields, O Bharatā (Arjuna). The knowledge of the field and its knower, do I regard as true knowledge. |

| | |
|---|---|
| 13.3. அந்த க்ஷேத்திரமென்பது யாது? எவ்வகைப் பட்டது? என்ன மாறுதல்களுடையது? எங்கிருந்து வந்தது? க்ஷேத்திரக்ஞன் யார்? அவர் பெருமை எப்படிப்பட்டது? இவற்றை நான் சுருக்கமாகச் சொல்லுகிறேன், கேள். | (13.3) Hear briefly from Me what the Field is, of what nature,<br>what its modifications are, whence it is, what he (the knower<br>of the field) is, and what his powers are. |
| 13.4. அது (க்ஷேத்திரம்) ரிஷிகளால் பல வகைகளிலே பலவேறு சந்தங்களில் பாடப்பட்டது. ஊகம் நிறைந்தனவும், நிச்சயமுடையவனவுமாகிய பிரம்ம சூத்திர பதங்களில் இசைக்கப்பட்டது. | (13.4) This has been sung by sages in many ways and distinctly, in various hymns and also in well-reasoned and conclusive expressions of the aphorisms of the Absolute (brahmasūtra). |
| 13.5. மகா பூதங்கள், அகங்காரம், புத்தி, அவ்யக்தம், பதினோரிந்திரியங்கள், இந்திரிய நிலங்கள் ஐந்து, | 13.5) The great (five gross) elements, self-sense, understanding as also the unmanifested, the ten senses and mind and the five objects of the senses. |
| 13.6. வேட்கை, பகைமை, இன்பம், டுன்பம், உடம்பு, உணர்வு, உள்ளத்துறுதி -- இவையே க்ஷேத்திரமும் அதன் மாறுபாடுகளுமாம் என உனக்குச் சுருக்கிக் காட்டினேன். | 13.6) Desire and hatred, pleasure and pain, the aggregate (the organism), intelligence and steadfastness described, this in brief is the field along with its modifications. |
| 13.7. கர்வமின்மை, டம்பமின்மை, இம்சை செய்யாமை, பொறுமை, நேர்மை, ஆசாரியனை வழிபடுதல், தூய்மை, ஸ்திரத்தன்மை, தன்னைக் கட்டுதல், | (13.7) Humility (absence of pride), integrity (absence of deceit), non-violence, patience, uprightness, service of the teacher, purity (of body and mind), steadfastness and self-control. |
| 13.8. இந்திரிய விஷயங்களில் விருப்பமின்மை, அகங்காரம் இல்லாமை, பிறப்பு, இறப்பு, நரை, | (13.8) Indifference to the objects of sense, self-effacement and the perception of the evil of birth, |

| | |
|---|---|
| நோய், துக்கம், தோஷம் இவற்றின்கண் இசைந்த காட்சியுடைமை, | death, old age, sickness and pain. |
| 13.9. பற்றின்மை, மகனையும் மனைவியையும் வீட்டையும் தன்னுடைமையெனக் கருதாமை, விரும்பியனவும், விரும்பாதனவும் எய்துமிடத்தே சமசித்தமுடைமை, | (13.9) Non-attachment, absence of clinging to son, wife, home and the like and a constant equal-mindedness to all desirable and undesirable happenings. |
| 13.10. பிறழ்ச்சியற்ற யோகத்துடன் என்னிடம் தவறுதலின்றிச் செலுத்தப்படும் பக்தி, தனியிடங்களை மேவுதல், ஜனக்கூட்டத்தில் விருப்பமின்மை, | (13.10) Unswerving devotion to Me with wholehearted discipline, resort to solitary places, dislike for a crowd of people. |
| 13.11. ஆத்ம ஞானத்தில் எப்போதும் நழுவாமை, தத்துவ ஞானத்தில் பொருளுணர்வு -- இவை ஞானமெனப்படும். இவற்றினின்றும் வேறுபட்டது அஞ்ஞானம். | (13.11) Constancy in the knowledge of the Spirit, insight into the end of the knowledge of Truth-this is declared to be (true) knowledge and all that is different from it is non-knowledge (nescience). |
| 13.12. ஞேயம் எதுவென்பதைச் சொல்லுகிறேன். அதை அறிந்தால் நீ சாகாமல் இருப்பாய். அது அநாதியாகிய பரப்பிரம்மம். அதை 'சத்' என்பதுமில்லை, 'அசத்' என்பதுமில்லை. | (13.12) I will describe that which is to be known and by knowing which life eternal is gained. It is the Supreme Brahman who is beginningless and who is said to be neither existent nor non-existent. |
| 13.13. அது எங்கும் கைகால்களுடையது; எங்கும் கண்ணும் தலையும் வாயுமுடையது; எங்கும் செவியுடையது; உலகத்தில் எதனையும் சூழ்ந்து நிற்பது; | (13.13) With his hands and feet everywhere, with eyes, heads and faces on all sides, with ears on all sides, He dwells in the world, enveloping all. |

| | |
|---|---|
| 13.14. எல்லா இந்திரிய குணங்களும் வாய்ந்தொளிர்வது; எல்லா இந்திரியங்களுக்கும் புறம்பானது; பற்றில்லாதது; அனைத்தையும் பொறுப்பது; குணமற்றது; குணங்களைத் துய்ப்பது; | (13.14) He appears to have the qualities of all the senses and yet is without (any of) the senses, unattached and yet supporting all, free from the guṇas (dispositions of prakṛti) and yet enjoying them. |
| 13.15. பூதங்களுக்கு உள்ளும் புறமுமாவது; அசரமும் சரமுமாவது; நுண்மையால் அறிவரியது; தூரமானது; அருகிலிருப்பது; | (13.15) He is without and within all beings. He is unmoving as also moving. He is too subtle to be known. He is far away and yet is He near. |
| 13.16. உயிர்களில் பிரிவுபட்டு நில்லாமல் பிரிவுபட்டது போல் நிற்பது; அதுவே பூதங்களைத் தாங்குவது, அவற்றை உண்பது, பிறப்பிப்பது என்றறி. | (13.16) He is undivided (indivisible) and yet He seems to be divided among beings. He is to be known as supporting creatures, destroying them and creating them afresh. |
| 13.17. ஒளிகளுக்கெல்லாம் அஃதொளி; இருளிலும் உயர்ந்த தென்ப. அதுவே ஞானம்; ஞேயம்; ஞானத்தால் எய்தப்படு பொருள்; எல்லாவற்றின் அகத்திலும் அமர்ந்தது. | (13.17) He is the Light of lights, said to be beyond darkness. Knowledge, the object of knowledge and the goal of knowledge-He is seated in the hearts of all. |
| 13.18. இங்ஙனம் க்ஷேத்திரம், ஞானம், ஞேயம் என்பவற்றைச் சுருக்கமாகச் சொன்னேன். என் பக்தன் இதையறிந்து எனது தன்மையை அடைகிறான். | (13.18) Thus the field, also knowledge and the object of knowledge have been briefly described. My devotee who understands thus becomes worthy of My state. |
| 13.19. பிரகிருதி, புருஷன் இவ்விரண்டும் அநாதி என்றுணர். வேறுபாடுகளும் குணங்களும் பிரகிருதியிலே பிறப்பனவென்றுணர். | (13.19) Know thou that prakṛti (nature) and puruṣa (soul) are both beginningless; and know also that the forms and modes are born of prakṛti (nature). |

| | |
|---|---|
| 13.20. காரிய காரணங்களை ஆக்கும் ஏது பிரகிருதி என்பர். சுக துக்கங்களை உணரும் ஏது புருஷனென்பர். | (13.20) Nature is said to be the cause of effect, instrument and agent (ness) and the soul is said to be the cause, in regard to the experience of pleasure and pain. |
| 13.21. புருஷன் பிரகிருதியில் நின்றுகொண்டு, பிரகிருதியினிடம் பிறக்கும் குணங்களைத் துய்க்கிறான். குணங்களினிடம் இவனுக்குள்ள பற்றுதலே இவன் நல்லனவும் தீயனவுமாகிய ஜன்மங்களில் பிறப்பதற்குக் காரணமாகிறது. | (13.21) The soul in nature enjoys the modes born of nature. Attachment to the modes is the cause of its births in good and evil wombs. |
| 13.22. மேற்பார்ப்போன்; அனுமதி தருவோன், சுமப்பான், உண்பான், மகேசுவரன் -- இங்ஙனம் உடம்பிலுள்ள பரம புருஷன் பரமாத்மாவென்றே சொல்லப்படுகிறான். | (13.22) The Supreme Spirit in the body is said to be the Witness, the Permitter, the Supporter, the Experiencer, the Great Lord and the Supreme Self. |
| 13.23. இங்ஙனம் புருஷனையும், பிரகிருதியையும், அதன் குணங்களையு மறிந்தோன் எல்லா நெறிகளிலும் இயங்கு வானெனினும், அவனுக்கு மறு பிறப்பில்லை. | (13.23) He who thus knows soul (puruṣa) and nature (prakṛti) together with the modes, though he acts in every way, he is not born again. |
| 13.24. சிலர் ஆத்மாவில், ஆத்மாவால், ஆத்மாவை அறிகிறார்கள்; பிறர் சாங்கிய யோகத்தால் அறிகிறார்கள்; பிறர் கர்ம யோகத்தால். | (13.24) By meditation some perceive the Self in the self by the self; others by the path of knowledge and still others by the path of works. |
| 13.25. இங்ஙன மறியாத மற்றைப் பிறர் அன்னியரிடமிருந்து பெற்ற சுருதிகளை வழிபடுகிறார்கள். | (13.25) Yet others, ignorant of this (these paths of yoga) hearing from others worship; and they too cross beyond |

| | |
|---|---|
| அவர்களும் அந்த சுருதிகளின்படி ஒழுகுவாராயின் மரணத்தை வெல்வார். | death by their devotion to what they have heard. |
| 13.26. பரதக் காளையே! ஸ்தாவரமாயினும், ஜங்கமமாயினும் ஓருயிர் பிறக்குமாயின், அது க்ஷேத்திரமும் க்ஷேத்திரஞனும் சேர்ந்தமையால் பிறந்ததென்றறி. | (13.26) Whatever being is born, moving or unmoving, know thou, O Best of the Bharatas (Arjuna), that it is (sprung) through the union of the field and the knower of the field. |
| 13.27. எல்லாப் பூதங்களிலும் சமமாக நிற்போன் பரமேசுவரன். ஐவனவற்றில் அவன் அழியான். அவனைக் காண்போனே காட்சியுடையான். | (13.27) He who sees the Supreme Lord abiding equally in all beings, never perishing when they perish, he, verily, sees.<br>(He who sees the Universal Spirit in all things, sees and becomes himself universal.) |
| 13.28. எங்கும் சமானமாக ஈசன் நிற்பது காண்பான். தன்னைத்தான் துன்பப்படுத்திக் கொள்ளமாட்டான். அதனால் பரகதி அடைகிறான். | (13.28) For, as he sees the Lord present, equally everywhere, he does not injure his true Self by the self and then he attains to the supreme goal. |
| 13.29. எங்கும் தொழில்கள் இயற்கையாலேயே செய்யப்படுகின்றன. ஆதலால்தான் கர்த்தா இல்லையென்று காண்பானே காட்சியுடையான். | (13.29) He who sees that all actions are done only by nature (prakṛti) and likewise that the self is not the doer, he verily sees. |
| 13.30. பலவகைப்பட்ட பூதங்கள் ஒரே ஆதாரமுடையன என்பதை அறிவானாயின், அப்போது, அதனின்றும் விஸ்தாரமான பிரம்மத்தை அடைகிறான். | (13.30) When he sees that the manifold state of beings is centred in the One and from just that it spreads out, then he attains Brahman. |
| 13.31. ஆதியின்மையால், குணமின்மையால், இந்தப் பரமாத்மா | (13.31) Because this Supreme Self imperishable is without beginning, without |

| | |
|---|---|
| கேடற்றான். இவன் உடம்பிலிருந்தாலும் செயலற்றான்; பற்றற்றான். | qualities, so, O Son of Kunti (Arjuna), though It dwells in the body. It neither acts nor is tainted. |
| 13.32. எங்குமிருந்தாலும் ஆகாசம் தன் நுண்மையால் பற்றற்று நிற்பதுபோல், உடம்பில் ஆத்மா எங்கணுமிருந்தாலும் பற்றுவதிலன். | (13.32) As the all-pervading ether is not tainted, by reason of its subtlety, even so the Self that is present in every body does not suffer any taint. |
| 13.33. சூரியன் ஒருவனாய், இவ்வுலக முழுதையும் எங்ஙனம் ஒளியுறச் செய்கிறானோ, அதுபோல் க்ஷேத்திரத்தையுடையோன் க்ஷேத்திர முழுதையும் ஒளியுறச் செய்கிறான். | (13.33) As the one sun illumines this whole world, so does the Lord of the field illumine this entire field, O Bharata (Arjuna). |
| 13.34. ஞானக் கண்ணால் இவ்வாறு க்ஷேத்திரத்துக்கும் க்ஷேத்திரக்ஞனுக்குமுள்ள வேற்றுமையை அறிவோர் பூதபிரகிருதியினின்றும் விடுதலை பெற்றுப் பரம்பொருளை அடைகின்றனர். | (13.34) Those who perceive thus by their eye of wisdom the distinction between the field and the knower of the field, and the deliverance of beings from nature (prakṛti) they attain to the Supreme. |

## பகவத் கீதை : பதினான்காம் அத்தியாயம்
## குணத்ரய விபாக யோகம்

தேக சம்பந்தமே ஆத்மாவின் சுக துக்கங்களுக்கும் கோபதாபம் முதலிய குணங்களுக்கும் காரணமென்று முன்கூறிய விஷயம் இதில் விவரிக்கப்படுகிறது. உலகத்தைப் படைக்க எண்ணங்கொண்ட கடவுள் முதலில் பிரகிருதியையும் ஜீவனையும் சேர்க்கிறார். பிறகு பிரகிருதி ஆத்மாவின் மும்மை காமத்துக் கேற்ப தேவ மனுஷ்ய பசு பக்ஷி ரூபங்களைப் பெற்று சத்வ, ரஜஸ், தமோ குணங்களால் ஆத்மாவைப் பிணிக்கிறது. அவற்றுள் சத்வம் மனிதனுக்கு ஞானவொளியையும் நன்மார்க்கத்தில் விருப்பத்தையும்

அளிக்கிறது. ரஜஸ், அவா, பற்றுதல் முதலிய குணங்களை யளித்து கர்மங்களில் தூண்டுகிறது. தமஸ் மயக்கம், சோம்பல், உறக்கம் முதலியவற்றையளிக்கிறது. இம்மூன்று குணங்களுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சமயங்களில் தலையெடுத்து நிற்கும். அப்போது மனிதனுக்கு அதற்கேற்ற குணங்கள் உதிக்கின்றன. முற்கூறிய கடவுளை தியானிப்போன் இம்மூன்று குணங்களையும் வென்று சித்தி பெறுவான்.
ஸ்ரீபகவான் சொல்லுகிறான்:

## CHAPTER XIV

# The Mystical Father of All Beings
# The Highest Knowledge

| | |
|---|---|
| 14.1. ஞானங்களனைத்திலும் மேலான பரம ஞானத்தை உனக்கு மீண்டும் உரைக்கிறேன். அதையறிந்து முனிவரெல்லாரும் இவ்வுலகத்திலேயே ஈடேற்றம் பெற்றிருக்கிறார்கள். | 14.1 The Blessed Lord said: I shall again declare that supreme wisdom, of all wisdom the best, by knowing which all sages have passed from this world to the highest perfection. |
| 14.2. இந்த ஞானத்தையடைந்து அதனால் என்னியல்பு பெற்றோர் படைப்புக் காலத்தில் பிறவார். ஊழியிலும் சாகமாட்டார். | 14.2. Having resorted to this wisdom and become of like nature to Me, they are not born at the time of creation; nor are they disturbed at the time of dissolution. |
| 14.3. பெரிய பரப்பிரம்மமே எனக்காதாரம்; அதில் நான் கருத்தரிக்கிறேன். பாரதா! எல்லா உயிர்களும் அதிலேதான் பிறக்கின்றன. | 14.3. Great brahma (prakṛti) is My womb: in that I cast the seed and from it is the birth of all beings, O Bhārata (Arjuna). |
| 14.4. எல்லாக் கருக்களிலும் பிறக்கும் வடிவங்களனைத்திற்கும் பிரம்மமே பெரிய காரணம். நான் விதை தரும் பிதா. | 14.4. Whatever forms are produced in any wombs whatsoever, o Son of Kuntī (Arjuna), great brahma is their womb and I am the Father who casts the seed. |

| | |
|---|---|
| 14.5. சத்துவம், ரஜஸ், தமஸ் -- இந்த குணங்கள் பிரகிருதியில் எழுவன. பெருந்தோளாய்! இவையே உடம்பினுடன் அழிவற்ற ஆத்மாவைப் பிணிக்கின்றன. | 14.5. The three modes (gunas) goodness (sattva), passion (rajas), and dullness (tamas) born of nature (prakṛti) bind down in the body, O Mighty-armed (Arjuna), the imperishable Dweller in the body. |
| 14.6. அவற்றுள்ளே சத்துவம் நிர்மலத் தன்மையால் ஒளி கொண்டது; நோவற்றது. பாவமற்றோய்! அது இன்பச் சேர்க்கையாலும், ஞானச் சேர்க்கையாலும் கட்டுப் படுத்துவது. | 14.6. Of these, goodness (sattva) being pure, causes illumination and health. It binds, O blameless one, by attachment to happiness and by attachment to knowledge. |
| 14.7. ரஜோ குணம் விருப்ப இயல்புடையது; அவாவின் சேர்க்கையால் பிறப்பது. குந்தி மகனே! அது ஆத்மாவைத் தொழிற் சேர்க்கையால் கட்டுகிறது. | 14.7. Passion (rajas), know thou, is of the nature of attraction, springing from craving and attachment. It binds fast, O Son of Kuntī (Arjuna), the embodied one by attachment to action. |
| 14.8. தமோ குணம் அஞ்ஞானத்தில் பிறப்பதென்றுணர். (இதுவே) எல்லா ஜீவர்களையும் மயங்கச் செய்வது. தவறுதலாலும், சோம்பராலும், உறக்கத்தாலும் அது கட்டுப்படுத்துகிறது, பாரதா! | 14.8. But dullness (tamas), know thou, is born of ignorance and deludes all embodied beings. It binds, O Bhārata (Arjuna), by (developing the qualities of) negligence, indolence and sleep |
| 14.9. சத்துவம் இன்பத்திலே பற்றுதல் விளைவிக்கிறது. பாரதா! ரஜோ குணம் செய்கையில் பற்றுறுத்துகிறது. தமோ குணம் ஞானத்தைச் சூழ்ந்து (ஜீவனை) மயக்கத்தில் பிணிக்கிறது. | 14.9. Goodness attaches one to happiness, passion to action, O Bhārata (Arjuna), but dullness, veiling wisdom, attaches to negligence. |
| 14.10. பாரதா! (சில வேளை) ரஜோ குணத்தையும், தமோ குணத்தையும் | 14.10. Goodness prevails, overpowering passion and dullness, O Bhārata (Arjuna). |

| | |
|---|---|
| அடக்கி சத்துவம் இயல்கிறது. (சில வேளை) சத்துவத்தையும் தமோ குணத்தையும் அடக்கி ரஜோ குணம் நிற்கிறது. அங்ஙனமே, சத்துவத்தையும் ரஜோ குணத்தையும் அடக்கித் தமஸ் மிஞ்சுகிறது. | Passion prevails, (overpowering) goodness and dullness and even so dullness prevails (overpowering) goodness and passion. |
| 14.11. இந்த உடம்பில் எல்லா வாயில்களிலும் ஞான ஒளி பிறக்குமாயின், அப்போது சத்துவ குணம் வளர்ச்சி பெற்றதென்றறியக் கடவாய். | 14.11. When the light of knowledge streams forth in all the gates of the body, then it may be known that goodness has increased. |
| 14.12. அவா, முயற்சி, தொழிலெடுப்பு, அமைதியின்மை, விருப்பம், இவை ரஜோ குணம் மிகுதிப்படுவதிலிருந்து தோன்றுகின்றன, பாரதர் காளையே! | 14.12. Greed, activity, the undertaking of actions, unrest and craving-these spring up, O Best of the Bharatas (Arjuna), when rajas increases. |
| 14.13. ஒளியின்மை, முயற்சியின்மை, தவறுதல், மயக்கம், இவை தமோ குணம் ஓங்குமிடத்தே பிறப்பன, குருகுலச் செல்வமே! | 14.13. Unillumination, inactivity, negligence and mere delusion-these arise–O Joy of the Kurus (Arjuna), when dullness mcreases. |
| 14.14. சத்துவம் ஓங்கி நிற்கையிலே சரீரி இறப்பானாயின், மாசற்றனவாகிய உத்தம ஞானிகளின் உலகங்களை அடைகிறான். | 14.14. When the embodied soul meets with dissolution, when goodness prevails, then it attains to the pure worlds of those who know the Highest. |
| 14.15. ரஜோ குணத்தில் இறப்போன் கர்மப் பற்றுடையோரிடையே பிறக்கிறான். அவ்வாறே, தமசில் இறப்போன் மூட கர்ப்பங்களில் தோன்றுகிறான். | 14.15. Meeting with dissolution when passion prevails, it is born among those attached to action; and if it is dissolved when deluded. |

| | |
|---|---|
| 14.16. சத்துவ இயல்புடைய நிர்மலத் தன்மையே நற்செய்கையின் பயனென்பர். ரஜோ குணத்தின் பயன் துன்பம். தமோ குணத்தின் பயன் அறிவின்மை. | 14.16. The fruit of good action is said to be of the nature of "goodness" and pure; while the fruit of passion is pain, the fruit of dullness is ignorance. |
| 14.17. சத்துவத்திலிருந்து ஞானம் பிறக்கிறது; ரஜோ குணத்தினின்றும் அவா; தமோ குணத்திலிருந்து தவறுதலும், மயக்கமும், அஞ்ஞானமும் தோன்றுகின்றன. | 14.17. From goodness arises knowledge and from passion greed, negligence and error arise from dullness, as also ignorance. |
| 14.18. சத்துவ குணத்தில் நிற்போர் மேலேறுகிறார்கள். ரஜோ குணமுடையோர் இடையே நிற்கின்றார்கள். தாமஸர் மிகவும் இழிய குணங்களும் செயல்களுமுடையோராய்க் கீழே செல்வர். | 14.18. Those who are established in goodness rise upwards;<br>passionate remain in the middle (regions); the dull steeped in the lower occurrences of the modes sink downwards. |
| 14.19. குணங்களைத் தவிர வேறு கர்த்தா இல்லையென்பதைக் கண்டு குணங்களுக்கு மேலுள்ள பொருளையும் ஜீவன் அறிவானாயின் என் இயல்பை அறிவான். | 14.19. When the seer perceives no agent other than the modes, and knows also that which is beyond the modes, he attains to My being. |
| 14.20. உடம்பிலே பிறக்கும் இந்த மூன்று குணங்களையுங் கடந்து பிறப்பு, சாவு, மூப்பு, வருத்தம் என்பனவற்றினின்றும் விடுபட்டோன் அமிர்த நிலையடைகிறான். அர்ஜுனன் சொல்லுகிறான்: | 14.20. When the embodied soul rises above these three modes that spring from the body, it is freed from birth, death, old age and pain and attains life eternal. |
| 14.21. இறைவனே, மூன்று குணங்களையுங் கடந்தோன் என்ன | 14.21. The Character of Him Who is Beyond the Three Modes |

| | |
|---|---|
| அடையாளங்களுடையவன்? எங்ஙனம் ஒழுகுவான்? இந்த மூன்று குணங்களையும் அவன் எங்ஙனம் கடக்கிறான்? கடவுள் சொல்லுகிறான்: | Arjuna said: By what marks is he, O Lord, who has risen above the three modes characterized? What is his way of life? How does he get beyond the three modes? |
| 14.22. ஒளி, தொழில், மயக்கம், இவை தோன்றும்போது இவற்றைப் பகைத்திடான்; நீங்கியபோது இவற்றை விரும்பான். | 14.22. The Blessed Lord said: He, O Pandava (Arjuna), who does not abhor illumination, activity and delusion when they arise nor longs for them when they cease. |
| 14.23. புறக்கணித்தான் போலேயிருப்பான், குணங்களால் சலிப்படையான், "குணங்கள் சுழல்கின்றன" என்றெண்ணி அசைவற்று நிற்பான். | 14.23. He who is seated like one unconcerned, unperturbed by the modes, who stands apart, without wavering, knowing that it is only the modes that act. |
| 14.24. துன்பத்தையும் இன்பத்தையும் நிகராகக் கொண்டோன், தன்னிலையில் நிற்பான், ஓட்டையும் கல்லையும் பொன்னையும் நிகராகக் காண்பான், இனியவரிடத்தும் இன்னாதவரிடத்தும் சமானமாக நடக்குந் தீரன், இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் நிகராகக் கணிப்பான்; | 14.24. He who regards pain and pleasure alike, who dwells in his own self, who looks upon a clod, a stone, a piece of gold as of equal worth, who remains the same amidst the pleasant and the unpleasant things, who is firm of mind, who regards both blame and praise as one. |
| 14.25. மானத்தையும் அவமானத்தையும் நிகராகக் கருதுவான், நண்பரிடத்தும் பகைவரிடத்தும் நடுநிலைமை பூண்டான், எல்லாவிதத் தொழிலெடுப்புக்களையுந் துறந்தான் -- அவனே குணங்களைக் கடந்தவனென்றும் சொல்லப்படுகிறான். | 14.25. He who is the same in honour and dishonour and the same to friends and foes, and who has given up all initiative of action, he is said to have risen above the modes. |

| | |
|---|---|
| 14.26. வேறுபாடில்லாத பக்தி யோகத்தால் என்னை வழிபடுவோனும் குணங்களைக் கடந்து பிரம்மத் தன்மை பெறத் தகுவான். | 14.26. He who serves Me with unfailing devotion of love, rises above the three modes, he too is fit for becoming Brahman. He is fit for liberation. |
| 14.27. சாவும் கேடுமற்ற பிரம்மத்துக்கு நானே நிலைக்களன்; என்றும் இயலும் அறத்துக்கும் தனிமை யின்பத்துக்கும் நானே இடம். | 14.27. For I am the abode of Brahman, the Immortal and the Imperishable, of eternal law and of absolute bliss. |

## பகவத் கீதை : பதினைந்தாம் அத்தியாயம்
## புருஷோத்தம யோகம்

பிரகிருதி, ஆத்மா இவ்விரண்டையும் தன் வசப்படுத்திக் கொண்டு நிற்கும் கடவுள் எவ்விதத்திலும் இவைகளைவிட மேலானவர். ஆகையால் புருஷோத்தமனென்று பெயர் பெற்றிருக்கிறார். அரசம் வித்து முளையாகவும் கன்றாகவும் பிறகு பெரிய மரமாகவும் மாறி வானளாவி யிருப்பதுபோல் பிரகிருதியும் ஆத்மாவுடன் சேர்ந்து மகத்து, அகங்காரம், இந்திரியங்கள், ஐந்து பூதங்கள் என்பனவாக மாறிப் பிறகு தேவ மனுஷ்ய யக்ஷ ராக்ஷதாதி ரூபங்களுடன் எங்கும் பரவியிருக்கின்றது. இந்த பிரகிருதியாகிய மரத்தைப் பற்றில்லாமை என்ற கோடரியால் முதலில் வெட்டி முறிக்க வேண்டும். பிறகு அயர்வு நீங்கும் பொருட்டுக் கடவுளை சரணம் புகுந்து யோகத்திலிறங்க வேண்டும். சம்சாரி, முக்தன் என்று ஆத்மாக்கள் இரண்டு வகைப் பட்டவர்கள்; கடவுளோ இவ்விரண்டுவித ஆத்மாக்களைக் காட்டிலும் முற்றிலும் வேறுபட்டவர். அவரே உலகத்தில் மறைந்து நின்று உலகத்தைத் தாங்கி நிற்பவர். ஸ்ரீபகவான் சொல்லுகிறான்:

## The Tree of Life
## The Cosmic Tree

| | |
|---|---|
| 15.1. *அவ்யக்தம் மேலே வேர்களும் கீழே கிளைகளுமுடையதோர் அரச மரத்தைப் போன்றது என்பர், அதன் இலைகளே வேதங்கள்; அதை அறிவோனே வேதமறிவோன். *(அவ்யக்தம் = ஜகத்தின் தெளிவுபடாத உள்நிலை) | 15.1. The Blessed Lord said: They speak of the imperishable asvattham (peepal tree) as having its root above and branches below. Its leaves are the Vedas and he who knows this is the knower of the Vedas. |
| 15.2. அதன் கிளைகள் குணங்களால் ஓங்கி விஷயத் தளிர்களுடன் கீழும் மேலும் பரந்து கிடக்கின்றன. அதன் வேர்கள் கீழ் நோக்கிப் பல்கி மனித உலகத்தில் கர்மத்தொடுப்புகளாகின்றன. | 15.2. Its branches extend below and above, nourished by the modes, with sense objects for its twigs and below, in the world of men stretch forth the roots resulting in actions. |
| 15.3. ஆதலால் இவ்வுலகத்தில் இதற்கு வடிவங் காணப்படுவதில்லை; முடிவும், ஆதியும், நிலைக்களனும் புலப்படுவதில்லை. நான்கு ஊன்றிய வேருடைய இந்த அரச மரத்தைப் பற்றின்மையென்னும் வலிய வாளால் வெட்டியெறிந்துவிட்டு, | 15.3. Its real form is not thus perceived here, nor its end nor beginning nor its foundation. Having cut off this firm-rooted Asvattham (peepal tree) with the strong sword of nonattachment. |
| 15.4. அப்பால் ஒருவன் புகுந்தோர் மீள்வதற்ற பதவியைப் பெறலாம். (அப் பதமுடையோனாகிய) எவனிடமிருந்து ஆதித் தொழில் பொழிவுற்றதோ, அந்த ஆதி புருஷனைச் சார்ந்து நிற்கிறான். | 15.4. Then, that path must be sought from which those who have reached it never return, saying “I seek refuge only in that Primal Person from whom has come forth this ancient current of the world” (this cosmic process). |
| 15.5. செருக்கும் மயக்கமு மற்றோர், சார்புக் குற்றங்களையெல்லாம் வென்றோர், ஆத்ம ஞானத்தில் எப்போதும் நிற்போர், விருப்பங்களினின்றும் நீங்கியோர், | 15.5. Those, who are freed from pride and delusion, who have conquered the evil of attachment, who, all desires stilled, are ever devoted to the Supreme Spirit, who are liberated from the dualities |

| | |
|---|---|
| சுக துக்கக் குறிப்புக்களையுடைய இரட்டைகளினின்றும் விடுபட்டோர், மடமையற்றோர் - இன்னோர் அந்த நாசமற்ற பதத்தை எய்துகின்றனர். | known as pleasure and pain and are undeluded, go to that eternal state. |
| 15.6. அதற்கு சூரியனும் சந்திரனும் தீயும் ஒளியேற்றுவதில்லை. எதனை யெய்தினோர் மீள்வதில்லையோ அதுவே என் பரமபதம். | 15.6. The sun does not illumine that, nor the moon nor the fire. That is My supreme abode from which those who reach it never return. |
| 15.7. எனது அம்சமே ஜீவலோகத்தில் என்றுமுள்ள ஜீவனாகி, இயற்கையிலுள்ளனவாகிய மனதுட்பட்ட ஆறு இந்திரியங்களையும் கவர்கிறது. | 15.7. A fragment (or fraction) of My own self, having become a living soul, eternal, in the world of life, draws to itself the senses of which the mind is the sixth, that rest in nature. |
| 15.8. கந்தங்களைக் காற்று தோய்வினால் பற்றிச் செல்வது போல் ஈசுவரன் யாதேனுமோருடலை எய்துங் காலத்தும் விடுங்காலத்தும், இந்த இந்திரியங்களைப் பற்றிச் செல்லுகிறான். | 15.8. When the lord takes up a body and when he leaves it, he takes these (the senses and mind) and goes even as the wind carries perfumes from their places. |
| 15.9. கேட்டல், காண்டல், தீண்டுதல், சுவை, மோப்பு, மனம் -- இவற்றில் நிலைகொண்டு ஜீவன் விஷயங்களைத் தொடர்ந்து நடக்கிறான். | 15.9. He enjoys the objects of the senses, using the ear, the eye, the touch sense, the taste sense and the nose as also the mind. |
| 15.10. அவன் புறப்படுகையிலும், நிற்கையிலும், உண்ணுகையிலும், குணங்களைச் சார்ந்திருக்கையிலும், அவனை மூடர் காண்பதில்லை. | 15.10. When He departs or stays or experiences, in contact with the modes, the deluded do not see (the indwelling soul) but they who have the eye of wisdom (or whose eye is wisdom) see. |

| | |
|---|---|
| ஞான விழியுடையோர் காண்கின்றனர். | |
| 15.11. முயற்சியுடைய யோகிகள் இவனைத் தம்முள்ளேயே காண்கின்றனர். முயற்சியுடையோராயினும் தம்மைத் தாம் சமைக்காத அஞ்ஞானிகள் இவனைக் காண்கிலர். | 15.11. The sages also striving perceive Him as established in the self, but the unintelligent, whose souls are undisciplined, though striving, do not find Him. |
| 15.12. சூரியனிடமிருந்து உலக முழுமைக்கும் சுடர் கொளுத்தும் ஒளியும், சந்திரனிடத்துள்ளதும், தீயிலுள்ளதும் -- அவ்வொளி யெல்லாம் என்னுடையதே யென்றுணர். | 15.12. That splendour of the sun that illumines this whole world, that which is in the moon, that which is in the fire, that splendour, know as Mine. |
| 15.13. நான் பூமியினுட் புகுந்து உயிர்களை வீரியத்தால் தாங்குகிறேன்; ரச வடிவமுள்ள சோமமாகிப் பூண்டுகளையெல்லாம் வளர்க்கிறேன். | 15.13. And entering the earth, I support all beings by My vital energy; and becoming the sapful soma (moon), I nourish all herbs (or plants) |
| 15.14. நானே *வைசுவாநரனாய், உயிர்களின் உடல்களைச் சார்ந்திருக்கிறேன். பிராணன், அபானன் என்ற வாயுக்களுடன் கூட நால்வகைப்பட்ட அன்னத்தை ஜீரணமாக்குகிறேன். (*வைசுவாநரன் = எல்லா நரரிடத்துமுள்ள கடவுள்) | 15.14. Becoming the fire of life in the bodies of living creatures and mingling with the upward and downward breaths, I digest the four kinds of food. |
| 15.15. எல்லாருடைய அகத்திலும் நான் புகுந்திருக்கிறேன். நிலைவும், ஞானமும், இவற்றின் நீக்கமும் -- என்னிடமிருந்து பிறக்கின்றன. எல்லாத் தேசங்களிலும் | 15.15. And I am lodged in the hearts of all; from Me are memory and knowledge as well as their loss. I am indeed He who is to be known by all the Vedas. I indeed (am) the |

| | |
|---|---|
| அறியப்படும் பொருள் யான்; வேதாந்தத்தை ஆக்கியோன் யான்; வேதமுணர்ந்தோன் யானே. | author of the Vedanta and I too the knower of the Vedas. |
| 15.16. உலகத்தில் இரண்டு வகைப் புருஷருளர், *அக்ஷர புருஷன், க்ஷர புருஷன் என, க்ஷர புருஷன் என்பது எல்லா உயிர்களையும் குறிக்கும்; கூடஸ்தனே அக்ஷர புருஷன்.<br>(*க்ஷரம் = அழிவது; அக்ஷரம் = அழியாதது; கூடஸ்தன் = சிகரத்திலுள்ளோன், மாறுதலற்றோன்) | 15.16. There are two persons in this world, the perishable and<br>the imperishable, the perishable is all these existences and<br>the unchanging is the imperishable. |
| 15.17. இவரில் வேறுபட்டோன் உத்தம புருஷன். அவனே பரமாத்மா எனப்படுவோன். அவன் மூன்று உலகுகளினுட் புகுந்து அவற்றைத் தரிக்கிற கேடற்ற ஈசுவரன். | 15.17. But other than these, the Highest Spirit called the Supreme Self who, as the Undying Lord, enters the three<br>worlds and sustains them. |
| 15.18. நான் அழிவு கடந்தோனாதலாலும், அக்ஷர புருஷனைக் காட்டிலும் சிறந்தோனாதலாலும், உலகத்தாராலும் வேதங்களாலும் புருஷோத்தமனென்று கூறப்படுகிறேன். | 15.18. As I surpass the perishable and am higher even than<br>the imperishable, I am celebrated as the Supreme Person<br>in the world and in the Veda. |
| 15.19. மடமை தீர்ந்தவனாய், எவன் யானே புருஷோத்தமனென்பதை அறிவானோ, அவனே எல்லா மறிந்தோன். அவன் என்னை எல்லாத் தன்மையாலும் வழிபடுகிறான். | 15.19. He who, undeluded, thus knows Me, the Highest Person, is the knower of all and worships Me with all his being (with his whole spirit), O Bhārata (Arjuna). |
| 15.20. குற்றமற்றோய்! இங்ஙனம் மிகவும் ரகசியமான இந்த | 15.20. Thus has this most secret doctrine been taught by Me, |

| | |
|---|---|
| சாஸ்திரத்தை உனக்கு உரைத்தேன். பாரதா! இதையுணர்ந்தோன் புத்திமானாவான்; ஆனே செய்யத் தக்கது செய்தான். | O blameless one. By knowing this, a man will become wise and will have fulfilled all his duties, O Bhārata (Arjuna). |

## பகவத் கீதை : பதினாறாம் அத்தியாயம்
## தெய்வாசுர சம்பத் விபாக யோகம்

முதற்கூறிய தத்துவங்களைத் தெய்வத் தன்மை வாய்ந்தவர்களே உணர்வார்கள். அசுரத் தன்மை வாய்ந்தவர்கள் அறியார்கள். தெய்வத்தன்மை யுடையோர் மனது தெளிவுற்றிருக்கும். அவர் பிறருக்குத் தீங்கு செய்யார், கோபமறியார், பொறுமை இரக்கம் பெற்றிருப்பார். அசுரத் தன்மை யுடையோரே டம்பமும், கொழுப்பும், கர்வமும், கோபமும், அயர்வும் பொருந்தியிருப்பார். தெய்வத்தன்மை யுடையோர் சம்சார பந்தத்தினின்றும் விடுபடுவார். மற்றவரோ பின்னும் அதில் கட்டுப்படுவார். மேலும் அசுரத் தன்மையுடையோர் வையகம் பொய்யென்றும் ஈசுவரனற்றதென்றும் உரைப்பார்கள். தாங்களே இறைவனென்றும், தாங்களே வல்லவர்களென்றும், தாங்களே செல்வம் படைத்தவர்களென்றும், தங்களுக்கு நிகர் எவருமில்லையென்றும் எண்ணிக்கொண்டு கெட்ட காரியங்களைச் செய்து நரகத்தில் விழுவார்கள். அவர்களுக்கு சாஸ்திரத்தில் நம்பிக்கை கிடையாது. தெய்வத் தன்மை வாய்ந்தவர்களுக்கோ சாஸ்திரமே பிரமாணமாகும். ஸ்ரீபகவான் சொல்லுகிறான்:

## CHAPTER XVI

# The Nature oj the Godlike and the Demoniac Mind

## Those of Divine Nature

| | |
|---|---|
| 16.1. அஞ்சாமை, உள்ளத் தூய்மை, ஞான யோகத்தில் உறுதி, ஈகை, | 16.1The Blessed Lord said: Fearlessness, purity of mind, wise apportionment of |

| | |
|---|---|
| தன்னடக்கம், வேள்வி, வேதங் கற்றல், தவம், நேர்மை, | knowledge and concentration, charity, self-control and sacrifice, study of the scriptures, austerity and uprightness. |
| 16.2. கொல்லாமை, வாய்மை, சினவாமை, துறவு, ஆறுதல், வண்மை, ஜீவதயை, அவாவின்மை, மென்மை, நாணுடைமை, சலியாமை, | 16.2. Non-violence, truth, freedom from anger, renunciation, tranquillity, aversion to fault finding, compassion to living beings, freedom from covetousness, gentleness, modesty and steadiness (absence of fickleness). |
| 16.3. ஒளி, பொறை, உறுதி, சுத்தம், துரோகமின்மை -- இவை தெய்வ சம்பத்தை எய்தியவனிடம் காணப்படுகின்றன, பாரதா! | 16.3. Vigour, forgiveness, fortitude, purity, freedom from malice and excessive pride- these, O Pāṇḍava (Arjuna), are the endowments of him who is born with the divine nature. |
| 16.4. டம்பம், இறுமாப்பு, கர்வம், சினம், கடுமை, அஞ்ஞானம் -- இவை அசுர சம்பத்தை எய்தியவனிடம் காணப்படுகின்றன பார்த்தா! | 16.4. Ostentation, arrogance, excessive pride, anger, as also harshness and ignorance, these, O Pārtha (Arjuna), are the endowments of him who is born with the demoniac nature. |
| 16.5. தேவ சம்பத்தால் விடுதலையுண்டாம். அசுர சம்பத்தால் பந்தமேற்படும்; பாண்டவா, தேவ சம்பத்தை எய்திவிட்டாய்; துயரப்படாதே. | 16.5. The divine endowments are said to make for deliverance and the demoniac for bondage. Grieve not, O Pāṇḍava (Arjuna) , thou art born with the divine endowments (for a divine destiny). |

| | |
|---|---|
| 16.6. இவ்வுலகத்தில் உயிர்ப் படைப்பு இரண்டு வகைப்படும்; தேவ இயல் கொண்டது, அசுர இயல் கொண்டது. தேவ இயல் கொண்டதை விரித்துச் சொன்னேன். பார்த்தா! அசுர இயல் கொண்டதைச் சொல்லுகிறேன், கேள். | 16.6. There are two types of beings created in the world- the divine and the demoniac. The divine have been described at length. Hear from me, O Pārtha (Arjuna), about the demoniac. |
| 16.7. அசுரத் தன்மை கொண்டோர், தொழிலியல்பையும் வீட்டியல்பையும் அறியார். தூய்மையேனும், ஒழுக்கமேனும், வாய்மையேனும் அவர்களிடம் காணப்படுவதில்லை. | 16.7. The demoniac do not know about the way of action or the way of renunciation. Neither purity, nor good conduct, nor truth is found in them. |
| 16.8. அவர்கள் இவ்வுலகம் உண்மையற்றதென்றும், நிலையற்றதென்றும், கடவுளற்றதென்றும் சொல்லுகிறார்கள். இது தொடர்பின்றிப் பிறந்த தென்றும், வெறுமே காமத்தை ஏதுவாக உடையது என்றும் சொல்லுகிறார்கள். | 16.8. They say that the world is unreal, without a basis, without a Lord, not brought about in regular causal sequence, caused by desire, in short. |
| 16.9. இந்தக் காட்சியில் நிலைபெற்று, அற்ப புத்தியுடைய அந்த நஷ்டாத்மாக்கள் உலகத்துக்குத் தீங்கு சூழ்வோராய், அதன் நாசத்துக்காகக் கொடிய தொழில் செய்கின்றனர். | 16.9. Holding fast to this view, these lost souls of feeble understanding, of cruel deeds, rise up as the enemies of the world for its destruction. |
| 16.10. நிரப்பவொண்ணாத காமத்தைச் சார்ந்து, டம்பமும், கர்வமும், மதமும் பொருந்தியவராய், மயக்கத்தால் பொய்க் | 16.10. Giving themselves up to insatiable desire, full of hypocrisy, excessive pride and arrogance, holding wrong views through delusion, they act with impure resolves. |

| | |
|---|---|
| கொள்கைகளைக் கொண்டு அசுத்த நிச்சயங்களுடையோராய்த் தொழில் புரிகிறார்கள். | |
| 16.11. பிரளயமட்டுந் தீராத எண்ணற்ற கவலைகளிற் பொருந்தி, விருப்பங்களைத் தீர்த்துக் கொள்வதில் ஈடுபட்டோராய், 'உண்மையே இவ்வளவுதான்' எற நிச்சயமுடையோராய், | 16.11. Obsessed with innumerable cares which would end only with (their) death, looking upon the gratification of desires as their highest aim, assured that this is all. |
| 16.12. நூற்றுக்கணக்கான ஆசைக் கயிறுகளால் கட்டுண்டு, காமத்துக்கும், சினத்துக்கும் ஆட்பட்டோராய்க் காம போகத்துக்காக அநியாயஞ் செய்து பொருட் குவைகள் சேர்க்க விரும்புகிறார்கள். | 16.12. Bound by hundreds of ties of desire, given over to lust and anger, they strive to amass hoards of wealth, by unjust means, for the gratification of their desires. |
| 16.13. "இன்று இன்ன லாபமடைந்தேன்; இன்ன மனோரதத்தை இனி எய்துவேன்; இன்னவையுடையேன்; இன்ன பொருளை இனிப் பெறுவேன், | 16.13. "This today has been gained by me: this desire I shall attain, this is mine and this wealth also shall be mine (in future)." |
| 16.14. இன்ன பகைவரைக் கொன்று விட்டேன்; இனி மற்றவர்களைக் கொல்வேன், நான் ஆள்வோன், நான் போகி, நான் சித்தன், நான் பலவான், நான் சுக புருஷன், | 16.14. "This foe is slain by me and others also I shall slay I am the lord, I am the enjoyer, I am successful, mighty and happy." |
| 16.15. நான் செல்வன், இனப்பெருக்க முடையான், எனக்கு நிகர் யாருளர்? வேட்கிறேன்; கொடுப்பேன்; களிப்பேன்" என்று அஞ்ஞானங்களால் மயங்கினோர், | 16.15. "I am rich and well-born. Who is there like unto me? I shall sacrifice, I shall give, I shall rejoice," thus they (say), deluded by ignorance. |

| | |
|---|---|
| 16.16. பல சித்தங்களால் மருண்டோர், மோகவலையிலகப்பட்டோர், காம போகங்களில் பற்றுண்டோர் -- இவர்கள் அசுத்தமான நரகத்தில் விழுகிறார்கள். | 16.16. Bewildered by many thoughts, entangled in the meshes of delusion and addicted to the gratification of desires, they fall into a foul hell. |
| 16.17. இவர்கள் தற்புகழ்ச்சியுடையோர், முரடர், செல்வச் செருக்கும் மதமுடையோர்; டம்பத்துக்காக விதி தவறிப் பெயர் மாத்திரமான வேள்வி செய்கின்றனர். | 16.17. Self-conceited, obstinate, filled with the pride and arrogance of wealth, they perform sacrifices which are so only in name with ostentation and without regard to rules. |
| 16.18. அகங்காரத்தையும், பலத்தையும், செருக்கையும், விருப்பத்தையும், இனத்தையும் பற்றியவர்களாகிய இன்னோர் தம் உடம்புகளிலும் பிற உடம்புகளிலும் உள்ள என்னைப் பகைக்கிறார்கள். | 16.18. Given over to self-conceit, force and pride and also to lust and anger, these malicious people despise Me dwelling in the bodies of themselves and others. |
| 16.19. இங்ஙனம் பகைக்கும் கொடியோரை -- உலகத்தில் எல்லாரிலும் கடைப்பட்ட இந்த அசுப மனிதரை, நான் எப்போதும் அசுரப் பிறப்புக்களில் எறிகிறேன். | 16.19. These cruel haters, worst of men, I hurl constantly these evil-doers only into the wombs of demons in (this cycle of) births and deaths. |
| 16.20. பிறப்புத் தோறும் அசுரக் கருக்களில் தோன்றும் இம்மூடர், என்னை யெய்தாமலே மிகவும் கீழான கதையைச் சேர்கிறார்கள், குந்தியின் மகனே! | 16.20. Fallen into the wombs of demons, these deluded beings from birth to birth, do not attain to Me, O Son of Kuntī (Arjuna), but go down to the lowest state. |
| 16.21. ஆத்ம நாசத்துக்கிடமான இம்மூன்று வாயில்களுடையது | 16.21. The gateway of this hell leading to the ruin of the soul |

| | |
|---|---|
| நரகம்; (அவையாவன) காமம், சினம், அவா, ஆதலால் இம்மூன்றையும் விடுக. | is threefold, lust, anger and greed. Therefore these three, one should abandon |
| 16.22. இந்த மூன்று இருள் வாயில்களினின்றும் விடுபட்டோன் தனக்குத் தான் நலந் தேடிக் கொள்கிறான்; அதனால் பரகதி அடைகிறான். | 16.22. The man who is released from these, the three gates to darkness, O son of Kuntī (Arjuna), does what is good for his soul and then reaches the highest state . |
| 16.23. சாஸ்திர விதியை மீறி, விருப்பத்தால் தொழில் புரிவோன் சித்தி பெறான்; அவன் இன்பமெய்தான்; பரகதி அடையான். | 16.23. But he who discards the scriptural law and acts as his desires prompt him, he does not attain either perfection or happiness or the highest goal. |
| 16.24. ஆதலால், எது செய்யத் தக்கது, எது செய்யத் தகாதது என்று நிச்சயிப்பதில் நீ சாஸ்திரத்தைப் பிரமாணமாகக் கொள். அதை யறிந்து சாஸ்திர் விதியால் கூறப்பட்ட தொழிலைச் செய்யக் கடவாய். | 16.24. Therefore let the scripture be thy authority for determining what should be done and what should not be done. Knowing what is declared by the rules of the scripture, thou shouldst do thy work in this world. |

## பகவத் கீதை : பதினேழாம் அத்தியாயம்
## சிரத்தாத்ர விபாக யோகம்

அவரவர் குணங்களுக் கேற்ப சிரத்தையும் சாத்விகம், ராஜசம், தாமசம் என மூவகைப்படும். சாத்விக சிரத்தையுடையோர், சாஸ்திரத்தைத் தழுவித் தேவர்களை வணங்குவர். ராஜசச் சிரத்தை யுடையோர் யக்ஷர்களையும் ராக்ஷதர்களையும் வணங்குவர். தாமச சிரத்தையுடையோர் பூத பிரேத பிசாசங்களை வணங்குவர். அவர்களுக்குக் கிட்டும் பலன்களும் குணங்களுக்குத் தக்கபடியே வேறுபட்டிருக்கும். அப்படியிருக்க சாஸ்திரத்தை மீறுவோரைப் பற்றிச் சொல்ல

வேண்டியதில்லை. அவர்கள் நினைத்த பலன் கிட்டாதென்பது மாத்திரமன்று; அவர்களுக்குக் கேடுமுண்டாகும். அவரவர் குணங்களுக்கேற்ப உண்ணும் உணவும், செய்யும் தவமும், கொடுக்கும் தானமும் மூவகைப் பட்டிருக்கும். ஸ்ரீஅர்ஜுனன் சொல்லுகிறான்:

## CHAPTER XVII

# The Three Modes Applied to Religious Phenomena

## Three Kinds of Faith

| | |
|---|---|
| 17.1. கண்ணா! சாஸ்திர விதியை மீறி, ஆனாலும் நம்பிக்கையுடன், வேள்வி செய்வோருக்கு என்ன நிலை கிடைக்கிறது? ஒளி நிலையா? கிளர்ச்சி நிலையா? அல்லது இருள் நிலையா? (சத்துவமா, ரஜசா, தமசா?) ஸ்ரீபகவான் சொல்லுகிறான்: | 17.1. A rjuna said: Those who, neglecting the ordinances of scriptures, offer Sacrifices filled with faith-what is their position, O Kṛṣṇa? Is it one of goodness or of passion or of dullness? |
| 17.2. ஜீவர்களிடம் இயற்கையால் நம்பிக்கை மூன்று வகையாகத் தோன்றுகிறது. சாத்வீகம், ராஜசம், தாமசம் என; அதைக் கேள். | 17.2. The Blessed Lord said: (2) The faith of the embodied is of three kinds, born of their nature, good, passionate and dull. Hear now about it. |
| 17.3. பாரத! யாவருக்கும் தத்தம் உள்ளியல்புக்கு ஒத்தபடியாகவே நம்பிக்கை அமைகிறது. மனிதன் *சிரத்தை மயமானவன். எவன் எந்தப் பொருளில் நம்பிக்கையுடையவனோ, அந்தப் பொருளே தான் ஆகிறான். (*நம்பிக்கை) | 17.3. The faith of every individual, O Bhārata (Arjuna), is in accordance with his nature. Man is of the nature of his faith: what his faith is, that, verily, he is. |
| 17.4. ஒளியியல்புடையோர் வானவர்க்கு வேள்வி செய்கின்றனர். | 17.4. Good men worship the gods, the passionate worship the |

| | |
|---|---|
| ரஜோ குணமுடையோர், யக்ஷர்களுக்கும், ராக்ஷதருக்கும் வேள்வி செய்கிறார்கள். மற்றத் தமோ குணமுடையோர் பிரேத பூத கணங்களுக்கு வேள்வி செய்கிறார்கள். | demigods and the demons and the others (who are) the dull,<br>worship the spirits and ghosts. |
| 17.5. (சிலர்) சாஸ்திர நியமத்தை மீறி, டம்பமும் அகங்காரமு முடையோராய், விருப்பத்திலும், விழைவிலும் சார்புற்றவர்களாய் கோரமான தவஞ் செய்கிறார்கள். | 17.5. Those men, vain and conceited and impelled by the force<br>of lust and passion, who perform violent austerities, which<br>are not ordained by the scriptures, |
| 17.6. இங்ஙனம் அறிவு கெட்டோராய்த் தம் உடம்பிலுள்ள பூதத் தொகுதிகளையும் அகத்திலுள்ள என்னையும் வருத்துகிறார்கள். இவர்கள் அசுர நிச்சய முடையோரென்றுணர். | 17.6. Being foolish oppress the group of elements in their body<br>and Me also dwelling inthe body. Know these to be demoniac<br>in their resolves. |
| 17.7. ஒவ்வொருவருக்கும் பிரியமான உணவும் மூன்றுவகைப் படுகிறது. வேள்வியும், தவமும், தானமும், அங்ஙனமே மும்மூன்று வகைப்படுகின்றன. அவற்றின் வேற்றுமையைக் கேள். | 17.7. Even the food which is dear to all is of three kinds.<br>So are the sacrifices, austerities and gifts. Hear thou the<br>distinction of these. |
| 17.8. உயிர், சக்தி, பலம், நோயின்மை, இன்பம், பிரீதி இவற்றை மிகுதிப் படுத்துவன, சுவையுடையன, குழம்பாயின, உறுதியுடையன, உளமுகந்தன -- இவ்வுணவு சத்துவ குணமுடையோருக்குப் பிரியமானவை. | 17.8. The foods which promote life, vitality, strength, health,<br>joy and cheerfulness, which are sweet, soft, nourishing and<br>agreeable are dear to the "good." |

| | |
|---|---|
| 17.9. கசப்பும், புளிப்பும், உப்பும், உறைப்பும் மிகுந்தன, அதிகச் சூடு கொண்டன, உலர்ந்தன, எரிச்சலுடையன -- இவ்வுணவுகளை ரஜோ குணமுடையோர் விரும்புவர். இவை துன்பத்தையும் துயரையும் நோயையும் விளைப்பன. | 17.9. The foods that are bitter, sour, saltish, very hot, pungent,<br>harsh and burning, producing pain, grief and disease are liked by the ' 'passionate. " |
| 17.10. பழையது, சுவையற்றது, அருகியது, கெட்டுப் போனது, எச்சில், அசுத்தம் -- இத்தகைய உணவு தமோ குணமுடையோருக்குப் பிரியமானது. | 17.10. That which is spoiled, tasteless, putrid, stale, refuse and<br>unclean is the food dear to the "dull." |
| 17.11. பயனை விரும்பாதவர்களாய், வேள்வி புரிதல் கடமையென்று மனந்தேறி, விதிகள் சொல்லியபடி இயற்றுவாரின் வேள்வி சத்துவ குணமுடைத்து. | 17.11. That sacrifice which is offered, according to the scriptural law, by those who expect no reward and believe firmly that it is their duty to offer the sacrifice, is "good." |
| 17.12. பயனைக் குறித்தெனினும், ஆடம்பரத்துக் கெனினும் செய்யப்படும் வேள்வி ராஜசமென்றுணர், பாரதரிற் சிறந்தாய்! | 17.12. But that which is offered in expectation of reward or<br>for the sake of display, know, O best of the Bharatas (Arjuna), that sacrifice to be "passionate." |
| 17.13. விதி தவறியது, பிறர்க்குணவு தராதது, மந்திரமற்றது, தக்ஷிணையற்றது, நம்பிக்கையின்றிச் செய்யப்படுவது -- இத்தகைய வேள்வியைத் தாமசமென்பர். | 17.13. The sacrifice which is not in conformity with the law, in which no food is distributed, no hymns are chanted<br>and no fees are paid, which is empty of faith, they declare to be "dull." |
| 17.14. தேவர், அந்தணர், குருக்கள், அறிஞர் இவர்களுக்குப் பூஜை | 17.14. The worship of the gods, of the twice-born, of teachers |

| | |
|---|---|
| செய்தல், தூய்மை, நேர்மை, பிரம்மசரியம், கொல்லாமை -- இவை உடம்பைப் பற்றிய தவமெனப்படும். | and of the wise, purity, uprightness, continence and nonviolence, this is said to be the penance of the body. |
| 17.15. சினத்தை விளைக்காததும், உண்மையுடையதும், இனியதும், நலங்கருதியதுமாகிய சொல்லல், கல்விப் பயிற்சி இவை வாக்குத் தவமெனப்படும். | 17.15. The utterance (of words) which gives no offence, which<br>is truthful, pleasant and beneficial and the regular recitation<br>of the Veda-this is said to be the penance of speech. |
| 17.16. மன அமைதி, மகிழ்ச்சி, மௌனம், தன்னைக் கட்டுதல், எண்ணத் தூய்மை -- இவை மனத் தவமெனப்படும். | 17.16. Serenity of mind, gentleness, silence, self-control, the<br>purity of mind-thls is called the penance of mind. |
| 17.17. பயனை விரும்பாத யோகிகளால் மேற்கூறிய மூன்று வகைகளிலும் உயர்ந்த நம்பிக்கையுடன் செய்யப்படும் தவம் சாத்விக மெனப்படும். | 17.17. This threefold penance practised with utmost faith by men of balanced mind without the expectation of reward, they call “good." |
| 17.18. மதிப்பையும், பெருமையையும், பூஜையையும் நாடிச் செய்வதும், ஆடம்பரத்துக்காகச் செய்வதுமாகிய தவம் ரஜோ வெனப்படும்; அ்ஃது நிலையற்றது; உறுதியற்றது. | 17.18. That penance which is performed in order to gain respect, honour and reverence and for the sake of show is<br>said to be “passionate"; it is unstable and not lasting. |
| 17.19. மூடக் கொள்கையுடன் தன்னைத்தான் துன்பப்படுத்திக் கொண்டு செய்வதும், பிறரைக் கெடுக்குமாறு செய்வதுமாகிய தவம் தாமச மெனப்படும். | 17.19. That penance which is performed with a foolish obstinacy by means of self-torture or for causing injury to others is said to be “dull." |
| 17.20. கொடுத்தல் கடமையென்று கருதிக் கைம்மாறு வேண்டாமல், | 17.20. That gift, which is made to one from whom no return |

| | |
|---|---|
| தகுந்த இடத்தையும் காலத்தையும் பாத்திரத்தையும் நோக்கிச் செய்யப்படும் தானத்தையே சாத்விக மென்பர். | is expected, with the feeling that it is one's duty to give and which is given in proper place and time and to a worthy person, that gift is held to be "good." |
| 17.21. கைம்மாறு வேண்டியும், பயனைக் கருதியும், கிலேசத்துடன் கொடுக்கப்படும் தானத்தை ராஜச மென்பர். | 17.21. But that gift which is made with the hope of a return or with the expectation of future gain or when it hurts to give, is held to be "passionate." |
| 17.22. தகாத இடத்தில், தகாத காலத்தில், தகாதார்க்குச் செய்யப்படுவதும், மதிப்பின்றி இகழ்ச்சியுடன் செய்யப்படுவதுமாகிய தானம் தாமச மெனப்படும். | 17.22. And that gift which is made at a wrong place or time or to an unworthy person, without proper ceremony or with contempt, that is declared to be "dull." |
| 17.23. 'ஓம் தத் ஸத்' என்ற மும்மைப் பெயர் பிரம்மத்தைக் குறிப்பதென்பர். அதனால், முன்பு பிரமாணங்களும், வேதங்களும், வேள்விகளும் வகுக்கப்பட்டன. | 17.23. "Aum Tat Sat"-this is considered to be the threefold symbol of Brahman. By this were ordained of old the Brāhmins, the Vedas and the sacrifices. |
| 17.24. ஆதலால், பிரம்மவாதிகள் விதிப்படி புரியும் வேள்வி, தவம், தானம் என்ற கிரியைகள் எப்போதும் 'ஓம்' என்று தொடங்கி செய்யப்படுகின்றன. | 17.24. Therefore with the utterance of "aum" the acts of sacrifice, gift and penance enjoined in the scriptures are always undertaken by the expounders of Brahman. |
| 17.25. 'தத்' என்ற சொல்லை உச்சரித்துப் பயனைக் கருதாமல், பல வகைப்பட்ட வேள்வியும் தவமும் தானமுமாகிய கிரியைகள் | 17.25. And with the utterance of the word "tat" the acts of sacrifice and penance and the various acts of giving are performed by the seekers of salvation, without aiming at the reward. |

| | |
|---|---|
| மோக்ஷத்தை விரும்புவோரால் செய்யப்படுகின்றன. | |
| 17.26. 'ஸத்' என்ற சொல் உண்மையென்ற பொருளிலும், நன்மையென்ற பொருளிலும் வழங்கப்படுகிறது. பார்த்தா! புகழ்வதற்குரிய செய்கையைக் குறிப்பதற்கும் 'ஸத்' என்ற சொல் வழங்குகிறது. | 17.26. The word "sat" is employed in the sense of reality and goodness; and so also, 0 Partha (Arjuna) , the word "sat" is used for praiseworthy action. |
| 17.27. வேள்வி, தவம், தானம் இவற்றில் உறுதி நிலையும் 'ஸத்' எனப்படுகிறது. பிரம்மத்தின் பொருட்டாக செய்யும் கர்மமும் 'ஸத்' என்றே சொல்லப்படும். | 17.27. Steadfastness in sacrifice, penance, gift is also caned "sat" and so also any action for such purposes is called "sat." |
| 17.28. அசிரத்தையுடன் செய்யும் வேள்வியும், தானமும், தவமும், கர்மமும் 'அஸத்' எனப்படும். பார்த்தா! அவை மறுமையிலும் பயன்படா; இம்மையிலும் பயன்படா. | 17.28. Whatever offering or gift is made, whatever penance is performed, whatever rite is observed, without faith, it is called "asat," O Pārtha (Arjuna); it is of no account hereafter or here. |

## பகவத் கீதை : பதினெட்டாம் அத்தியாயம்
## மோக்ஷ சந்யாச யோகம்

"சந்நியாச மென்றாலும், தியாக மென்றாலும் ஒன்றே. ஆனால், காம்ய கர்மத்தை அடியோடு விட்டுவிடுவது நந்நியாசமென்றும், நித்திய நைமித்திக கர்மங்களில் பற்றுதலையும் பலனையும் துறப்பது தியாகமென்றும் அறியவேண்டும். எல்லாக் கர்மங்களையும் விட்டுவிட வேண்டுமென்று சிலர் கூறுவார்கள். அது கீதையின் கருத்தன்று. நித்திய நைமித்திக கர்மங்களைச் செய்தே தீரவேண்டும். செய்யாவிடில் பாபம் நேரிடும். மனிதன் செய்யும் ஒவ்வொரு காரியத்துக்கும் ஈசுவரன் முக்கிய

காரணமாவான். அப்படியிருக்கத் தானே அவற்றைச் செய்துவிடுவதாக நினைப்பவன் மூடன். ஞானம், கர்மம், உறுதி, இன்பம் என்றிவை ஒவ்வொன்றும் சாத்விகம், ராஜசம், தாமசம் என்று மூவகைப் பட்டிருக்கும். கடவுளைத் தமக்குரிய கர்மங்களால் ஆராதித்தால் சித்தி பெறலாம்." இவ்விதம் கண்ணனுடைய உபதேசத்தைக் கேட்டு அர்ஜுனன் மயக்கமற்று நல்லறிவு பெற்றுப் போர் புரியத் தொடங்கினான் என்று சஞ்ஜயன் திருதராஷ்டிரனுக்குக் கூறினான். அர்ஜுனன் சொல்லுகிறான்:

| | |
|---|---|
| 18.1. உயர் புயத்தோய்! கண்ணா! கேசியைக் கொன்றாய், *சந்நியாசத்தின் இயல்பையும், ^தியாகத்தின் இயல்பையும் பிரித்துக் கேட்க விரும்புகிறேன். (*சந்நியாசம் = துறவு. ^தியாகம் = விடுதல்) ஸ்ரீபகவான் சொல்லுகிறான்: | 18.1. Arjuna said:<br>I desire, O Mighty-armed (Kṛṣṇa), to know the true nature of renunciation and of relinquishment, O Hṛṣīkeśa (Kṛṣṇa), severally, O Keśiniṣūdana (Kṛṣṇa). |
| 18.2. விருப்பத்தால் செய்யப்படும் செய்கைகளைத் துறப்பது சந்நியாசமென்று புலவர் தெரிந்துளர். எல்லாவிதச் செயல்களின் பலன்களையுந் துறந்து விடுதல் தியாகமென்று ஞானிகள் கூறுவர். | 18.2. The Blessed Lord said:<br>The wise understand by "renunciation" the giving up of works prompted by desire: the abandonment of the fruits of all works, the learned declare, is relinquishment. |
| 18.3. சில அறிஞர் செய்கையைக் குற்றம் போல கருதி விட்டுவிட வேண்டும் என்கிறார்கள், வேறு சிலர் 'வேள்வி' தானம், தவம் என்ற செயல்களை விடக்கூடாது, என்கிறார்கள். | 18.3. Action should be given up as an evil, ' say some learned men: others declare that 'acts of sacrifice" gift and penance<br>are not to be given up.' |
| 18.4. பாரதரில் சிறந்தவனே, புருஷப் புலியே! தியாக விஷயத்தில் நான் நிச்சயத்தைச் சொல்லுகிறேன்; கேள். தியாகம் மூன்று வகையாகக் கூறப்பட்டுள்ளது. | 18.4. Hear now from Me, O Best of the Bharatas (Arjuna), the truth about relinquishment: relinquishment" O Best of men (Arjuna), has been explained as threefold. |
| 18.5. வேள்வி, தானம், தவம் என்ற செயல்களை விடக்கூடாது. அவற்றைச் செய்யவே வேண்டும். வேள்வியும், தானமும், தவமும் | 18.5. Acts of sacrifice, gift and penance are not to be relinquished but should be performed. For sacrifice, gift and<br>penance are purifiers of the wise. |

| | |
|---|---|
| அறிவுடையோரைத் தூய்மைப்படுத்துகின்றன. | |
| 18.6. ஆனால், பார்த்தா! இச்செயல்களைக்கூட ஒட்டின்றியும், பயன்களை வேண்டாமலும் செய்ய வேண்டும் என்பது என் உத்தமமான நிச்சயக் கொள்கை. | 18.6. But even these works ought to be performed, giving up attachment and desire forfruits. This, O Pārtha (Arjuna), is my decided and final view. |
| 18.7. *நியமத்தின்படியுள்ள செய்கையைத் துறத்தல் தகாது; மதிமயக்கத்தால் அதனை விட்டுவிடுதல் தமோ குணத்தால் நேர்வதென்பர். (*நியமம் = ஒழுங்கு, சட்டம், சாஸ்திர விதி.) | 18.7. Verily the renunciation of any duty that ought to be done is not right. The abandonment of it through ignorance is declared to be of the nature of "dullness." |
| 18.8. உடம்புக்கு வருத்தம் நேருமென்ற பயத்தால் ஒரு செய்கையைத் துன்பமாகக் கருதி, அதனை விட்டுவிடுவோன் புரியும் தியாகம் ரஜோ குணத்தின்பாற் பட்டது. அதனால் அவன் தியாகப் பயனை அடையமாட்டான். | 18.8. He who gives up a duty because it is painful or from fear of physical suffering, performs only the relinquishment of the "passionate” kind and does not gain the reward of relinquishment. |
| 18.9. நியமத்துக் கிணங்கிய செய்கையை, 'இது செய்தற்குரியது' என்னு மெண்ணத்தால் செய்து, அதில் *ஒட்டுதலையும் பயன் வேண்டலையும் ஒருவன் விட்டுவிடுவானாயின் அவனுடைய தியாகமே சாத்விகம் எனப்படும். (*ஒட்டுதல் = விருப்பம்) | 18.9. But he who performs a prescribed duty as a thing that ought to be done, renouncing all attachment and also the fruit-his relinquishment is regarded as one of "goodness." |
| 18.10. சத்வ குணத்திலிசைந்து, மேதாவியாய் ஐயங்களையறுத்த தியாகி இன்பமுற்ற செய்கையைப் | 18.10. The wise man, who renounces, whose doubts are dispelled, whose nature is of goodness, has no aversion to |

| | |
|---|---|
| பகைப்பதில்லை; இன்பமுடைய செய்கையில் *நசையுறுவதில்லை. (*நசை = பற்றுதல்.) | disagreeable action and no attachment to agreeable action. |
| 18.11. (மேலும்) உடம்பெடுத்தவனால் செய்கைகளை முழுதுமே விட்டுவிட முடியாது. எவன் செய்கைகளின் பயனைத் துறக்கிறானோ, அவனே தியாகி யெனப்படுவான். | 18.11. It is indeed impossible for any embodied being to abstain from work altogether. But he who gives up the fruit of action, he is said to be the relinquisher. |
| 18.12. வேண்டப்படாதது, வேண்டப்படுவது, இரண்டும் கலப்பானது என மூன்று வகைப்பட்ட கர்மப் பயன்களைத் தியாகிகளல்லாதோர் இறந்த பின்னர் எய்துகின்றனர். சந்நியாசிகளுக்கு எங்கும் பயன் கிடைப்பதில்லை. | 18.12. Pleasant, unpleasant and mixed-threefold is the fruit of action accruing after death to those who have not relinquished: there is none whatever for those who have renounced. |
| 18.13. எல்லாச் செயல்களும் நிறைவேறுதற்குரிய காரணங்கள் சாங்கிய சாஸ்திரத்தில் ஐந்தாகக் கூறப்பட்டன. அவற்றை என்னிடம் கேட்டுணர், பெருந்தோளாய்! | 18.13. O Mighty-armed (Arjuna), learn of Me, these five factors, for the accomplishment of all actions, as stated in the Sāṃkhya doctrine. |
| 18.14. அவை* இடம், கர்த்தா, பலவிதக் கரணங்கள், வெவ்வேறு வகைப்பட்ட செயல் முறைகள், இயற்கை என ஐந்து. (*கர்த்தா = தொழில் செய்வோன்; கரணம் = கருவி. உட்கரணங்களாவன: மனம், புத்தி, சித்தம், அகங்காரம்; புறக்கரணங்கள் புலன்களும் பூதக் | 18.14. The seat of action and likewise the agent, the instruments of various sorts, the many kinds of efforts and providence being the fifth. |

| | |
|---|---|
| கருவிகளுமாம், "தைவம்" இயற்கை.) | |
| 18.15. மனிதன் உடம்பாலும், வாக்காலும், மனத்தாலும் எந்தச் செயலைத் தொடங்கினாலும், அது நியாயமாயினும், விபரீதமாயினும், இவ்வைந்துமே அச்செயலின் ஏதுக்களாம். | 18.15. Whatever action a man undertakes by his body, speech or mind, whether it is right or wrong, these five are its factors. |
| 18.16. இங்ஙனமிருக்கையில் தனிப் பொருளாகிய ஆத்மாவைத் தொழில் செய்வோனாக எவன் புத்திக் குறைவால் காணுகிறானோ, அந்த மூடன் காட்சியற்றவனேயாவான். | 18.16. Such being the case, the man of perverse mind who, on account of his untrained understanding, looks upon himself as the sole agent, he does not see (truly). |
| 18.17. 'நான்' எனுங் கொள்கை தீர்ந்தான், பற்றுதல்கள் அற்ற மதியுடையான். அவன் இவ்வுலகத்தாரை யெல்லாங் கொன்ற போதிலும் கொலையாளியாகான், கட்டுப்பட மாட்டான். | 18.17. He who is tree from self-sense, whose understanding is not sullied, though he slay these people, he slays not nor is he bound (by his actions). |
| 18.18. அறிவு, அறியப்படு பொருள், அறிவோன் -- என இம்மூன்றும் செயல்களைத் தூண்டுவன. கருவி, செய்கை, கர்த்தா எனக் கர்மத்தின் சமைப்பு மூன்று பகுதிப் பட்டது. | 18.18. Knowledge, the object of knowledge and the knowing subject, are the threefold incitement to action: the instrument,<br>the action and the agent are the threefold composite of action. |
| 18.19. குணங்களை யெண்ணுமிடத்தே, ஞானம், கர்மம், கர்த்தா, இவை குணபேதங்களால் இம்மூன்று வகைப்படும். அவற்றை உள்ளபடி கேள். | 18.19. Knowledge, action and the agent are said, in the science of modes, to be of three kinds only, according to difference in the modes. Hear thou duly of these also. |

| | |
|---|---|
| 18.20. பிரிவுபட்டு நிற்கும் எல்லா உயிர்களிலும் பிரிவற்ற நாசமற்ற ஒரே இயல்பைக் காணும் ஞானம் சாத்வீகமென்றறி. | 18.20. The knowledge by which the one Imperishable Being is seen in all existences, undivided in the divided, know that that knowledge is of "goodness." |
| 18.21. உயிர்களனைத்திலும் வெவ்வேறு வகைப்பட்ட பல இயல்புகள் இருப்பதாகப் பிரித்துக் காணும் ஞானம் ராஜச மென்றுணர். | 18.21. The knowledge which sees multiplicity of beings in the different creatures, by reason of their separateness, know that that knowledge is of the nature of "passion." |
| 18.22. காரணங் கருதாமல், யாதேனும் ஒன்றறைக் காரியத்தை அனைத்துமாகக் கருதிப் பற்றுத லெய்துவதும், உண்மையிலறியாததும், அற்பத் தன்மையுடையது ஆகிய ஞானம் தாமசமென்று கூறப்படும். | 18.22. But that which clings to one single effect as if it were the whole, without concern for the cause, without grasping the real, and narrow is declared to be of the nature of 'dullness.' |
| 18.23. பயன்களை வேண்டாதா நொருவன் பற்றுதலின்றி, விருப்பு வெறுப்பின்றிச் செய்யும் விதி தழுவிய செய்கை சாத்விக மெனப்படும். | 18.23. An action which is obligatory, which is performed without attachment, without love or hate by one undesirous of fruit, that is said to be of "goodness." |
| 18.24. விருப்பங்களுக்கு வசப்பட்டவனால் அல்லது அகங்காரமுடையவனால் செய்யப்படும் மிகுந்த ஆயாசத்துக் கிடமான செய்கை ராஜச மெனப்படும். | 18.24. But that action which is done in great strain by one who seeks to gratify his desires or is impelled by self-sense, is said to be of the nature of "passion." |
| 18.25. செய்கையின் பின் விளைவையும், அதனால் பிறருக்கு நேரக்கூடிய | 18.25. The action which is undertaken through ignorance, without regard to consequences or to loss and injury and |

| | |
|---|---|
| நாசத்தையும் துன்பத்தையும் செய்வானது திறமையையும் கருதாமல், அறிவின்மையால் தொடங்கப்படும் கர்மம் தாமசமெனப்படும். | without regard to one's human capacity, that is said to be of, “dullness. " |
| 18.26. நசைகளற்றான், நானென்ப தற்றான் உறுதியுங் களிதரும் ஊக்கமு முடையான், வெற்றி தோல்வியில் வேறுபா டற்றான் - இங்ஙன மாகித் தொழில்க ளியற்றுவோன் ஒளியியல் யுடையானென்ப. | 18.26. The doer who is free from attachment, who has no speech of egotism, full of resolution and zeal and who is unmovedby success or failure-he is said to be of the nature of "goodness " |
| 18.27. வேட்கையுடையோன், செய்கைப் பயன்களை விரும்புவோன், லோபி, இடர் செய்வோன், தூமையற்றோன், களிக்குந் துயிலுக்கும் வசபட்டோன் இவ்வண்ணமாகித் தொழில் செய்வோன் ரஜோ குணத்தானென்பர். | 18.27. The doer who is swayed by passion, who eagerly seeks the fruit of his works, who is greedy, of harmful nature, impure, who is moved by joy and sorrow-he is said to be of "passionate" nature. |
| 18.28. யோக நிலை பெறாதோன், அநாகரிகன், முரடன், வஞ்சகன், பொறாமை யுடையோன், சோம்பேறி, ஏக்கம் பிடித்தவன், காலத்தை நீடித்துக் கொண்டே போவோன் -- இவ்வண்ணமாகித் தொழில் செய்வோன் தமோ குணமுடையர் எனப்படுவான். | 18.28. The doer who is unbalanced, vulgar, obstinate, deceitful, malicious, indolent, despondent and procrastinating he is said to be of the nature of “dullness." |
| 18.29. குண வகையால் மூன்று விதமாகிய புத்தியின் வேற்றுமைகளையும், மிச்சமின்றிப் | 18.29. Hear now the threefold distinction of understanding as also of steadiness, O winner of wealth (Arjuna), according to the modes, to be set forth fully and separately. |

| | |
|---|---|
| பகுத்துரைக்கிறேன் தனஞ்ஜயா! கேள். | |
| 18.30. தொழிலெது, ஒழிவு யாது, செய்யத் தக்கது யாது, தகாதது யாது, அச்சமெது, அஞ்சாமை யெது, பந்தமெது, விடுதலையெது -- என்பவற்றைப் பகுத்தறியும் புத்தியே, பார்த்தா! சாதிவிக புத்தியாம். | 18.30. The understanding which knows action and non-action, what ought to be done and what ought not to be done, what is to be feared and what is not to be feared, what binds and what frees the soul (that understanding), O Pārtha (Arjuna), is of the nature of "goodness." |
| 18.31. தர்மத்தையும் அதர்மத்தையும் காரியத்தையும் அகாரியத்தையும் உள்ளபடி அறியாத புத்தி ராஜச மெனப்படும், பார்த்தா! | 18.31. That by which one knows in a mistaken way the right and the wrong, what ought to be done and what ought not to be done-that understanding, O Pārtha (Arjuna) , is of the nature of "passion." |
| 18.32. பார்த்தா! இருளால் கவரப்பட்டதாய், அதர்மத்தை தர்மமாகக் கருதுவதும் எல்லாப் பொருள்களையும் நேருக்கு மாறாகக் காண்பதும் ஆகிய புத்தி தாமச புத்தியாம். | 18.32. That which, enveloped in darkness, conceives as right what is wrong and sees all things in a perverted way (contrary to the truth), that understanding, O Pārtha (Arjuna), is of the nature of "dullness" |
| 18.33. மனம், உயிர், புலன்கள் இவற்றின் செயல்களைப் பிறழ்ச்சியில்லாத யோகத்துடன் தரிக்க வல்லதாகிய மன உறுதியே சாத்விகமாவது, பார்த்தா! | 18.33. The unwavering steadiness by which, through concentration, one controls the activities of the mind, the life breaths and the senses, that, O Pārtha (Arjuna), is of the nature of "goodness." |
| 18.34. பார்த்தா! பற்றுத லுடையோனாய்ப் பயன்களை விரும்புவோன் அறம் பொருளின்பங் களைப் | 18.34. The steadiness by which one holds fast to duty, pleasure and wealth desiring the fruit in consequence thereof-that, O Pārtha (Arjuna), is of the nature of "passion." |

| | |
|---|---|
| பேணுவதில் செலுத்தும் உறுதி ராஜச உறுதியாம். | |
| 18.35. பார்த்தா, உறக்கத்தையும், அச்சத்தையும், துயரத்தையும், ஏக்கத்தையும், மதத்தையும் மாற்றத் திறமையில்லாத மூட உறுதி தமோ குணத்தைச் சார்ந்தது. | 18.35. That steadiness by which a fool does not give up sleep, fear, grief, depression and arrogance, that, O Pārtha (Arjuna),<br>is of the nature of dullness. |
| 18.36. பாரதக் காளையே! இப்போது மூன்று விதமாகிய இன்பங்களைச் சொல்லுகிறேன், கேள். எதனிலே ஒருவன் பயிலப் பயில உவகை மிகுதியுறப் பெறுவானோ, எதனில் துக்க நாச மெய்துவானோ, | 18.36. And now hear from Me, O Best of the Bharatas (Arjuna), the three kinds of happiness, That in which a man comes to rejoice by long practice and in which he reaches the end of his sorrow. |
| 18.37. எது தொடக்கத்தில் விஷத்தை யொத்ததாய் விளைவில் அமிர்த மொப்ப மாறுவதோ, அந்த இன்பமே சாத்விகமாகும்; அஃது தன் மதியின் விளக்கத்திலே பிறப்பது. | 18.37. That happiness which is like poison at first and like nectar at the end, which springs from a clear understanding<br>of the Self is said to be of the nature of "goodness." |
| 18.38. விஷயங்களிலே புலன்களைப் பொருத்துவதனால் தொடக்கத்தில் அமுதைப் போலிருந்து விளைவில் நஞ்சு போன்றதாய் முடியும் இன்பம் ராஜச மெனப்படும். | 18.38. That happiness which arises from the contact of the senses and their objects and which is like nectar at first but like poison at the end-such happiness is recorded to be “passionate. " |
| 18.39. தொடக்கத்திலும் இறுதியிலும் ஒருங்கே ஆத்மாவுக்கு மயக்கம் விளைப்பதாய், உறக்கத்தினின்றும் சோம்பரினின்றும் | 18.39. That happiness which deludes the soul both at the beginning and at the end and which arises from sleep, sloth and negligence-that is declared to be of the nature of “dullness. " |

| | |
|---|---|
| தவறுதலினின்றும் பிறக்கும் இன்பம் தாமசமென்று கருதப்படும். | |
| 18.40. இயற்கையில் தோன்றும் இம் மூன்று குணங்களினின்றும் விடுபட்ட உயிர் மண்ணுலகத்திலுமில்லை; வானுலத்தில் தேவருள்ளேயுமில்லை. | 18.40. There is no creature either on earth or again among the gods in heaven, which is free from the three modes born of nature. |
| 18.41. பரந்தபா! பிராம்மணர் க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் இவர்களுடைய தொழில்கள் அவரவரின் இயல்பில் விளையும் குணங்களின்படி வகுப்புற்றனவாம்; | 18.41. Of Brāhmins, of Kṣatriyas, and Vaiśyas as also of Śūdras, O Conqueror of the foe (Arjuna), the activities are distinguished, in accordance with the qualities born of their nature. |
| 18.42. அகக் கரணத்தை யடக்குதல், புறக் கரணத்தை யடக்குதல், தவம், தூய்மை, பொறுமை, நேர்மை, ஞானம், கல்வி, ஆத்திகம் -- இவை இயல்பிலே தோன்றும் பிராம்மண கர்மங்களாகும். | 18.42. Serenity, self-control, austerity, purity, forbearance and uprightness, wisdom, knowledge and faith in religion, these are the duties of the Brāhmin, born of his nature. |
| 18.43. சூரத் தன்மை, ஒளி, உறுதி, திறமை, போரில் புறங்காட்டாமை, ஈகை; இறைமை -- இவை இயற்கையிலே தோன்றும் க்ஷத்திரிய கர்மங்களாம். | 18.43. Heroism, vigour, steadiness, resourcefulness, not fleeing even in a battle, generosity and leadership, these are the duties of a Kṣatriya born of his nature. |
| 18.44. உழவு, பசுக் காத்தல், வாணிகம் இவை இயற்கையிலே பிறக்கும் வைசிய கர்மங்களாம். தொண்டு புரிதல் சூத்திரனுக்கு அவனியற்கையாய் ஏற்பட்ட தொழில். | 18.44. Agriculture, tending cattle and trade are the duties of a Vaiśya born of his nature; work of the character of service is the duty of a Śūdra born of his nature. |

| | |
|---|---|
| 18.45. தனக்கு, தனக்குரிய கர்மத்தில் மகிழ்ச்சியுறும் மனிதன் ஈடேற்றம் பெறுகிறான். தனக்குரிய தொழிலில் இன்புறுவோன் எங்ஙனம் சித்தி யடைகிறானென்பதை சொல்லுகிறேன், கேள். | 18.45. Devoted each to his own duty man attains perfection. How one, devoted to one's own duty, attains perfection, that do thou hear. |
| 18.46. உயிர்களுக்கெல்லாம் பிறப்பிடமாய், இவ்வையகமனைத்திலும் நிறைந்திருக்கும் கடவுளைத் தனக்குரிய கர்மத்தால் பூஜை செய்யும் மனிதன் ஈடேறுகிறான். | 18.46. He from whom all beings arise and by whom all this is pervaded-by worshipping Him through the performance of his own duty does man attain perfection. |
| 18.47. பிறர்க்குரிய தர்மத்தை நன்கு செய்வதைக் காட்டிலும் தனக்குரிய தர்மத்தை குணமின்றி செய்தலும் நன்று. இயற்கையிலேற்பட்ட தொழிலைச் செய்வதனால் ஒருவன் பாவ மடைய மாட்டான். | 18.47. Better is one's own law though imperfectly carried out than the law of another carried out perfectly. One does not incur sin, when one does the duty ordained by one's own nature. |
| 18.48. குந்தி மகனே! இயல்பான தொழில் குறையுடையதாயினும் அதைக் கைவிடலாகாது. தீயைப் புகை சூழ்ந்திருப்பது போல் எல்லாத் தொழில்களையும் குறைகள் சூழ்ந்தே நிற்கின்றன. | 18.48. One should not give up the work suited to one's nature, O Son of Kuntī (Arjuna), though it maybe defective, for all enterprises are clouded by defects as fire by smoke. |
| 18.49. யாங்கணும் வீழ்விலா மதியுடையோனாய், தன்னை வென்று விருப்பந் தவிர்த்து பின்னர்ச் செயலிலாப் பெரிதுயர்ந்த வெற்றியைத் துறவினால் எய்துவான். | 18.49. He whose understanding is unattached everywhere, who has subdued his self and from whom desire has fled-he comes through renunciation to the supreme state transcending all work. |

| | |
|---|---|
| 18.50. சித்தி யடைந்தவன் எங்ஙனம் பிரம்மத்தில் கலப்பதாகிய மிகச் சிறந்த ஞான நிலை யெய்துவானென்பதைக் கூறுகிறேன், கேள். | 18.50. Hear from me, in brief, O Son of Kuntī (Arjuna), how, having attained perfection, he attains to the Brahman; that supreme consummation of wisdom. |
| 18.51. தூய்மை பெற்ற புத்தியுடையவனாய், உறுதியால் தன்னைக் கட்டுப்படுத்தி, ஒலி முதலிய விஷயங்களைத் துறந்து, விருப்பு வெறுப்புகளை எறிந்துவிட்டு, | 18.51. Endowed with a pure understanding, firmly restraining oneself, turning away from sound and other objects of sense and casting aside attraction and aversion. |
| 18.52. தனி இடங்களை நாடுவோனாய், ஆசைகள் குன்றி வாக்கையும் உடம்பையும் மனத்தையும் வென்று தியான யோகத்தில் ஈடுபட்டு, எப்போதும் பற்றின்மையை நன்கு பற்றியவனாய், | 18.52. Dwelling in solitude, eating but little, controlling speech, body and mind, and ever engaged in meditation and concentration and taking refuge in dispassion .. |
| 18.53. அகங்காரம், வலிமை, செருக்கு, காமம், சினம், இரத்தல் -- இவற்றைவிட்டு, *மமகாரம் நீங்கி, சாந்த நிலை கொண்டவன் பிரம்மமாகத் தகுவான். (*மமகாரம் = உடைமையுணர்ச்சி) | 18.53. And casting aside self-sense, force, arrogance, desire, anger, possession, egoless and tranquil in mind, he becomes worthy of becoming one with Brahman. |
| 18.54. பிரம்மநிலை பெற்றோன், ஆனந்த முடையோன், துயரற்றோன், விருப்பற்றோன், எல்லா உயிர்களையும் சமமாக நினைப்போன், உயர்ந்ததாகிய என் பக்தியை அடைகிறான். | 18.54. Having become one with Brahman, and being tranquil in spirit, he neither grieves nor desires. Regarding all beings as alike he attains supreme devotion to Me. |
| 18.55. யான் எவ்வளவுடையோன், யாவன் என என்னையொருவன் | 18.55. Through devotion he comes to know Me, what My |

| | |
|---|---|
| உள்ளபடி பக்தியாலே அறிகிறான். என்னை உள்ளபடி அறிந்துகொண்ட பின்னர் 'தத்' (அது) எனப்படும் பிரம்மத்தில் புகுவான். | measure is and who I am in truth; then, having known Me in truth, he forthwith enters into Me. |
| 18.56. எல்லாத் தொழில்களையும் எப்போதும் செய்து கொண்டிருந்தாலும், என்னையே சார்பாகக் கொண்டோன் எனதருளால் அழிவற்ற நித்திய பதவியை எய்துகிறான். | 18.56. Doing continually all actions whatsoever; taking refuge in Me, he reaches by My grace the eternal, undying abode. |
| 18.57. அறிவினால் செயல்களையெல்லாம் எனக்கெனத் துறந்துவிட்டு, என்னிடத்தே ஈடுபட்டு, புத்தி யோகத்தில் சார்புற்று, எப்போதும் என்னைச் சித்தத்தில் கொண்டு இரு. | 18.57. Surrendering in thought all actions to Me, regarding Me as the Supreme and resorting to steadfastness in understanding, do thou fix thy thought constantly on Me. |
| 18.58. என்னை சித்தத்தில் கொண்டிருப்போனாய் எல்லாத் தடைகளையும் எனதருளால் கடந்து செல்வாய், அன்றி நீ அகங்காரத்தால் இதனைக் கேளாது விடுவாயெனில் பெரிய நாசத்தை அடைவாய். | 18.58. Fixing thy thought on Me, thou shalt, by My grace, cross over all difficulties; but if, from self-conceit, thou wilt not listen (to Me), thou shalt perish. |
| 18.59. நீ அகங்காரதிலகப்பட்டு, "இனிப் போர் புரியேன்" என்ற துணிவு பொய்மைப்பட்டுப் போம். இயற்கை உன்னைப் போரிற் பிணிக்கும். | 18.59. If indulging in self-conceit, thou thinkest “I will not fight." vain is this, thy resolve. Nature will compel thee. |
| 18.60. இயற்கையில் தோன்றிய ஸ்வகர்மத்தால் கட்டுண்டிருக்கும் | 18.60. That which, through delusion, thou wishest not to do, |

| | |
|---|---|
| நீ மயக்கத்தால் அதனைச் செய்ய விரும்பாயெனினும், தன் வசமின்றியேனும் அதைச் செய்யலாவாய். | O son of Kuntī (Arjuna) , that thou shalt do even against thy will, fettered by thy own acts born of thy nature. |
| 18.61. அர்ஜுனா! எல்லா உயிர்களுக்கும் ஈசன் உள்ளத்தில் நிற்கிறான்; மாயையால் அவன் எல்லா உயிர்களையும் சக்கரத்திலேற்றிச் சுழற்றுகிறான். | 18.61. The Lord abides in the hearts of all beings, O Arjuna, causing them to turn round by His power as if they were mounted on a machine. |
| 18.62. பாரதா! எல்லா வடிவங்களும் அவனையே சரணெய்து. அவனருளால் பரம சாந்தியாகிய நித்திய ஸ்தானத்தை எய்துவாய். | 18.62. Flee unto Him for shelter with all thy being, O Bhārata (Arjuna). By His grace shalt thou obtain supreme peace and eternal abode. |
| 18.63. இங்ஙனம் ரகசியத்தாலும் ரகசியமாகிய ஞானத்தை உனக்குரைத்தேன். இதனை முற்றிலும் ஆராய்ச்சி செய்து எப்படி இஷ்டமோ அப்படிச் செய். | 18.63. Thus has wisdom more secret than all secrets, been declared to thee by Me. Reflect on it fully and do as thou choosest. |
| 18.64. மீண்டுமொருமுறை எல்லாவற்றிலும் ஆழ்ந்த ரகசியமாகிய எனது பரம வசனத்தைக் கேள். நீ திடமான நண்பன் ஆதலால் உனக்கு ஹிதத்தைச் சொல்லுகிறேன். | 18.64. Listen again to My supreme word, the most secret of<br>all. Well beloved art thou of Me! therefore I shall tell thee<br>what is good for thee. |
| 18.65. உன் மனத்தை எனக்காக்குக. என் தொண்டனாகுக. என்னை யெய்துவாய். உண்மை இஃதே. உனக்கிது சபதமுரைக்கிறேன். நீ எனக்கினியை. | 18.65. Fix thy mind on Me; be devoted to Me; sacrificeto Me; prostrate thyself before Me; so shalt thou come to Me. I promise thee truly, for thou art dear to Me. |
| 18.66. எல்லா அறங்களையும் விட்டுவிட்டு என்னயே சரண் புகு. எல்லாப் பாவங்களினின்றும் நான் | 18.66. Abandoning all duties, come to Me alone for shelter. Be not grieved, for I shall release thee from all evils. |

| | |
|---|---|
| உன்னை விடுவிக்கிறேன், துயரப்படாதே. | |
| 18.67. இதை எப்போதும் தவமிலாதோனுக்கும், பக்தியில்லாதோனுக்கும், கேட்க விரும்பாதோனுக்கும், என்பால் பொறாமை யுடையோனுகும் சொல்லாதே. | 18.67. Never is this to be spoken by thee to one who is not austere in life or who has no devotion in him or who is not obedient or who speaks ill of Me. |
| 18.68. இந்தப் பரம இரகசியத்தை என் பக்தர்களிடையே சொல்வேன். என்னிடத்தே பரம பக்தி செலுத்தி என்னையே எய்துவான்; ஐயமில்லை. | 18.68. He who teaches this supreme secret to My devotees, showing the highest devotion to Me, shall doubtless come to Me. |
| 18.69. மானுடருக்குள்ளே, அவனைக் காட்டிலும் எனக்கினிமை செய்வோன் வேறில்லை. உலகத்தில் அவனைக் காட்டிலும் எனக்கு உகந்தவன் வேறெவனுமாகான். | 18.69. There is none among men who does dearer service to Me than he; nor shall there be another dearer to Me in the world. |
| 18.70. நம்முடைய இந்தத் தர்மமயமான சம்பாஷணையை எவன் படிப்பானோ, அவன் செய்யும் அந்த ஞான யக்ஞத்தால் நான் திருப்தி பெறுவேன்; இஃதென் கொள்கை. | 18.70. And he who studies this sacred dialogue of ours, by him I would be worshipped through the sacrifice of knowledge, so I hold. |
| 18.71. நம்புதல் கொண்டு, பொறாமை போக்கி, இதனைக் கேட்பது மட்டுமே செய்வானெனினும், அவனும் விடுதலையடைவான். அப்பால் புண்ணியச் செயலினர் நண்ணும் நல்லுலகங்க ளெய்துவான். | 18.71. And the man who listens to it with faith and without scoffing, even he, being liberated, shall attain to the happy worlds of the righteous. |

| | |
|---|---|
| 18.72. பார்த்தா! சித்தத்தை ஏகாந்தமாக்கி இதை நீ கேட்டு வந்தனையா? தனஞ்ஜயா, உன் அஞ்ஞான மயக்கம் அழிந்ததா? அர்ஜுனன் சொல்லுகிறான்: | 18.72. O Pārtha (Arjuna), has this been heard by thee with thy thought fixed to one point? O Winner of wealth (Arjuna), has thy distraction (of thought) caused by ignorance been dispelled? |
| 18.73. மயக்க மழிந்தது நின்னருளாலே அச்சுதா! நான் நினைவு அடைந்தேன்; ஐயம் விலகி நிற்கிறேன்; நீ செய்யச் சொல்வது செய்வேன். சஞ்ஜயன் சொல்லுகிறான்: | 18.73. Arjuna said:<br>Destroyed is my delusion and recognition has been Gained by me through Thy grace, O Acyuta (Kṛṣṇa), I stand firm with my doubts dispelled, I shall act according to Thy word. |
| 18.74. இப்படி நான் வாசுதேவனுக்கும் மகாத்மாவாகிய பார்த்தனுக்கும் நிகழ்ந்த அற்புதமான -- புளகந் தரக்கூடிய -- அந்த சம்பாஷணையைக் கேட்டேன். | 18.74. Saṁjaya said:<br>Thus have I heard this wonderful dialogue between Vāsudeva (Kṛṣṇa) and the high-souled Pārtha (Arjuna) causing my hair to stand on end. |
| 18.75. யோகக் கடவுளாகிய கண்ணன் இந்தப் பரம ரகசியமான யோகத்தைத் தான் நேராகவே சொல்லும்போது நான் அதை வியாசனருளால் கேட்டேன். | 18.75. By the grace of Vyāsa, I heard this supreme secret, this yoga taught by Kṛṣṇa himself, the Lord of yoga, in person |
| 18.76. அரசனே! கேசவார்ஜுனரின் வியப்புக்குரிய புண்ய சம்பாஷணையை நினைத்து நினைத்து, நான் மீண்டும் மீண்டும் களிப்பெய்துகிறேன். | 18.76. O King, as I recall again and again this dialogue, wondrous and holy; of Kesava (Kṛṣṇa) and Arjuna, I thrill with joy again and again. |
| 18.77. அரசனே! ஹரியின் மிகவும் அற்புதமான அந்த ரூபத்தை நினைத்து நினைத்து எனக்குப் பெரிய ஆச்சரிய முண்டாகிறது! | 18.77. And as often as I recall that most wondrous form of Hari (Kṛṣṇa), great is my astonishment, O King, and I thrill<br>with joy again and again. |

| | |
|---|---|
| மீண்டும் மீண்டும் களிப்படைகிறேன். | |
| 18.78. கண்ணன் யோகக் கடவுள், எங்குமுளன், வில்லினையேந்திய விஜயன் தன்னோடும், அங்கு திருவும் ஆக்கமும் வெற்றியும் நிலை தவறாத நீதியும் நிற்கும், | 18.78. Wherever there is Kṛṣṇa, the lord of yoga, and Pārtha (Arjuna), the archer, I think, there will surely be fortune, victory, welfare and morality. |
| Here ends the Bhagavadgita | |